தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

ஜூலை- 1999



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இன விடுதலையின் போர்க் குரல் எரிமலைக்கு, வணக்கம்.

கடிதத்தின் தாமதத்திற்கு நான் வெளியூர் சென்றது ஒரு காரணமே.

தங்களின் ஜனவரி இதழும் அற்புதமான நாட்காட்டியும் கிடைக்கப் பெற்றேன்.

உலக தமிழ் இனத்தின் ஒப்பற்ற தலைவனின் வண்ணப்படம் தாங்கி நின்ற நாட்காட்டி,

மறைந்து போன புலிவீரர்களின் மரியாதை செலுத்திய நாட்காட்டி,

பெண் புலிகள் பேராற்றலை உலகுக்கு காட்டும் பெருமை பெற்ற நாட்காட்டி,

நெடு நாட்களுக்குப் பிறகு விக்டரின் புகைப்படத்தோடும், கிட்டண்ணாவின் புகைப்படமும்,

தியாக தீபம் திலீபன் உண்ணா விரத துவக்கமும் இந்தியாவின் துரோகத்தனத்தால் சிதைந்துபோன அந்த தியாக உருவத்தின் மரணப் படுக்கையும் கண்களில் நீர் வர வழைத்தது.

எரிமலையே தமிழகத்தில் ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டு வந்த புலி ஆதரவு என்பது எவனாலும் அடக்கமுடியாத நீறுபூத்த நெருப்பாக கனன்று கொண்டே தான் இருக்கும் என்பதை மதுரைமாநாடு நிரூபித்தது. நான் மற்றும் 25 தோழர்களோடு மதுரை ஈழத்தமிழர் எழுச்சி மாநாட்டில் பங்கு பெற்றோம்.

என்னென்றும் புலிகளின் உரிமை போரில் உங்களோடு நானும்.

பெப்ரவரி எரிமலையின்

தாலையங்கத்தில் தாங்கள் குறிப்பிட்டிருந்தபடி இக் கொடுங்கோல் அரசை அம்பலப்படுத்த புகலிடத் தமிழர்கள் தொடர் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டிருந்தீர்கள். தாயகத் தமிழர்களும் தங்களின் வேண்டுகோளை ஏற்று இயன்ற வரை போராடுவோம் எனவும் உறுதி கூறுகின்றோம்.

அன்புடன்
பா.சாந்தகுமார்
கோவை
தமிழ்நாடு
இந்தியா

★★★




# அக்கறைப்பூக்கள்

பேரன்புடையீர் எரிமலை ஆசிரியர் குழுமத்திற்கு வணக்கம்.

தமிழகத்தில் ஜோலார்பேட்டை அடுத்த பால்னாங்குப்பம் கிராமத்தில் வசித்து வருகிறோம். தங்கள் எரிமலை வெளியீடு பற்றி ஜோலார்பேட்டையில் வசிக்கும் திருமதி அற்புதம் குயில்தாஸன் மூலம் அறிந்து, இதுநாள் வரையில் அவரிடமிருந்து எரிமலை நூல் பெற்று படித்துவந்தோம்.

ஏலகிரி மலை அடிவாரத்தில் இருக்கும் எங்கள் கிராமத்தில் "வாசகர் வட்டம்" என்ற பெயரில் சிறு நூலகம் ஒன்றை ஏற்படுத்தி, படித்த கிராம இளைஞர்கள் பயின்று வருகிறோம்.

ஈழத்தில் எம் தமிழ் மக்கள் படும் துன்பங்களையும், துயரங்களையும், சிங்கள பேரினவாத இராணுவம் செய்யும் அடக்குமுறை, அட்டூழியங்களையும், எம் மக்களின் வாழ் நிலையினையும் இந்நூல் மூலம் தெளிவாக அறிந்து கொள்கிறோம். தமிழர்களின் வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், மொழியியல் பற்றியும், புரட்சிகர கவிதைகளையும் வரவேற்று படித்து வருகிறோம். ஈழத்தில் எம் மக்கள் படும் வேதனைகள் என்று தீரும், அவர்களுக்கு எங்களால் எந்த வகையில் உதவ முடியும் என வேதனைப்படுகிறோம். ஏதாவது செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

இக்காலகட்டத்தில் ஈழத்தில் நடப்பவைகளை தெளிவாக அறிந்து கொள்ளும் வகையில் எங்களுக்கு தனியாக கீழ்குறித்த முகவரிக்கு எரிமலை தனிப்பிரதியொன்று அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தங்களின் பேராதரவினை வெகு ஆவலுடன் எதிர்நோக்கும் தமிழ் நெஞ்சங்கள். தங்களின் அயராத பணிக்கு எங்கள் வீர வாழ்த்துக்கள். தங்களின் பதில் மடலினை எதிர் நோக்கும்.

அன்பன்
க.சிவக்குமார்
பால்னாங்குப்பம் கிராமம்
தமிழ்நாடு

★★★

எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

உணர்ச்சிகளின் ஊற்றாய், உண்மையின் வெளிப்பாடாய், தமிழர் வாழ்வின் நிதர்சனமாய், போர் முரசாய், தமிழீழத்தின் போராட்ட கள நிலமைகளையும், வாழ்வின் போராட்டங்களையும் துல்லியமாகவும், தெளிவாகவும் வெளியிட்டு எங்களின் உணர்வுகளுக்கு உயிரோட்டமாய் திகழும் எரிமலை இதழுக்கு எமது நன்றியையும் கடப்பாற்றினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தன்னலம், காட்டிக் கொடுத்தல், தோல்வி மனப்பான்மை, பாமரத்தனம் இவற்றிக்கிடையே வாழும் எம் போன்ற தமிழக தமிழர்களுக்கு இந்திய முதலாளித்துவ பொய்ப் பிரச்சார செய்தியூடகங்களின் செய்தி மேலும் அறியாமையில் ஆழ்த்துகின்றது. எரிமலைதான் ஒளிவிளக்காக உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. எரிமலையின் நடையாழ் தமிழில் இருப்பது சில இடங்களில் பொருள் விளங்கிக் கொள்வது சிரமமாகவுள்ளது.

தன்னலமற்ற ஓர் ஒப்பற்ற தலைவரின் தலைமையின் கீழ் தமிழீழ விடுதலைக்காக எந்த ஈகத்தையும் செய்யும் தம்பி தங்கைகளின் வீரமும் சுதந்திர தமிழீழ விடுதலைப்பற்றும் எங்களை வியப்பில் ஆற்றுகின்றது.

என்றும் தமிழுடன்
தமிழர் பண்பாட்டு மன்றம்
அக்ராவரம்
தமிழ்நாடு – இந்தியா



www.tamileelamarchive.com

# உள்ளே...



ஜெயசிக்குறுவின் தலைவிதியை நோக்கி... ரணகோச

பக்கம்– 05

கரும்புலி மாவீரரெல்லாம் சரித்திரவான்கள்

பக்கம்– 08





பக்கம் – 12



பக்கம் – 18



பக்கம் – 30


★ வெடியோசை... ........ பக்கம் – 12

★ ஆளனிப்பற்றாக்குறை சிறிலங்கா அரசுக்கு தீராத பிரச்சினை ........ பக்கம் – 18

★ இலங்கையில் ஜனநாயகம், அமைதி ........ பக்கம் – 24

★ தமிழ் மாணவர்களின் எதிர்காலம்? ........ பக்கம் – 30

★ சிறுகதை ........ பக்கம் – 40

★ சிறுகதை ........ பக்கம் – 46




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ஒரு விடுதலை வீரனின் சாவு ஒரு சாதாரண மரண நிகழ்வல்ல; அந்தச்சாவு ஒரு சரித்திர நிகழ்வு; ஒரு உன்னத இலட்சியம் உயிர்பெறும் அற்புதமான நிகழ்வு. உண்மையில் ஒரு விடுதலை வீரன் சாவதில்லை; அவனது உயிராக இயங்கிவந்த இலட்சிய நெருப்பு என்றுமே அணைந்துவிடுவதில்லை. அந்த இலட்சிய நெருப்பு ஒரு வரலாற்றுச்சக்தியாக மற்றவர்களைப் பற்றிக்கொள்கின்றது; ஒரு இனத்தின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிவிடுகின்றது.

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினெட்டாம் ஆண்டு
ஜூலை
1999

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# ஜூலையில் மட்டுமல்ல! இனி எந்நாளுமே...

ஜூலை மாதம் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றிருக்கிறது. 1983-ல் சிங்களப் பேரினவாதத்தின் கோரப்பற்கள் எமது மக்கள் மீது பதிந்ததும், அது சிங்களத்தை எதிர்த்துப் போராடும் மன எழுச்சியினை எம் மக்களின் மத்தியில் தோற்றுவித்ததும் இம் மாதத்தில்தான்.

1987-ல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்திய-தமிழீழப் போருக்கு விதை தூவப்பட்டதும் இம் மாதத்திலேதான். 1995-ல் சமாதானத்திற்கான யுத்தம் எனக்கூறி சிங்களம் நடத்திய யாழ் குடாநாட்டினைக் கைப்பற்றுவதற்கான முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையும், நவாலி தேவாலயம் மீதான சிங்களத்தின் குண்டுவீச்சுத் தாக்குதலும், சிங்களத்தின் படை நகர்வை முறியடித்த 'புலிப்பாய்ச்சல்' நிகழ்ந்ததும் இம் மாதத்திலேதான்.

1996-ல் விடுதலைப் புலிகள் வீழ்ந்தார்கள் எனச் சிங்களம் கொக்கரித்துக் கொண்டிருந்த போது சிங்களத்தையும் அனைத்துலகினையும் அதிரவைக்கும் வகையில் புலிகள் ஓயாதஅலைகளாகி முல்லைத்தீவினுள் பாய்ந்ததும் இம் மாதத்தில்தான்.

இவற்றைவிட....

எமது போராட்டத்தின் தடை அகற்றும் தேசத்தின் புயல்களாக வீசும் கரும்புலிகளில், முதற் கரும்புலியான கப்டன் மில்லர் காற்றோடு காற்றாகக் கலந்ததும் அவர் வீரச்சாவடைந்த நாளாக ஜூலை 5-ம் திகதி கரும்புலிகள் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டு நினைவு கூரப்படுவதும் இம்மாதத்திலேதான்.

இதனால் ஜூலை மாதம் என்றவுடன் சிங்களம் பெரும் பதட்டத்திற்குள்ளாகிவிடுகிறது. சிங்களத்தின் அரசியல் தலைமை முதல் படைத் தலைமை வரை தம்மைப் பாதுகாப்பிற்கு விஷேட திட்டங்களைத் தீட்டிக்கொள்கின்றன.

உண்மையில் ஆக்கிரமிப்பாளர்கள் எவருமே தமது சொந்த மண்ணில் கூட நிம்மதியாக வாழ்ந்தது இல்லை - இது உலக வரலாற்றுப் பாடம்.

தமிழீழம் மீதான சிங்களத்தின் ஆக்கிரமிப்பு நிறுத்தப்படும் வரை சிங்கள தேசமும் துயர் சுமந்த தேசமாக வாழவேண்டியிருக்கும் என்பதனை சிங்கள மக்களும் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்த் தேசத்தினை அடக்கி ஒடுக்கும்வரை சிங்கள தேசமும் தனது அடிமைத் தளைகளிலிருந்தும் விடுபட முடியாது என்பதனையும் சிங்கள தேசம் உணர்ந்துகொள்ள வேண்டும். இல்லாவிடின் ஜூலை மாதம் மட்டுமல்ல ஒவ்வொரு மாதமுமே சிங்களத் தலைமையின் பதட்டம் அதிகரிப்பதும், தோல்விக் கணக்கு சிங்களதேச வரலாற்றுப் புத்தகத்தினை நிரப்புவதும் தவிர்க்கமுடியாததாக இருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஜெயசிக்குறுவின் தலைவிதியை நோக்கி ரணகோச

"அவர்கள் (புலிகள்) எம்மை நகர்ப்புறத்தில் சந்திக்க முடியாவிட்டால், அவர்களின் கெரில்லா யுத்தமுறையைச் சந்திக்க அவர்களைத் தேடிக் காட்டுக்குச் செல்வோம்"

இது றொகான் தளுவத்தை சொன்னது. இப்போதல்ல, 1996–ம் ஆண்டு மேமாதம் சிறீலங்காவின் பதின்னான்காவது இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுக்கொண்ட கையுடன் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தது.

தற்போது தளுவத்தை இராணுவத் தளபதியாக இல்லை. அவர் கொழும்பில் இருந்துகொண்டு ஏதேதோ பணிகளையெல்லாம் ஏற்றுப்பார்க்கின்றார். ஜே.ஓ.சி, ஜே.ஓ.பி, ஜே.ஓ. எச்... இப்படியாக பல அமைப்புக்களையும் சிங்கள அரசு தலைமை உருவாக்கிப் பார்க்கின்றது. தற்போது அந்த அமைப்புக்களின் அதிகாரச் சிக்கலில்... யாருக்கு கட்டளையிடும் அதிகாரம் இருக்கின்றது என்ற பிணக்கில், ரத்வத்தை தளுவத்தை சந்திரிகா பிடுங்குப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்தில் விடுதலைப் புலிகளை வெற்றி கொள்ள உருவாக்கப்பட்ட கூட்டுப்படை நடவடிக்கைக் கட்டளையகம் (ஜே.ஓ.சி) பின்னர் கைவிடப்பட்டு... மீண்டும் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் தூசி தட்டிப் புதுப்பிக்கப்பட்டது.

அதுவும் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்திற்கு ஒத்துவரவில்லை. இராணுவம் கடற்படை விமானப்படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றிற்கு கட்டளைகளைப் பிறப்பித்து கூட்டாக ஒரு இலக்கை வெற்றிகொள்ள உருவாக்கப்பட்ட அந்த அமைப்பினாலும் எதுவும் முடியாமல் போய்விட்டது.



சில மாதங்களிலேயே ஜே.ஓ.சி கைவிடப்பட்டது. ஜே.ஓ.பி என்ற புதிய



www.tamileelamarchive.com

அமைப்பை சந்திரிகா உருவாக்கினார். தனது நேரடிக்கட்டுப்பாட்டில் இயங்கக்கூடியதாக அமைத்துக்கொண்ட இந்த அமைப்பின் பொறுப்பை தளுவத்தையிடம் சந்திரிகா கையளித்தார். அதுவும் விடுதலைப் புலிகளுடனான நடவடிக்கையில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

கடந்த ஜூன் மாதம் மீண்டும் ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் (ஜே.ஓ.எச்) என்று புதியபெயர், தளுவத்தையே அதன் தலைமை அதிகாரி. தளுவத்தைக்கு முப்படைகளையும் பொலிஸ் பிரிவையும் கட்டளையிடவும் கட்டுப்படுத்தவும் முழு அதிகாரம் வழங்கப்பட்டது. இது ரத்வத்தையை ஓரங்கட்ட சந்திரிகாவால் மேற்கொள்ளப்பட்ட திட்டம் என்பது இன்னொரு காரணமாக இருந்தபோதும் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள சிங்களம் மாற்றிமாற்றி உருவாக்கிக் கொள்ளும் அமைப்புக்களில் ஒன்றுதான் ஜே.ஓ.எச் என்பதும்.

தளுவத்தைக்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட்ட சில நாட்களிலேயே பூநகரிப்பகுதியைக் கைப்பற்ற பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஜூன் மாதம் 10–ம் திகதி அதிகாலை பரந்தன் பகுதியிலிருந்து பெருமளவிலான இராணுவத்தினர் பரந்தன் பூநகரி வீதியால் முன்னேற, மறுவளத்தே பலாலியில் இருந்து பல உலங்கு வானூர்திகளில் பெருந்தொகையான இராணுவத்தினை தரையிறக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டன. பல முனைகளில் சிங்களப்படையை எதிர்கொண்ட விடுதலைப் புலிகள், அந்த முயற்சியை முறியடித்தனர். சிங்களப்படையை அவற்றின் பழைய நிலைகளுக்கு அடித்துவிரட்டினர். இருபத்தைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், நூறுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர். ஆயுத இழப்பையும் சிங்களப்படை சந்தித்தது. இரு உலங்குவானூர்திகள் சேதப்படுத்தப்பட்டன.

அன்றே தளுவத்தையின் அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. இந்த இராணுவத் தோல்வி இதற்கு காரணமாக இருக்கவில்லை. சிறீலங்கா அரச பீடத்திற்கும் படைத் தலைமைகளுக்கும் இடையே, தளுவத்தைக்கு வழங்கப்பட்ட புதிய கட்டளையிடும் அதிகாரம் குறித்த பிடுங்குப்பாடுகளின் விளைவாக அவரது அதிகாரங்கள் களையப்பட்டு தற்போது அவர் சந்திரிகாவிற்கு ஆலோசனை வழங்கும் அதிகாரி நிலையில் வைக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் தம்மை நகர்ப்புறத்தில் சந்திக்க முடியாவிட்டால், அவர்களின் கெரில்லா யுத்த முறையைச் சந்திக்க அவர்களைத் தேடி காட்டுக்குச் செல்வோம் என, தளுவத்தையால் அன்று கூறிக்கொள்ள முடிந்தது. புதிய பதவி புதுமாப்பிள்ளைக் கணக்காய் ஒருவிதமான மிடுக்குடன் அள்ளி வழங்கிய வார்த்தை,

விடுதலைப்புலிகள் தம்மை நகர்ப்புறத்தில் சந்திக்க முடியாவிட்டால், அவர்களின் கெரில்லா யுத்த முறையைச் சந்திக்க அவர்களைத் தேடி காட்டுக்குச் செல்வோம் என, தளுவத்தையால் அன்று கூறிக்கொள்ள முடிந்தது. புதிய பதவி புதுமாப்பிள்ளைக் கணக்காய் ஒருவிதமான மிடுக்குடன் அள்ளி வழங்கிய வார்த்தை, ஆனால் யதார்த்தம் அதுவல்ல. விடுதலைப் புலிகளின் கெரில்லா யுத்த முறையைத் தேடி காட்டுக்குப் போன தளுவத்தையால் காட்டுக்குள் விடுதலைப் புலிகளின் மரபுப் போர் ஆற்றலை கண்டு திரும்பவேண்டிய பரிதாபம். இவரது காலத்திலேயே சிங்களம் என்றுமே மறக்கமுடியாத இராணுவ அவமானங்களைச் சுமந்திருக்கின்றது



**- சுப்பு -**



www.tamileelamarchive.com



ஆனால் யதார்த்தம் அதுவல்ல. விடுதலைப் புலிகளின் கெரில்லா யுத்த முறையைத் தேடி காட்டுக்குப் போன தளுவத்தையால் காட்டுக்குள் விடுதலைப் புலிகளின் மரபுப் போர் ஆற்றலை கண்டு திரும்பவேண்டிய பரிதாபம். இவரது காலத்திலேயே சிங்களம் என்றுமே மறக்கமுடியாத இராணுவ அவமானங்களைச் சுமந்திருக்கின்றது.

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையால் சிங்களம் பட்டுநொந்த பரிதாபம் இவரது காலத்திலேயே நடந்திருக்கின்றது. ஓயாத அலைகள் ஒன்றும் இரண்டும் முல்லைத்தீவையும் கிளிநொச்சியையும் மீட்டு தமிழன் வீரத்தை நிரூபித்துக்காட்டியதும் இவரது காலத்திலேதான். இவரது காலத்திலே என்பதைவிட எவரது காலத்திலும் இதுதான் விதி. இந்த இயற்கையின் சுழற்சிப் போக்கை தடுத்து நிறுத்த தளுவத்தையோ அல்லது ரத்வத்தையோ அல்லது யாராவது ஒரு வத்தையோ முயன்றாலும் முடியாது.

தளுவத்தை காலத்தில் முயன்று முடியாமல் போய் கைவிடப்பட்ட ஜெயசிக்குறுய் அநாதரவாய்... மேனி முழுவதும் வடு சுமந்து திமிர் அடங்கிக் கிடக்கின்றது. அதை அப்படியே கைவிட்டு, கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பதவி ஏற்றுக்கொண்ட புதிய இராணுவத் தளபதி சிறீலால் வீரசூரியா மேற்குப் புறத்தே தனது பார்வையைச் செலுத்தியிருக்கின்றார். மன்னார் பகுதியில் சிறிது சிறிதாக ஆக்கிரமிப்புக்களை நடத்தி நிலங்களை அபகரித்துச் செல்கின்றார். புதிய தளபதியின் இலக்கு, மன்னார் பூநகரிப்பாதையை இணைத்து பரந்தனை இணைத்து தரைப்போக்குவரத்தை ஏற்படுத்திவிடலாம் என்பதாய் இருக்கக்கூடும்.

ரணகோச ஒன்று... இரண்டு... மூன்று வரையும் சிங்களத்திற்கு சற்று சந்தோசமளிக்கின்ற இராணுவ நகர்வுகளாயின. ஆனால்... ரணகோச நான்குதான் சற்று பயத்தை சிங்களத்திற்கு வழங்கியுள்ளது.

தற்போது, ஜூன் 26-ம் திகதி பாப்பாமோட்டைப் பகுதியில் இருந்து புறப்பட்டு பள்ளமடுச் சந்தியையும் விடத்தல்தீவையும் சிங்களப்படை கைப்பற்ற முனைந்த இராணுவ நடவடிக்கை முதல் தடவையாக நெத்தியடி வாங்கியிருக்கின்றது. மூன்று நாட்கள் தொடர்ச்சியாக நடந்த சண்டைகளின் இறுதியில் சிங்களப் படை தோல்வியுடன் தனது பழைய நிலைகளில் பதுங்கிக்கொண்டது. ரஸ்சியத் தயாரிப்பு ரி-55 பிரதான யுத்த டாங்கிகள் ஆறு சேதமடைந்தன. நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இரு





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நூறுக்கும் மேற்பட்டோர் காயங்களுக்கும் படுகாயங்களுக்கும் இலக்காகினர். சிங்களப்படையின் இந்த ஆக்கிரமிப்பு நகர்வை முறியடிக்க, 84 விடுதலைப்புலிவீரர்கள் தமது இன்னுயிரை ஈகம் செய்தனர்.

இதில் இருந்து, முக்கியமாக ஒன்று, சிங்களத்திற்குப் புலனாகியிருக்கும். அதாவது மேற்கொண்டு மன்னார் பூநகரி வீதியில் நகர்ந்து மேற்குப் புறத்தே தரைப்பாதை அமைக்கும் புதிய இராணுவத் தளபதியின் திட்டமும் சோதனைக்கு ஆளாகியுள்ளது என்பது.

மேற்கொண்டு சிங்களப்படையின் நகர்வை அனுமதிப்பதில்லை என்று விடுதலைப் புலிகள் முடிவு எடுத்து விட்டார்கள் போலவே, தாக்குதல்களின் திண்மமும் தீவிரமும் தெரிகின்றது.

ஜெயசிக்குறுய்தான் இந்தக் கதியை அடைந்துவிட்டதென்றால்... ரணகோசவுக்கும் இக்கதி நிகழ்ந்துவிடுமோ என்று தற்போது சிங்களத்திற்கு சந்தேகம் கலந்த கலக்கம்.

முன்னாள் இராணுவத் தளபதி தளுவத்தை குறிப்பிட்டதுபோல், விடுதலைப் புலிகளின் கெரில்லா யுத்தமுறையை சந்திக்க காட்டுக்குச் செல்வதெல்லாம் இருக்கட்டும், இப்போது விடுதலைப் புலிகள் சிங்கள இராணுவத்தினரைச் சந்திக்க நாட்டுப்புறங்களுக்கே வந்துவிட்டனரே. விடுதலைப் புலிகளைச் சந்திக்க முடியாமல் சிங்களம் திகைத்துத் திக்கு முக்காடுகின்றது என்பது இராணுவத்தின் கிறுக்குத்தனமான நடவடிக்கைகளில் இருந்தே தெரிகின்றது. இஸ்டத்திற்கு இராணுவச் சட்டங்கள், கைதுகள், சுற்றிவளைப்புக்கள், விசாரணைகள், வீதித் தடைகள் யாவும் சிங்களத்தின் கலக்கத்தின் வெளிப்பாடுகளே. எது.. ஏன் எப்படிச் செய்கின்றோம் என்று தெரியாமல் சிங்களம் ஏதேதோவெல்லாம் செய்கின்றது. விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனராம். ஆக... விடுதலைப் புலிகள் நாட்டுக்குள் வந்து விட்டனர்.

# ஒரு இரவு விண்ணப்பம்

**பொன்.காந்தன்**

சோவென மழை
எங்கள் குளிர் சூறை
ஓவெனச் சுருள் காற்று
ஆவெனப் பிளக்க வானமிடை இடிஊளை
ஆளுக்காள் மனிதருக்குள்
சாப்பிட்டு வேளைக்கு
விளக்கிடம் விடை பெற்று
இருப்பது கொண்டு கழுத்துக்கு மேல் இழுத்துப் போர்த்தி
மழை இரவில் இன்பமாய்த் தூங்க எண்ணங்கள்
என் மனதுள் ஏக்கத்தின் இழைப்பு
குடை விரித்து வாசல் விட்டிறிறங்கி
பார்க்கிறேன் வானத்தை
அது கறுப்பு, சோவென மழை; எங்கும் குளிர் சூறை
ஓவெனச் சுருள் காற்று: ஆவெனப் பிளக்கவென மிடை இடி
ஊளை
எங்கோ குண்டுச் சத்தம் இடையிடையே,
மழையே! ஓய்க போதும்
எங்கோ தம்பி எதிரி முன்
சுடுகுழல் பிடித்து: வேர் பிடித்த மனிதனாய் விறைத்து
குளிரில் களைத்தது: அவன் உடை சக்கலான்
உடலோடொட்டி
கிடுகிடுக்கும் பற்கள்: நட்டு நிற்கும் மயிர்க்கால்கள்
ஐயகோ: பாவம் அவன்: செல்லமாய் வளர்ந்த பிள்ளை
வயது சிறுசு: உள்ளுக்குள் பெரிசு உறுதி
மலை பிரட்டும் மழையாய் நீ பொழிந்திடினும் - சுடு
கருவியில் மட்டும் துளிபடாமல் உறை போட்டு
நானென்ற குணத்தோடு நனைவான்; களையான் ஒதுங்கான்
விடுதலை வேண்டும் எனக்கென்ற சிலிர்த்து நிற்பான்
மழையே! ஓய்க போதும்
வெளுத்த வானில் தலை துவட்டட்டும்
விலை மதிக்க முடியாத தேசத்தின்
குடை அவன்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கரும்புலி

## மாவீரரெல்லாம் சரித்திரவான்கள்

அகோர வெய்யில் பொழிகிறது. பட்டிக்குள் நுழைந்தன சிங்கங்கள். கூச்சல், கதறல், அழுகை எதுவுமே அங்கே பலிக்கவில்லை. தாய்க் கோழிகள் குஞ்சுகளை பாதுகாக்க அலறியடித்தன. கூட்டித் திரிந்த குஞ்சுகளைப் பருந்துகள் தூக்கிச் செல்ல அந்தரித்தன தாய்ப் பறவைகள். கால்களைக் கட்டி கண்களைக் கட்டி இறைச்சிக்காக ஏற்றும் ஆடு மாடுகளைப் போல இளைஞர்கள் ஏற்றப்பட்டார்கள். இது அன்று 1987–ல் வடமராட்சியின் நிலையாக இருந்தது. பிடிக்கப்பட்ட அனைவருமே புலிகள் என்று முத்திரையும் குத்தப்பட்டார்கள். இவர்கள் அனைவருமே சிங்கள தேசத்தின் பூசா, மகசீன், வெலிக்கடை போன்ற சித்திரவதைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அனுப்பிவிட்டு பாட்டும் கூத்துமாய் பொழுதுகள் கழிந்தன.

"புலிகள் எல்லாத்தையும் பிடிச்சுப் போட்டோம்" என்று சிரித்துச் சிரித்து தம் உருக்களுக்கு போதை ஏற்றினர்.

அவன் தயாராகிக் கொண்டிருந்தான். ஜூலை 5–ம் திகதி இரவு பாட்டும் கூத்துமாய் கழித்த அந்த பருந்துகளின் கூட்டுக்குள் பாய்வதற்கு அவன் தயாராகிக் கொண்டிருந்தான். அவனுக்குள் அக்கினிப் பந்தொன்று ஆவேசமாய் உருண்டு கொண்டிருந்தது. சத்திய வேள்வி ஒன்றிற்காக அவன் சாகத் துணிந்து நின்றான். அவனைச் சுற்றிலும் தோழர்கள் துரிதமாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.



அவன் தாய் மீது பற்றுக்கொண்டவன், அவன் தாய் நாட்டின் மீது பற்றுக்கொண்டவன், அவன் தலைவன் மீது பற்றுக் கொண்டவன். இந்தத் தேசத்தின் மக்களுக்காக பெரும் தியாகம் செய்திட துணிந்தான். தன்னை அழிப்பதன் மூலம், தன் இனத்தவர்களை அழிப்பவர்களை அழித்தொழிக்கும் வல்லமை கொண்டான். தலைவன் கொடுத்த ஆசி அவனுக்கு மேலும் ஓர் புதியதோர் உற்சாகத்தையும் வழங்கியிருந்தது. எங்கும் இருள் அப்பிக் கிடந்தது. பாய்ச்சலுக்கான நேரமும் நெருங்கியது. ஒன்றாய்ப் பழகிய தோழர்கள், சிரித்து சிரித்து சந்தோஷமாய்ப் பழகியவர்கள் எல்லோரையும் அவன் பார்த்தான். தன் இனத்திற்கு தன்னால் செய்யக்கூடிய அதியுயர் தியாகத்தை செய்யப்போகிறேன் என்கின்ற பெருமிதத்தை அவன் முகம் வெளிப்படுத்தியது. எல்லோரையும் பார்த்தான். "மச்சான் போய்ற்று வாறன்". அவனைச் சுமந்த வாகனம் புறப்பட்டது. புறப்படும் வாகனத்தில் அமர்ந்திருக்கும் அவனைப் பார்த்து இருளிலும் மற்றவர்கள் கையசைத்தார்கள். சிறிது நேரத்தில் சுற்றுப்புறமெல்லாம் கிடுகிடுத்தது. வானத்தை நோக்கி கரும்புகை எழுந்தது. கூடி மகிழ்ந்த குஞ்சுகளையெல்லாம் கூட்டி அள்ளி கொடுஞ் சிறைக்குள் அடைத்தவர்களின் கொட்டம் அடங்கியது. அவனின் உயிர்ப் பறவை உயர எழுந்து பறந்தது. அந்த உயிர்ப் பறவையின் இனிய சுதந்திர தாகம் மெல்ல மெல்ல தென்றலுடன் கலந்தது.

மில்லர் மிகப் பெரிய தியாகம் செய்த நாள் ஜூலை 5 தமிழீழத்தின் புதியதோர் நாளாய், தமிழீழத்தின் புதிய சகாப்தம் படைத்த திருநாளாய் திகழ்கின்றது.

இரண்டாம் உலகப் போர் உக்கி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ரம் அடைந்திருந்த காலம் பிரித்தானிய கடற்படைக் கப்பல் புரிந்த அனர்த்தங்கள் ஏராளம். இந்த வேளையில்தான் ஜப்பானிய தற்கொலை வீரன் ஒருவன் விமானத்தில் பறந்து வந்து அந்தக் கப்பலினுள் வீழ்ந்து வெடித்து தன் தாய்நாட்டின் மீதான பற்றை வெளிக்காட்டினான். அவனது அந்தத் தியாகம் உலகில் வியந்து பேசப்பட்ட வரலாறாயிற்று. அந்தத் தாக்குதல் யுக்தியை 1987 ஜூலை 5-ல் தமிழீழம் மீண்டும் பேசிக் கொண்டது.

"பலவீனமான எமது இனத்தின் மிகப் பலம் வாய்ந்த ஆயுதமாகவே நான் கரும்புலிகளை உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள். போராட்டப் பாதையின் தடை நீக்கிகள்." என்று எமது கரும்புலிகள் தியாகத்தையும் உருவாக்கத்தையும் முன்மொழிந்தார் எமது தேசியத் தலைவர் அவர்கள்.

கரும்புலிகள் மென்மையானவர்கள். எமது இனத்திற்கு பெருமை சேர்த்தவர்கள். எமது தேசத்திற்கும் பெருமை சேர்த்தவர்கள். பெற்றவர்களுக்கும், கூடப்பிறந்தவர்களுக்கும் பெருமை சேர்த்தவர்கள்.


எனவேதான், "என்ர மகன் செத்தது என்பது எனக்கு கவலைதான். ஆனா, அவன் நாட்டுக்காகத் தானே செத்தவன். அதை நினைக்க பெருமையாத்தான் கிடக்கு" கண்கள் கலங்க கரும்புலி ஒருவனின் தாய் கூறினாள்.

கரும்புலிகளின் உன்னதமான தியாகங்களினால் எமது போராட்டம் எத்தனையோ திருப்பு முனைகளையும் எவ்வளவோ வளர்ச்சியினையும் கண்டுள்ளது. எதிரி இருந்த இடம் எல்லாம் அவர்கள் ஏறி நடந்தார்கள். குறைந்த பலத்தோடு நின்று எதிரிக்கு கூடிய அழிவை ஏற்படுத்துகின்றார்கள். தன்னை அழித்து பகைவர்களை அழிப்பதில் அவர்கள் பெருமை கொள்கின்றார்கள். தமக்கு கிடைக்கும் அந்த சந்தர்ப்பத்தை பெறும் பேறாகக் கருதுகிறார்கள். அதனால்தான் "இப்படியான நிறைவான சாவு எல்லோருக்கும் வராது" என்று கரும்புலி மேஜர் டாம்போ தன் தோழன் ஒருவனிடம் சொல்லிப் பெருமிதம் கொண்டான்.

கரும்புலிகளின் ஈடுஇணையற்ற தியாகத்தினால் தமிழீழம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் கரும்புலிகளின் ஈகம் கலந்திருக்கின்றது. இரும்பு மனிதர்களாக கரும்புலிகள் இருந்த போதும் அவர்கள் மனங்களில் மென்மை குடிகொண்டுள்ளது. அவர்களின் மென்மையான மனங்களில் உறுதி இருந்தது. தாயகத்து மண்ணிற்காக, தாயகத்து மக்களுக்காக செய்யும் உன்னதமான தியாகங்களில் அவர்கள் உறுதியோடு இருந்

## கரும்புலி

**மாவீரரெல்லாம் சரித்திரவான்கள்**





**முதற்கரும்புலி கப்டன் மில்லர்**

தார்கள். அந்த உறுதியின் வெளிப்பாடாகத் தான் மாங்குளம் முகாமைத் தகர்த்து வெற்றிக்கு வழி சமைத்த கரும்புலி லெப்.கேணல் போர்க் தன் தோழனிடம் "நான் புறப்படப்போறன். இதோட மாங்குளம் முகாம் முடிஞ்சுது" என்று திடமாகச் சொன்னான்.

மனிதர்கள் மரணத்தைக் கண்டு நடுநடுங்கும்போது கரும்புலிகள் மரணத்தை மடியில் கொண்டு திரிகிறார்கள். அவர்களின் மரணம் ஆயிரம் ஆயிரம் காவியங்களானது. கண்ணீருக்கு அப்பாற்பட்ட சோகங்களை விரும்பாத வீரமாயிற்று. உறுதி, எதற்குமே அஞ்சாத உறுதி, எவருக்கும் அஞ்சாத உறுதி அதுதான் கரும்புலிகளின் பலம். நெல்லியடியில் இடியாய் முழங்கி மில்லர் தொடக்கி வைத்த தியாகம் இன்னும் ஓயவில்லை.

கரிய இருளைப் பூசிக்கொண்டு நீண்டு படுத்திருக்கும் அலைகடலிலும் கடற் கரும்புலிகள் உலா வந்தார்கள். எங்கள் வாழ்வின் இனிமைகளைக் குலைத்த எல்லா இடங்களிலும் கரும்புலிகள் பாய்ந்தார்கள். எல்லைகள் தாண்டியும் எங்கள் கரும்புலிகள் தமது பலத்தின் இருப்பை உணர்த்தினார்கள். வல்வைக் கடலில், பருத்தித்துறைக் கடலில், வெற்றிலைக் கேணியில், சிலாவத்துறையில், முல்லைக்கடலில், காங்கேசன்துறையில், காரைநகரில், திருகோணமலையில் என தமிழீழத்தின் எல்லாக் கடற் பரப்பிலும் ஏன் கொழும்பிலும் கூட எதிரியின் கடற் கலங்கள் சிதறின. வான்முட்ட எழுந்த புகை மண்டலத்துடன் கரும்புலிகளின் உடலும் உயிரும் கலந்தன. போராளிகளினதும் தமிழ் மக்களினதும் உயிர்களைக் கொள்ளையடித்து உடமைகளை நாசமாக்கிய கடற்பேய்களை அவர்கள் அழித்தார்கள். தம் இனத்தை அழித்தவர்களை அழித்தார்கள். தம்மை அழிப்பதன்மூலம் தமிழீழ சந்ததியினருக்கு பெரும் தியாகம் செய்தார்கள். தங்களது இனிமையான வாழ்வை மட்டுமன்றி தம் இனிய உயிர்களையும் தியாகம் செய்தார்கள். "சாகும் பொழுதினில் இரு சாவிக் குண்டலம் தந்தவரெவர் கொடைக்கை" என்று கர்ணனின் கொடைச் சிறப்பை வியந்து போற்றினான் பாரதி. ஆனால்



www.tamileelamarchive.com

அக் கொடைக்கும் மேலாய் தம்மையே தற்கொடை தந்தவர்கள் எங்கள் கரும்புலிகள். தமிழீழத் தேசியத் தலைவரின் எண்ணத்தில் உருவாகி எண்ணற்ற வரலாற்றைப் படைத்தவர்கள் இவர்கள்.

இவர்களது வல்லமை ஆண், பெண் வேறுபாட்டிற்கு அப்பாற்பட்டது. பகைதனை ஒழிக்கும் பெரும் புயல்களாய் தமிழீழப் பெண் போராளிகள் கரும்புலியானார்கள். தம்மை வெடியாக்கி பகையை அழிக்க தீரமுடன் நிமிர்ந்தனர்.

அன்று காங்கேசன்துறை கடற்பரப்பில் வரிசையாக வந்தன பகைவனின் கடற்கலங்கள். அவள் உறங்கிக் கிடக்கும் எரிமலை என்பதனை அங்கயற்கண்ணி உலகிற்கு உணர்த்தினாள். கரும்புலிகள் பலர் எழுத முடியாத காவியங்களாக தமிழீழ நெஞ்சங்களில் உறங்கிக் கிடக்கின்றார்கள். உயிர்த் தியாகம் என்பது உன்னதமானது என்ற போதும் முகம் காட்டாத முகவரி சொல்லாத இவர்களின் உயிர்த்தியாகம் உன்னதத்திலும் உன்னதமானது. தன்னை இனங்காட்டாது தன் செயல் மட்டும் உலகறியச் செய்து தமிழீழத்தின் தன்மானத்தை உயரச் செய்தவர்கள் இவர்கள். இவர்களின் உறுதி, பற்று, பாசம் எல்லாமே உயர்ந்தவை. இவர்கள் ஓயாத எரிமலைகள். புகைச்சல் இல்லாத புயல்கள்.

## கரும்புலி

### மாவீரரெல்லாம் சரித்திரவான்கள்

தாக்குதல் தளத்திற்கு தம்மை இசைவாக்கிக் கொண்டபோதும் தம் உள்ளங்களில் தாய் மண்ணின் விடுதலைத் தாகத்தையே சுமந்து நின்றார்கள். இவர்கள் அற்புத மனிதர்கள். எதிரிகளின் இலக்குகளைத் தேடி அவற்றை அழித்தொழிப்பதற்காக இவர்கள் ஓடிய ஓட்டமும் எடுத்த முயற்சிகளும் இவர் நெஞ்சிலே சுமந்து திரிந்த தாயக தாகத்தை வெளிப்படுத்தின. இவர்களின் தியாக உணர்வும் அர்ப்பணிப்புத் திறனும் அளவிட முடியாத விசித்திரங்கள்.

அரிய பல செயல்கள் செய்த கரும்புலிகளை எங்களது நெஞ்சுகளில் ஒட்டி நிற்கும் நிழல்களே, நெருப்புத் துகள்களே, தொடுவானம் போல ஜாலங்கள் நிறைந்த வாழ்வு சுமந்தவரே, சுதந்திர வேட்கையுடன் சுற்றித் திரிந்த சுதந்திரப் பறவைகளே, வெடியதிரும் வேளையிலும் செடியில் மலராய் நின்றவரே, பகையழிக்க மனம் விரும்பி உமையழித்த வீரரே எப்படி உங்கள் தியாகத்தைக் கூறுவோம், போற்றுவோம் எனத் தெரியவில்லை.

நன்றி
புலிகளின் குரல்

## ஒன்று விழ ஒன்பதாய் எழுவோம்

*உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு (குறள் எண்: 339)*



கடலும் கடல்சார்ந்த வாழ்வும் தமிழீழ மக்களின் வாழ்வோடு இணைந்தது. இன்று அக் கடலில் மீன் பிடிக்கவோ பயணிக்கவோ முடியாதபடி எதிரி வலம் வருகிறான். எத்தகைய கொடுமை இது! சிங்களக் கடற்படையின் "மிதக்கும் கட்டளை முகாம்" என்கின்ற அந்தக் கப்பலும் அதன் நீட்சியாக நின்ற டோறாப் படகும் உளவு கண்டு காட்டிக் கொடுத்தன.
கடற்புலிகளின் கடல் நகர்வுகளுக்குத் தடையாக இருக்கும் இந்தக் கப்பலை அழிக்கப் புறப்பட்டாள் அங்கயற்கண்ணி. புயலெனச் சீறிப்பாய்ந்த அந்தப் பெண்புலி காங்கேசன்துறை துறைமுகத்தில் நிலைகொண்டிருந்த அக் கப்பலை தாக்கியழித்தாள். முதல் பெண் கரும்புலி அங்கயற்கண்ணியின் இழப்பு நொடித் துளிகளில் முடிந்தது. ஒன்று விழ ஒன்பதாய் எழுவோம் என்பதற்கிணங்க அங்கயற்கண்ணியின் விதைப்பு பல பெண் கரும்புலிகளின் பிறப்பிற்கு வழி அமைத்தது. இன்று மகளிர் படையணி தனியாகவே எதிரி முகாமைத் தாக்கி அழிக்கும் வல்லமை பெற்றதாக நிலமை உள்ளது. உறங்கச் செல்வது போல முடிந்த அங்கயற்கண்ணியின் வாழ்க்கை உறங்கி விழிப்பதைப் போல பல புதிய போராளிகளின் பிறப்பிற்கு வழி அமைத்தது. இதை எதிர்பார்த்துத் தானோ வள்ளுவர்....

*உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு (குறள் எண்: 339) என்கிறார்.*




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நிமிர்வு

கருணைரவி

ஒரு
நாடு கடத்தப்பட்டவனாய் நான்
நிலம் பறித்து
வீடு பிய்த்து
சுடுகாடாய்
சூன்யப் பிரதேசமாய்
துர் நாற்றம் எழ வைத்த
எனது மண்ணில்
என் கால்கள் படக்கூடாதென்கிறாய்
இன்றும்
குசி அடங்கவில்லை
உடல் சிதைக்க
உயிர் குடிக்க
ஏவுகிறாய் கணைகள்
உயிர் வாழ்வதற்காய்
மனமே புகாக்காடு
வாழ்விடமாகிப் போச்சு
பனி மூட்டத்துக்குள்
நினி நாவு விறைத்திட
கானல் வெம்மையால்
காதுகள் அடைத்திட
ஒவ்வாத ஒன்றுக்குள்
திணித்த பொருளாய் என் ஆத்மா
நுளம்புகள்
ரத்தம் உறிஞ்சி உறிஞ்சி
நிமிக்ஷந்த நாரியும்
குனிந்து போய்கிட்டது
மனம் பறித்தெடுக்கப்பட்ட
பச்சை வயல் வெளிகளிலும்
தாண்டு நிமிர்ந்தெழும்
குளத்து நீரிலும் கால்கள்
மீண்டும் குதித்தெனத் துடிக்கிறது
இனி எனக்கு
போர்வை வேண்டாம்!
குண்டியில்
வெய்யில் படும்வரை படுப்பதற்கு.



# ஓயமாட்டேன்

ஆதிலட்சுமி சிவகுமார்

இரும்புச் கிறைக்குள்ளே நான்
இறுகிக் கிடக்கிறேன்....
இருள்தல் புலர்தல்
எதுவும் எனக்கில்லை!
காற்று நுழைவதற்கும் இங்கு
வாசலில்லை ஆயினும்
நான் பட்ட குருதியில் நாற்றம்
என் நாசியைத் துளைக்கும்!
நான் கேட்க முடிவது
என் செவிப்பறைகளை அதிர்விக்கும்
அவலக் குரல்களை மட்டுமே! நான்
பார்க்க முடிவது
மனித முகம் பொருத்திய
பேய்களை மட்டுமே!
எனக்கு ருசிக்கக் கிடைப்பது
புழுக்கள் நெளியும்
அழகிய உணவு மட்டுமே!
குட்டை சொறி பீடித்த என்னுடன்
செடிறிவதில் என் பொழுதுகள் கரையும்!
நான் ஓடிவிடக் கூடாதென்பதற்காக
என் கால்களை
ஊனமாக்கிவிட்டுள்ளனர்!
என் தோழன் ஒருவன் முன்பே சொன்னான்
'ஓடுவதற்குக் கால்கள் தேவையில்லை!'
அவனின் கைகளில்
வளர்ந்த பிள்ளை நான்!
ஒருபோதும் ஓயமாட்டேன்!



www.tamileelamarchive.com

# வெடி ஓசை





அமைதி குலைந்துவிட்ட இந்த வேளையில் எங்கள் வாழ்விடங்களை கபளிகரம் செய்து எமது இருப்பையே இல்லாதொழிக்க சிங்கள இராணுவம் எங்கு பார்க்கிலும் சூழ்ந்திருக்கின்ற வேளை; எல்லையில் புலிவீரர் எம்மையும் எம் மண்ணையும் காப்பதற்காக எந்த நேரமும் விழிப்புடன் இருக்கும் இந்தவேளை; எதிரியை ஒழிக்கும் வரை எமக்கு நின்மதியில்லை என்று மக்கள் முடிவெடுத்திருக்கும் வேளை; இந்த சூழலை மறந்து சிறிது காலம் பின்னோக்கி எமது கவனத்தைத் திருப்புவோம்.

1983–ம் ஆண்டு வட தமிழீழத்தில் இராணுவ வண்டியொன்று விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியினால் வானத்தில் தூக்கி எறியப்பட்டு அதன் பின்னர் நடந்த துப்பாக்கிச் சூட்டில் அதில் பயணம் செய்த 13 சிங்கள இராணுவத்தினர் சாவினைத் தழுவிக்கொண்டனர். அந்த சம்பவம் தமிழீழ மக்களின் வாழ்க்கை ஓட்டத்தில் பெரும் திருப்பத்தினை ஏற்படுத்தியது.

முன்பெல்லாம் சிறீலங்கா தலைநகர் கொழும்பிலிருந்து காங்கேசன் துறைவரை 260 மைல் தூரத்திற்கு புகைவண்டிச் சேவை நாளாந்தம் நடந்து வந்தது. இதில் வட பகுதியிலிருந்து பெருந்தொகையான தமிழ் மக்கள் கொழும்பிற்குப் பயணம் செய்வர். தமிழ் மக்கள் கொழும்பிற்குப் பயணம் செய்யவேண்டிய அவசியம் நிறையவே இருந்தது. வியாபார மையம், அரச அதிகார தலைமைப் பீடங்கள் யாவும் கொழும்பிலேயே குவிந்திருந்தன. அதனால் தமிழ் மக்களின் கொழும்பு நோக்கிய பயணம் அவசியமாகியது. இதில் 260 மைல் நீளமான பயணத்திலும் மக்கள் நிம்மதியாகப் பயணிக்கமாட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவரைக்கும்தான் தமிழ் மக்களுக்கு நிம்மதி இருக்கும். ஏன் பாதுகாப்பும் இருக்கும். வவுனியாவிற்கு அப்பால் சிங்களப் பயணிக்கு தமிழர் எழுந்து இடம் கொடுக்க வேண்டும். தமிழர்கள் தொடர்ந்து இருக்கையில் இருந்தால் பலவந்தமாக அவர்களின் இடம் பறிக்கப்படும். ஏதாவது எதிர்த்துக் கதைத்தால் சகல சிங்கள பயணிகளாலும் மொத்தமாக தாக்கப்படுவர். உயிருக்கு உத்தரவாதமும் இல்லாமல் போகலாம்.

இலங்கைத் தீவில் எங்காவது ஒரு மூலையில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையில் ஓர் சச்சரவு ஏற்பட்டால் போதும் தமிழர்கள் காரணமின்றி சிங்கள மக்களினால் தாக்கப்பட்டனர். அச் சிங்களவருக்கு உதவியாக சிங்கள அரசின் பொலிசாரும், இராணுவத்தினரும் தமிழ் மக்களைத் தாக்குவதில் முனைப்பாக இருந்தனர். தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே வாய்மூடி கைகட்டி வாழ்ந்தனர். சிங்களவர் ஒருவர் தமிழ் மகன் எவனையாவது தாக்கினால் தமிழர் பேசாமல் இருக்கவேண்டும். கோபம் கொண்டு திரும்பித் தாக்கினால் இலங்கைத் தீவு முழுக்க இது பிரதிபலிக்கும். தமிழ் மக்கள் பயணம் செய்யும் புகைவண்டி அநுராதபுரம் நிலையத்தில் வைத்து நிறுத்தப்பட்டு தமிழர்கள் இழுத்து எடுக்கப்பட்டு தாக்கப்படுவர். இதே நிலை மாகோ



www.tamileelamarchive.com

சந்தியிலும் இடம்பெறும் பஸ் வண்டியில் பிரயாணம் செய்தால் கெக்கிராவ சந்தியிலும் ஹபறண சந்தியிலும் கொல்லப்படுவார்கள், தீயிட்டுக் கொழுத்தப்படுவார்கள். பொதுவாக தமிழப் பயணிகளுக்கு அநுராதபுரம் புகையிரதநிலையம், மாகோ சந்தி, கெக்கிராவ, ஹபறண சந்தி என்பன கனவிலும் கதறலை ஏற்படுத்தும். எத்தனை தமிழ் உயிர்களைப் பறித்த பலிபீடங்கள் இவை.

அடிக்கடி சிங்கள மக்களினால் ஏற்படுத்தப்படும் இனக்கலவரங்கள் தமிழர்களின் சொத்துக்களை அபகரித்து அவர்களை கொன்றொழிக்கும் உரிய காலப்பகுதியாகவும் சிங்கள அரசும் சிங்கள மக்களும் பயன்படுத்திக்கொண்டனர். சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்கள் தமிழர்களைக் கொன்றொழிக்கப்போவதாக உரத்துக் குரல் கொடுப்பர். சிங்கள தீவிர வாதிகளும், பௌத்த பிக்குகளும் பொலிஸ் வேண்டாம், இராணுவம் வேண்டாம் தங்களைப் போன்றோர் பத்து பேருந்து வண்டியில் போனால் தமிழர்களின் கொட்டத்தை அடக்கிப் போடலாம் என உரத்துக் கொக்கரிப்பர். இந்தப் பயமுறுத்தலைக் கேட்டு அஞ்சி ஒடுங்கிப்போன தமிழர்கள் எம்மிடையே இருந்திருக்கின்றார்கள். சிங்களவர் திரண்டு வந்தால் எங்கள் கதி என்னவாகும் என இங்கிருந்தபடியே (தமிழீழத்தில்) தொடை நடுங்கியவர்களும் நம்மிடையே இருந்தார்கள்.



இந்த அச்ச உணர்வும், சிங்களவர் என்றால் மறுபக்கம் தலையைத் திருப்பும் மனப்பயம், இராணுவம், பொலிஸ் என்றால் எங்கே ஓடித் தப்பலாம் என்ற அச்ச உணர்வு எப்படி எம்மைவிட்டு விலகியது? யார் எமக்கு வேப்பிலை அடித்து இந்த அச்சப்பேயை விரட்டினார்கள்? ஆம், எம்மைவிட்டு அச்சம் விலகிவிட்டது. சிங்களவர்கள் எம்மைக் கொன்று விடுவார்கள் என்ற பயம் ஓடிவிட்டது. இராணுவமும் பொலிசாரும் எம்மை என்னவெல்லாமோ செய்து விடுவார்கள் என்ற நடுக்கம் இப்போது சிறிதும் இல்லை. ஒரு வெடிச் சத்தம் – அதாவது யாழ்ப்பாணக் குடாநாட்டிலே திருநெல்வேலியில் 1983–ம் ஆண்டு கேட்ட வெடிச் சத்தம் எம்முடைய எல்லாவித அச்ச உணர்வையும் பறக்கடிக்கச் செய்து விட்டது.



இலங்கைத் தீவின் எந்த மூலையிலும் தமிழனோடு முரண்பட சிங்களவன் தயங்குகிறான். அநுராதபுரத்திலும், மாகோவிலும், கெக்கிராவவிலும், ஹபறணையிலும் தமிழர்கள் அச்சமின்றிக் கடந்து செல்ல அந்தப் பாரிய வெடியோசை உந்து சக்தியாகவுள்ளது. தமிழன் தலை நிமிர்ந்து விட்டான் என அந்த வெடியோசை தென்னிலங்கைச் சிங்களவருக்கு காதுக்குள் ஓங்கி அறைந்தது. 1983–ல் கேட்ட வெடியோசை பரவலாக எங்கும் தொடர்ந்த போதும் தமிழர்களை வாய் பொத்தி, கைகட்டி இருக்கச் செய்ய கப்பல் கப்பலாக தமிழீழம் மீது கொட்டப்பட்ட இராணுவமும் பொலீசும் தாமே தம் முகாம்களுக்குள் முடங்கிப் போனார்கள். தமிழர்கள் தம் நிலத்தில் தலை உயர்த்தி நெஞ்சு நிமிர்த்தி பவனி வந்தனர்.

பார்த்திருக்குமோ சிங்கள அரசு. எந்த வழிகளிலெல்லாம் தமிழர்களைக் கொன்றொழித்து தமிழர் வாழ்விடங்



www.tamileelamarchive.com

களைச் சுடுகாடாக்கி அந்தச் சுடு காட்டில் துள்ளிக்குதிக்கத் திட்டம் உருவாக்கியது. அதற்கு அவர்கள் தெரிந்தெடுத்த இடம் வடமராட்சிப் பகுதி. நம் மானத் தலைவன் பிறந்த ஊர். பற்பல புலித் தளபதிகளை பெற்றெடுத்த ஊர். அந்த மண்ணை சுடுகாடாக்கும் திட்டத்துடன் ஆரம்ப மாகியது ஒப்பரேசன் லிபரேசன். தமிழீழ மண் அதுவரை கண்டிராத குண்டுவீச்சுக்களும் தொடர்ந்தன. கடலிலே நின்று ஓயாமல் கக்கியது கடல் பீரங்கிகள். மக்கள் ஈவிரக்கமின்றி கொல் லப்பட்டனர். கட்டம் கட்டமாக மக்கள் பிடிக் கப்பட்டு படிப்பகத்தி னுள்ளே விட்டு பூட்டி விட்டு குண்டுவைத்து தகர்த்த கொடுமை நாம் மறக்கக் கூடியதல்ல. மனைவிக்கு முன்னால் கணவன் கொல்லப்பட் டதும், பிள்ளைகள் கத றித்துடிக்க தாயார் கொல் லப்பட்ட கொடுமைக ளும் வடமராட்சி மண் ணில் நிறையவே நடந் தேறின.

கொடூர நர்த்தனம் புரிந்துவிட்டு சிறீலங்கா இராணுவம் நெல்லியடி மத்திய கல்லூரியில் பரந்த கட்டிடத் தொகுதிகளில் மகிழ்வுடன் துள்ளிக் குதித்துக் கொண்டு இருந் தது. வடமராட்சியில் நடந்த நிகழ்வுகளை எண்ணி மக்கள் வெந்து துடித்துக் கொண்டிருந்தனர். இவனை, இந்தக் கொடியவர்களை, இந்த அரக்கர் களை எப்படி அழிக்கலாம் என்று ஒவ்வொரு தமிழனும் எண்ணிக் கொண்டிருந்த வேளை, அந்தப் பெரும் மனது தமிழ் மக்களுக்காக தன் உயிரை, தன் மகிழ்வு, தன்னலம் எல்லாவற்றையுமே எங்கோ மறந்து விட்ட அந்தப் பெருமகன் திரும்பத் திரும்ப யோசித்தான். உருவானது அற்புதமான, அதிஉன்னதமான, கேட் டாலே மெய்சிலிர்க்கக்கூடிய அந்த மாபெரும் தியாகத்தை மையமாகக் கொண்ட கரும்புலித் திட்டம். முதல் கரும்புலி கப்டன் மில்லர் சாதனை படைக்க தயாரானான்.

வெடியோசை.... பெரும்வெடி யோசை.... குலுங்கியது வடமராட்சி அல்ல சிங்கள ஆட்சியாளர்களும் அவர்தம் இராணுவமுமே. இராணு வம் நிலை குலைந்தது. எப்படி முடிந்தது கணப்பொழுதிற்குள். நூற் றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தம் இதயம் பிளந்து எப்படி மர ணித்தனர்? எதற்கும் குலுங்காத அந்த கொங்கிறீற் கட்டிடங்கள் எப்படித் தூள்தூளாகிப் போயின? இது ஒரு மனிதனால் முடிகின்ற காரியமா? வெடியோசை கேட்டபின் வீதியை ஆராய யார் இருந்தார்கள்? கரும்புலி மில்லர் ஆரம்பித்து வைத்த உச்ச தியாக சகாப்தம் அடிக்கடி எங்கும் வெடியோசை ஒலியில் அதிர்ந்த போது சிங்கள இராணுவம் நிலை குலைந்து போனது. அந்தக் கரிய புலி கள் சாதனைப் புலிகளாக மக்களின் மனங்களில் வேரூன்றிப் போனார்கள்.

இரண்டாம் உலகயுத்த காலத்தில் பிரித்தானியரின் பாரிய போர்க்கப் பல் ஒன்று ஜப்பானை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. அது ஜப் பானை அண்மித்தால் ஜப்பானிய சரித்திரம் சமாதி கட்டப்பட்டுவிடும் என்ற நிலையில் அந்தக் கப்பலைத் தகர்த்தெறிய காலிலே வெடிகுண் டைக் கட்டிக் கொண்டு கப்பலின் புகை போக்கி குழாயினூடாக கொதி கலனிற்குள் வீழ்ந்து வெடித்துச் சிதறி கப்பலையும் மூழ்கடித்தானே அந்த ஜப்பானிய வீரன். அவன் செய்த தியாகத்தை அன்று படித்த போது நாம் மெய் சிலிர்த்து நின் றோம். அதனைவிட எத்த னையோ மடங்கு பெரி தான சாதனைகளை எமது கரும்புலிகள் செய்யும் போது உலகம் ஒருகணம் கண்களில் வியப்பை ஏந்து கின்றது.



வெடியோசை தொடர்ந்து எம் தலைநகர் திருமலை, எத்தர்கள் குகைகள், எத் தனை கொடுமைகள் புரிந்து விட்டு திமிருடன் உலா வித் திரியும் சிங்களக்கடற் படையின் முகாம்கள் மீது புலிகள் தம்மை இழந்து அந்தத் தீயோரை இவ்வுல கிலிருந்தே அனுப்பிவைக்க எழுந்தனர்.

நமது கடற்பரப்பில் நாம் கால் நனைக்க முடியாத வாறு எதிரியின் ஆணவ நடவடிக்கை கொஞ்சநஞ் சமல்ல. மீன் பிடிக்க கட்டு மரம் தள்ளினால் சல் லடை போட்டுவிடுவார் கள் சிங்களக் கடற்படை யினர். அவர்களது டோறாப் படகு எத்தனை பேரின் வாழ்விற்கு குழி பறித்தது. அதற்கு குறி பார்த்தார்கள் கரும்புலி வீரர்கள். இவர்கள் எம் மண்ணில் அழியாத இடம்பெற்று நிலையாகிவிட்டனர்.

12.04.96 சிங்கள ஆட்சியாளர்க ளும் அவர்களது இராணுவமும் மாத் திரமல்ல முழு சிறீலங்கா சிங்கள மக்களும் நிலைகுலைந்து போன நாள். தமிழ் மக்களது சுதந்திரப் போராட்டம் எங்கோ தொலைவில் நடப்பதாக நிம்மதியாக நித்திரை கொண்டிருந்தவர்கள் அடித்து, புரண்டு கொண்டு எழுந்து ஏக்கத்துடன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இருந்த நாள். ஆம் எதிரியின் மிகுந்த பாதுகாப்புக் கோட்டையான கொழும்புத் துறைமுகத்தினுள் நுழைந்து அங்கு தரித்து நின்ற சரக்குக்கப்பல்களை வெடி வைத்து தம்மையும் அழியாப் பொருளாக்கிக் கொண்டனர் கரும்புலி வீரர்கள்.


மீண்டும் வடகடல் முகாம் பெரும் வெடியோசை. கரும்புலி வீரன் ஒருவனின் ஒப்பற்ற தியாகத்தினால் காரைநகர் கடலில் தனிக்காட்டு ராஜாவாக திரிந்த சிங்களக் கடற்படையினரின் டோறாவும் கடற்படையின் கணக்கிலிருந்து குறைந்துவிட்டது.

*19.07.96* பொழுது புலர்ந்த போது ஒவ்வொரு சிங்கள இராணுவத்தினனும் தன் இருப்பை உறுதி செய்யக்கூடியதாக முல்லைத்தீவு முகாம் உடைத்தெறியப்பட்டது. இன்றுவரை சிறீலங்கா அரசு சிங்கள மக்களுக்கு இறந்துபோன இராணுவத்தின் கணக்கையும் அள்ளிக்கொடுத்த இராணுவ தளபாடங்களையும் சொல்லாமல் மறைத்துவருகிறது. இந்த வரலாறு படைத்த வெற்றித் தாக்குதலுக்கு பெரிதும் துணை போனவர்கள் அந்த வெடியோசை நாயகர்களான கரும்புலி வீரர்கள். ஓயாத அலைகள் முல்லையை சூறைகொண்டு வீசியடிக்கும் போது எம் தலைநகரிலும் வெடியோசையில் கடல் கலங்கித் தெறித்தது. தொல்லைதர தலைதெறிக்க ஓடித் திரிந்த எதிரியின் டோறா ஒன்று ஓய்வு பெற்றது. திருமலைத் துறைமுகத்தில் நுழைந்த கரும்புலி வீரர்கள் அந்த சாதனையுடன் தம்மையும் எம் மனங்களில் பதியப்போட்டுவிட்டனர்.

*08.12.96* அன்று தன்னந்தனியாக வெடி சுமந்து சென்று சிறீலங்கா கடற்படையின் டோறா ஒன்றை மோதிச்சிதைத்தாள் கரும்புலி ஒருத்தி. பரந்த கடற்பரப்பில் அலைந்து திரிந்த டோறா மிகுந்த பாதுகாப்புடன் கூடிய திருமலைத் துறைமுகத்தினுள் தரித்து நின்றது. அந்தப் பாதுகாப்பு எம் கரும்புலிகளின் துணிவுக்கும் ஆற்றலுக்கும் தாங்காது.

**எம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு விடியலுக்காக உறங்கிவிட்டார்கள் மாவீரர்கள். அவர்கள் அப்படியே உறங்கட்டும். விடியலை அவர்களுக்கு நாம் காட்டுவோம். உலகத்தின் புருவத்தை உயர்த்த வைத்த எம் மான மறவரின் தியாகங்கள் இனி எமக்கு விடியலை விரைந்தளிக்கும்**

மட்டு நகரில் களுவாஞ்சிக் குடிக்கும் கல்முனைக்கும் இடைப்பட்ட பகுதியில் சிங்கள இராணுவ மேஜர் ஜெனரல் ஒருவரை சுமந்து இராணுவ வாகனம் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. கரும்புலிகள் நீண்ட நாட்களாக வைத்த குறியல்லவா? தவறவிடுவாரோ கரும்புலி வீரர். கரும்புலியெனப் பாய்ந்து சாதனை படைத்து நம் வேதனை துடைத்தான் ஒரு கரும்புலி.



சிங்கத்திற்குத் தெரியாமல் சிங்கத்தின் இதயத்தை தட்டிப் பார்த்த வீரமும் விவேகமும் எம் கரும்புலி வீரருக்கே உண்டு. சீனன் குடாவில் தரித்துநின்ற விமானம் மீது துணிகரத் தாக்குதல் நடாத்தினார்கள் கரும்புலி வீரர்கள். இராணுவத்தின் நிம்மதியைக் குலைத்தார்கள் இளம் கரும்புலிகள். அதனால் அசையா இடம் பெற்றுவிட்டனர் எம் மனதில்.

எதிரி வருவதனைக் கண்டு மறையவோ, பதுங்கவோ முடியாத கடற்பரப்பில் பெரிய கலத்துடன் வந்த கடற்படையுடன் கரும்புலிகள் பெரும் கடற்சமர் ஒன்றை ஆரம்பித்தனர். முல்லைக் கடற்பரப்பிலே இது நடந்தது. *24.03.98* பெரும் வெடியோசையுடன் அந்தக் கரும்புலிகள் தம் கடமை முடிந்து சாதனை வீரராகினர்.

உலகப் பெரும் முற்றுகை நடவடிக்கையான லெனின் கிராட்டிற்கு பின்னர் பெரும் இராணுவ நடவடிக்கையெனச் சொல்லப்பட்ட ஜெயசிக்குறுய் நடவடிக்கையில் தாண்டிக் குளத்தை விநியோக மையமாக வைத்து சிங்கள இராணுவம் பரவிப் படர்ந்திருந்தது. எம் தலைவரின் திட்டமிட்ட நடவடிக்கையாக அந்தத் தாண்டிக்குள விநியோக மையம் அழிக்கப்படவேண்டி இருந்தது. கரும்புலி வீரர்கள் தம்மை ஆகுதியாக்கிக் கொள்ள தயாராகினார்கள். வெடியோசைகள் மூன்று முழங்கி ஓய்ந்தன. அதன் பின்னர் முழங்கித் தீர்ந்தன எதிரியின் ஆயுதக் கிடங்குகள். இந்த சாதனை நிகழ்வில் தரைத் தாக்குதலில் முதல் பெண் தரைக் கரும்புலி புதிதாகப்புகுந்து கொண்டது.

திருமலைக் கடற்பரப்பில் மீண்டும் தொந்தரவுகள் ஆரம்பித்தன. டோறா சத்தம் காதைப் பிளந்த வேளை *18.10.97*–ல் கரும்புலி வீரர்கள் இருவர் இணைந்து எதிரி மீது பாய்ந்த வேளை டோறாவின் அட்டகாசம் ஓய்ந்தது. நம் கடற்புலிகளின் சாதனையையும் எம் மனதில் நிறைந்துவிட்டது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

27.05.97–ல் முல்லைக் கடற்பரப்பிலும் 28.06.97 திருமலைக் கடற்பரப்பிலும் எதிர்பாராது ஏற்பட்ட படகு விபத்தில் எவ்வளவோ சாதிக்க வேண்டும் என்று ஆழ்ந்திருந்த கரும்புலிகள் எம்மை விட்டுப்பிரிந்தனர். எம்மால் அவர்களை மறக்கவே முடியாது. எம்மையெல்லாம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு விடியலுக்காக உறங்கிவிட்டார்கள். அவர்கள் அப்படியே உறங்கட்டும். விடியலை அவர்களுக்கு நாம் காட்டுவோம். உலகத்தின் புருவத்தை உயர்த்த வைத்த எம்மான மறவரின் தியாகங்கள் இனி எமக்கு விடியலை விரைந்தளிக்கும். இலக்கு ஒன்றிற்காக அவர்களது காத்திருப்பும், இலக்கு கிடைத்தபோது இம்மியும் பிசகாமல் விரைந்து சென்று வெடியோசையில் மறைந்து போவதும், அந்தக் கணப்பொழுதுகள் எம் மக்களால் என்றுமே மறக்கமுடியாதவை.

நன்றி: புலிகளின் குரல்






### வீரச்சாவடைந்த கரும்புலிகள் விபரம்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இதுவரை வீரச்சாவை தழுவிக்கொண்ட கரும்புலிகளின் எண்ணிக்கை விபரத்தினை புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

1987–ம் ஆண்டு ஜூலை மாதம் 5–ம் திகதி முதல் 1999 –ஜூன் வரையில் 147 கரும்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இதில்

ஆண் கரும்புலிகள் – 110
பெண் கரும்புலிகள் – 37 ஆகும்.
இந்த 147 கரும்புலிகளிலும்
தரைக் கரும்புலிகளின் எண்ணிக்கை – 55
கடற்கரும்புலிகளின் எண்ணிக்கை – 92 (ஜூலை 2– 99)

# நெஞ்சுரம்

*1995* ஆகஸ்ட் 29, முல்லைத் தீவுக் கடற்பரப்பில் டக்ளஸ் தேவானந்தா கும்பலின் பயணிக் கப்பல் "ஐரிஸ் மோனா" பயணித்துக் கொண்டிருந்தது. பயணிக் கப்பலை வழி மறைப்பது விடுதலைப் புலிகளின் செயல் அல்ல. இருந்தாலும் வேறு ஒரு செயலுக்காக அக்கப்பலை வழிமறைத்து முல்லைத் தீவுக் கடற்பரப்புக்கு அழைத்து வந்தனர் புலிகள்.

தகவல் பறந்து சிங்களக் கடற்படை விழித்தெழுந்தது. கிழக்குக் கடற்பிராந்தியத் தளபதி கொமொடோர் தாயா, சந்தகிரி கடற்படைப் போர்க்கப்பலான 'ஜெயசாகரா' என்கிற ரோந்துக் கப்பலுடன் இரண்டு டோராப் படகுகளை அனுப்பி வைத்தார். கப்பலும் டோராப்பகும் முல்லை தீவு நோக்கிப் பறந்து வந்தன. சுப்பர் டோராவின் அதிகாரி ஐரிஸ் மோனாவைக் கண்டு தன் சகாக்களுக்குத் தகவல் தந்தார். சிங்களப் படையினருக்கு ஆனந்தம், பூரிப்பு.

இப்பூரிப்பு, அருகில் காத்திருந்து மறைந்திருந்த விடுதலைப் புலிகளைக் காணவிடாது கண்ணை மறைத்தது. ஓடி வந்த டோராப்படகு புலிகளின் தாக்குதல் வளாகத்துக்குள் வந்தது புலிகளின் அதிவேகத் தாக்கு. கண்ணெதிரே டோரா தாக்கப்பட்டு, கட்டி இழுக்கப்பட்டு, கரை நோக்கி நகர்த்தப்படுவதைப், பார்ப்பதைத் தவிர அவர்களால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

கப்பலில் இருந்து தகவல் கடற்படைத் தளத்திற்குப் பறந்தது. ஓடி வந்தன... உலங்கு வானூர்தி, சுப்பர் சோனிக் விமானம், பீரங்கிக், கப்பல், டோரா என மிகப் பெரிய பட்டாளமே ஓடி வந்தன....

ஓடி வந்த படைகள் கரும்புலியின் பயத்தால், தூரத்தே நின்று சுட்டன. பின் வாங்குவது போலப் புலிகளின் படகு பின்னே செல்ல, மகிழ்ச்சிக் கூச்சலோடு ஓடிவந்த எதிரி நிதானமிழந்தான். பின்னேயே ஓடி வந்தான். கருமையோடு உறுதியாய் காத்திருந்த கரும்புலிகள் நகுலனும், கண்ணாளனும் அசுர வேகத்தில் நெருங்கி வெடித்தனர். உயிர்ப்பூ, காற்றோடு கலந்தனர்.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடது. (குறள் எண்: 490)



www.tamileelamarchive.com

# தமிழீழ விடுதலைக்காக உணர்வுடன் எழுதுகிறேன் ஒரு கடிதம்....

## எமது தாயக விடுதலைக்காய் போராடும் மறத்தமிழ் வேங்கைகள்

மதிப்பிற்குரிய எமது இரத்த சொந்தங்களுக்கு தாய் தமிழகத்திலிருந்து எழுதுகிறேன். நீங்கள் அனாதைகள் அல்ல. எட்டுத்திக்கும் கடல் கடந்து வாழ்ந்தாலும் தமிழ் இணைக்கும். அது உண்மையானது. உலகத் தமிழினத்தின் விடியலுக்காய் போராடும் என் இரத்த சொந்தங்களே நீங்கள் அல்லவோ எனக்கு அன்னை தந்தை அண்ணன் அக்கா தம்பி தங்கைகள். தமிழகத்தில் இஸ்லாம் உண்டு, கிறிஸ்தவம் உண்டு, இந்து மதம் உண்டு, இங்கு தமிழர் இல்லை. தமிழீழத்தில் இஸ்லாம் உண்டு, கிறிஸ்தவம் உண்டு, தமிழ்த்தேசியம் இருக்கிறது.

தமிழீழத்தில் வரலாறு படைக்கும் அவர் தம்பியல்ல, தலைமகன் என்று நமது தமிழறிஞர் சாலையார் முழங்கிச் சென்றார். அவர் தம் ஈழவிடுதலை ஆதரவு குரலை தொடர்ந்து ஒளித்து வரும் நமது தமிழ்த் தேசியத் தலைவர் திரு.பழ.நெடுமாறன் அவர்கள் ஆவார். அவர் தலைமையில் ஒருங்கிணைத்து வருகிறோம். தமிழகத்தில் மிகப்பெரும் அரசியல் கட்சிகள் வாய்ப்பேச்சுடன் இருக்கிறது. தமிழகத்தின் சிறுசிறு அமைப்புகள் இயக்கங்கள் ஒருங்கிணைந்து ஈழவிடுதலைக்காக பல போராட்டங்களும் செய்து சிறை சென்று வருகின்றோம். தமிழகத்தில் மிகப்பெரும் மாறுதல் அடைந்துவருகிறது. இனி தமிழகத்தில் ஐயா நெடுமாறன் அவர்கள் சொல்வதைத்தான் மக்கள் கேட்கப்போகிறார்கள். அது திண்ணம்.

மறைந்த தமிழறிஞர்கள் சாலையார் – பெருஞ்சித்ரனார் அவர்கள் கட்டமைத்து சென்ற தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவை சிறிதேனும் தளராமல் வழிநடத்தி செல்கிறார். அவர்தம் கரத்தை வலுப்படுத்துவோம். தமிழினத்திற்காக உயிரைவிட்டது அந்தக் காலம். தமிழ் இனத்திற்காக எதிரிகள் உயிரை எடுப்பது தலைவர் பிரபாகரன் காலம். மனம் தளராதீர்கள். தமிழீழம் பிறப்பது உறுதி. உலக அரங்கில் புலிக்கொடி பறப்பது உறுதி. ஆண்டபரம்பரை மீண்டும் ஆளப்போகிறது. அதைக் கண்டு எட்டுத்திக்கும் பூரிப்படையும்.

தமிழீழ விடுதலையை முன்னெடுப்போம்.

தமிழீழ மக்களை ஆதரிப்போம்.

இது எங்களின் தொப்புள்கொடி உறவு.

எங்களின் குருதிச் சொந்தம். தொடர்ந்து ஆதரவு தருவோம். நீங்கள் அனாதைகள் அல்ல.

அன்புடன்
தோழமையுள்ள
கோவி. தமிழ்வேந்தன்
தமிழ்நாடு
இந்தியா



www.tamileelamarchive.com

# "ஆளணிப் பற்றாக்குறை"

குறுகிய அரசியல் இலாபம் கருதி சிறீலங்கா அரசு தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இன்று பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

"ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் படையினர் முகாம்களுக்குள் முடங்கிக் கிடந்தனர். இன்று நாம் அவர்களை முழுமையாகப் பயன்படுத்தி புலிகள் வசமிருந்த பிரதேசங்களை விடுவித்து வருகிறோம்" என சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியதும் சிங்கக் கொடியேற்றி வைத்துத் தம் பட்டம் அடித்தார். ஆனால், ஒருசில மாதங்களுக்குள்ளேயே அவர் படைகள் யாழ். குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டுவிட்டன என்பதை உணரத் தொடங்கிவிட்டார்.

சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தனது படைப்பலங்கள் அனைத்தும் ஒன்று திரட்டி யாழ். குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதன் மூலம் விடுதலைப் புலிகளை ஒழித்துவிடலாம். தன் மூலம் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கிவிடலாம் என எண்ணி நடவடிக்கைக்கு திட்டமிட்டார்.

இதற்கு தற்போதுள்ள படைப் பலம் போதாது எனக் கூறி இவரது திட்டத்தை எதிர்த்த அனைத்து இராணுவ அதிகாரிகளையும் ஓரம்கட்டி விட்டு இவர் தனது திட்டப்படியே நடவடிக்கைகளையும் ஆரம்பித்தார். ஆனால், ஒரு சில மாதங்களிலேயே உண்மை நிலை வெளிப்பட்டது.

குடாநாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவித்து அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளப்போவதாக சர்வதேச ரீதியில் பிரச்சாரங்களை மேற்கொண்ட அவருக்கு தனது படைகளுக்குத் தேவையான உணவினைக் கூட எடுத்துச் செல்வதில் பெரும் சிரமத்தை அனுபவிக்கவேண்டி ஏற்பட்டது.

எதிர் விளைவுகளைச் சிந்தியாது குறுகிய அரசியல் இலாபத்தை மட்டுமே கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கையால் சந்திரிகா அரசும் அதன் படைகளும் நிலைதடுமாறுகின்றன.

கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் யாழ். குடாநாட்டிற்கு இராணுவ விநியோகப் பொருட்கள் சென்றடைவதில் நெருக்கடிகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து தான்விட்ட தவறை மூடிமறைக்கவும், அரசியல் கௌரவத்திற்காகவும் அவர்கள் மேற்மேற்கொண்ட தவிர்க்கமுடியாத நடவடிக்கைதான் குடாநாட்டிற்கான பாதை திறப்பு.

ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த கிழக்கு மாகாணத்திலிருந்து பெருமளவு படையினரை எடுத்து யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த ரத்வத்த பாதை திறப்பதற்காக கிழக்கில் எழு





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அரசுக்கு தீராத பிரச்சினை

**சசீகரன்**



பத்தைந்து வீதமான பிரதேசங்களை கைவிட்டு அங்கிருந்து படைகளை வாபஸ் பெற்று ஜயசிக்குறுய் நடவடிக்கையினை ஆரம்பித்தார். கிழக்கில் பெரும் பிரதேசங்களை இழந்து வடக்கில் பாதை திறக்க முற்பட்டு இன்று அனைத்துப் பகுதிகளிலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

சுலபமாக நடத்தி முடிக்கலாம் எனத் தப்புக் கணக்குப் போட்டு ஆரம்பிக்கப்பட்ட இப்படை நடவடிக்கைகள் இன்று பெரும் ஆளணிப் பற்றாக்குறையினால் தடைப்பட்டு நிற்கின்றன. இராணுவ வல்லுநர்களின் ஆலோசனைகளையும், எச்சரிக்கைகளையும், செவிமடுக்காது ஆரம்பிக்கப்பட்ட இந்நடவடிக்கையை நடுவில் கைவிட்டு ஆக்கிரமித்த பிரதேசங்களைப் பாதுகாக்கவே முடியாத நெருக்கடிக்குள் இன்று சிறீலங்கா அரசு சிக்கியுள்ளது.

ஆனாலும், சந்திரிகா அரசோ இராணுவ வெற்றியிலேயே குறியாக இருப்பதாகவே தோன்றுகிறது. கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் பல ஆயிரக்கணக்கான படையினர் இறந்தும் மேலும் பல ஆயிரக்கணக்கானோர் அவயவங்களை இழந்தும் படைகளைவிட்டுத் தப்பியோடிய நிலையிலும் புதிதாக படைப்பலத்தை அதிகரிப்பதிலேயே அரசு தீவிரம் காட்டி வருகிறது.

ஜயசிக்குறு நடவடிக்கை ஆரம்பித்த கையோடு படைகளுக்கு புதியவர்களை இணைத்துக் கொள்ளும் முயற்சிகளும் ஆரம்பமாகின. ஆனால், பல தடவைகள் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் எதிர்பார்த்த பயன் கிடைக்கவில்லை.

இந்நிலையில் இராணுவ ஆட்சேர்ப்பிற்கான அடிப்படைத் தகுதிகளையும் அது குறைத்தது. ஐந்தாம் தரம் வரை கல்வி பயின்றவர்களும், பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்தவர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்ளலாம் என தொடர்பு சாதனங்களூடாக அறிவிப்புக்களை சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு விடுத்தது. அவசரகால ஆட்சேர்ப்பு போன்று முன்கூட்டியே விண்ணப்பிக்க வேண்டியதில்லை. நேர்முகப் பரீட்சைகளின் போது உரிய ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரலாம் எனவும் அது அறிவிப்புச் செய்தது.

இதனால் பயன் ஏற்படாத போது சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே நேரடியாக சிங்கள இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார். யுத்தத்தால் அழிந்து கொண்டிருக்கும் சிங்கள மக்களின் உயிர்களையும், பொருளாதார அழிவுகளையும் தடுத்து நிறுத்தி நாட்டை பாதுகாக்க சிங்கள இளைஞர்கள் முன்வர வேண்டும் என இவர் பகிரங்க அறைகூவல் விடுத்தார்.

இவரைத் தொடர்ந்து சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி, சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு, பௌத்த மகாசங்கத்தினர் எல்லோருமே சிங்கள இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தனர். இவர்களின் இத்தகைய அறைகூவல் எதுவுமே சிங்கள மக்களின் செவிகளில் புகுந்ததாகத் தெரியவில்லை. படைகளுக்கு ஆள் திரட்டும் நடவடிக்கைகள் சாத்தியப்பாடானது அல்ல என்பதை புரிந்து கொண்ட சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு தொண்டர் படைக்கு ஆட்களைத் திரட்டும் முயற்சிகளில் இறங்கியது. கொழும்பிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிங்கள இளைஞர்கள் அடங்கியதொண்டர் படையை உருவாக்கி அவர்களை யுத்த பிரதேசம் தவிர்ந்த ஏனைய



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பகுதிகளில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப் போவதாகவும், இத் தொண்டர் படையினர் எக்காரணம் கொண்டும் யுத்த முனைகளுக்கு அனுப்பி வைக்கப்படமாட்டார்கள் எனவும் உறுதியளித்தது.

அத்துடன் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் முந்நூறு சிங்கள இளைஞர்களை இராணுவத்தில் இணைக்கும் முயற்சிகளும் படையினரால் மேற்கொள்ளப்பட்டன. இவையும் சாத்தியப்படாது போகவே இவர்கள் படையினருக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் பல்வேறு வகையான சலுகைகளையும் வழங்க முன் வந்தனர். படையினரின் குடும்பங்களுக்கு காணிகள், வீடுகள் வழங்கியதுடன், பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களையும், கல்வி வசதிகளையும் வழங்குவதாக அறிவித்ததுடன் வேலை வாய்ப்புகளிலும் முன்னுரிமை அளித்தது. மேலும், இறந்த படையினருக்கு நஷ்டஈடும், ஓய்வூதியமும் வழங்குவதாக உறுதியளித்ததுடன் அங்கவீனரான படையினரது நலன்களிலும் அக்கறை காட்டியது. காயமடையும் படையினரை மருத்துவமனைக்குச் சென்று பார்ப்பதற்கு இலவச போக்குவரத்து மற்றும் தங்குமிட வசதிகளையும் செய்து கொடுத்ததுடன் இலவச உணவு விநியோகங்களையும் ஏற்பாடு செய்துகொடுத்தது.

இப்படிப் பல்வேறு சலுகைகளையும் வழங்க அரசு முன் வந்த போதிலும் அது எதிர் பார்த்த அளவில் படைகளில் சேர சிங்கள இளைஞர்கள் முன்வரவில்லை. இதேவேளை அரசு தப்பியோடியவர்களுக்கு பல தடவைகள் சலுகைகளுடன் கூடிய பொது மன்னிப்பினை வழங்க முனைந்தது. இதற்குப் பல சந்தர்ப்பங்களை வழங்கிய போதிலும் எதிர்பார்த்த பலன் ஏற்படாத நிலையில் மிரட்டல்களுடன் கூடிய கைது நடவடிக்கைகளை ஆரம்பித்தது. இதற்கென இராணுவத்தினரையும், பொலிசாரையும் இணைத்து விசேட பிரிவு ஒன்றையும் ஆரம்பித்தது. தப்பியோடியவர்களுக்கு புகலிடம், வேலை வாய்ப்பு வழங்குவது தேசத்துரோகம் என அறிவித்த அரசு இவற்றுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் எனவும் பொதுமக்களுக்கு எச்சரித்தது.

ஆனால், எதுவுமே அவர்கள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காத நிலையில் ஜெயசிக்குறு ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் ஏற்பட்ட ஆள் பற்றாக்குறையை சமாளிக்க யுத்த முனைகளில் இருந்த படையினரின் லீவுகளை இரத்துச் செய்ததுடன் இவர்களைத் தொடர்ச்சியாக கடமையில் ஈடுபடுத்தியது. இதனால் இவர்கள் பெரும் விரக்தி நிலைக்கு தள்ளப்பட்டு உடல் – உள ரீதியான பாதிப்புக்குள்ளாகினர். தம் மேலதிகாரிகளுடன் பல தடவைகள் இது குறித்து இவர்கள் முரண்பட்டுக் கொண்டதுடன் ஒரு சிலர் தம் உயர் அதிகாரிகளை சுட்டும் கொன்றுள்ளனர். இவர்கள் தமக்கு விடுமுறை வழங்குமாறு நிர்ப்பந்தித்தனர்.

**எவ்வளவுதான் முயன்றாலும் இந்த இராணுவ ஆட் சேர்ப்பில் ஒரு வெற்றி கிட்டுவது கடினமே. களமுனை நிலவரம் குறித்து சந்திரிகா அரசு எவ்வளவுதான் பொய்யான தகவல்களை தனது தொடர்பு சாதனங்களூடாக வழங்கினாலும் இன்று சிங்கள மக்கள் ஏதோவொரு வகையில் உண்மை நிலையினை அறிந்துகொண்டுள்ளனர் என்பதையே இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள தோல்வி எடுத்துக் காட்டுகிறது**

இந் நிலையில் யுத்த முனைகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான பொலிசார் தமக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆறு மாதங்களுக்கு மட்டும் யுத்தப் பிரதேசங்களில் கடமையாற்றினால் போதும் என்ற உறுதி மொழியுடன் தென் பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பட்ட பொலிசார் இரண்டு வருடங்களை கடந்துவிட்ட நிலையிலும் யுத்த பிரதேசங்களிலிருந்து மீள அழைக்கப்படவில்லை. இதனால் இவர்கள் உளவியல் ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் தம்மை சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால் சந்திரிகா அரசு ஆக்கிரமிப்புப் பிரதேசங்களின் பாதுகாப்பு விடயங்களில் மேலும் நெருக்கடிகளை சந்தித்துள்ளது.

சிறீலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிறீலால் வீரசூரியவே இராணுவத்தில் பெரும் ஆள் பற்றாக்குறை நிலவுவதை ஒப்புக் கொண்டுள்ளார்.

படைப்பலத்தை அதிகரிக்க முடிவு செய்துள்ள சந்திரிகா அரசு அதற்கென புதிய யுக்திகளை கையாள முடிவு செய்துள்ளது.

சிறீலங்கா முழுவதும் பரவலாக படைகளுக்கு ஆட்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள இவர்கள் முதலில் மாகாண மட்டத்தில் இதனை அமுல்படுத்தவும் முடிவு செய்துள்ளனர்.

இந்திய அரசு மூன்று தனியார் விளம்பர நிறுவனங்கள் மூலம் தனது இராணுவத்திற்கு கவர்ச்சியான விளம்பரங்களைப் பிரசுரித்து ஆட்களைத் திரட்டிக் கொண்டதைப் பின்பற்றி இவர்களும் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு நாட்டிலுள்ள சில முன்னணி விளம்பர நிறுவனங்களின் உதவியை நாடவுள்ளனர்.

கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் சலுகைகள், வீரதீரச் செயல்கள் குறித்து சகல தொடர்பு சாதனங்களிலும் விளம்பரப்படுத்தி ஆட்களைச் சேர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக இராணுவத்திலுள்ளவர்கள் தமது அயலர்கள், உறவினர்கள் யாரையாவது இராணுவத்தில் கூட்டி வந்து இணைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்கப் போவதாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இவர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் இந்த இராணுவ ஆட் சேர்ப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பில் ஒரு வெற்றி கிட்டுவது கடினமே. களமுனை நிலவரம் குறித்து சந்திரிகா அரசு எவ்வளவுதான் பொய்யான தகவல்களை தனது தொடர்பு சாதனங்களூடாக வழங்கினாலும் இன்று சிங்கள மக்கள் ஏதோவொரு வகையில் உண்மை நிலையினை அறிந்துகொண்டுள்ளனர் என்பதையே இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பதில் ஏற்பட்டுள்ள தோல்வி எடுத்துக் காட்டுகிறது.

இந்நிலையில், அரசு இன்று தமிழ் தேச விரோத குழுக்களின் உதவிகளையும் நாடியுள்ளது. மட்டக்களப்பில் இத் தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்த சிறீலங்கா இராணுவத் தளபதி தமிழ்க் குழுக்களின் ஆளணிகளை அதிகரித்துக் கொள்ளுமாறும், ஆயுதப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கியதுடன் கிழக்கில் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களின் பாதுகாப்பிற்கு இவர்களைப் பயன்படுத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

இவை அனைத்துமே சிறீலங்கா ஆட்சியாளர்களுக்கு ஆள் திரட்டலில் ஏற்பட்டுள்ள தோல்வியையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

# போரே சந்திரிகா அரசின் எதிர்காலம் போரே தமிழர் வாழ்வின் ஆதாரம்

சந்திரிகா அரசின் சுயலாபத்திற்காக முன்னெடுக்கப்படும் போரின் தலைவிதியை மாற்றியமைத்து வெற்றியை எமதாக்குவதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்திற்கு நீதியான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவோம்.

'சமாதானத்திற்கான போர்' என்ற போர்வையில் தமிழின அழிப்பை தீவிரப்படுத்தியது சந்திரிகா அரசு. இன்று தேர்தல் களத்தில் வெற்றி பெறுவதற்காக தமிழ் மக்களின் வாழ்விடங்களைப் போர்க்களங்களாக விரிவுபடுத்தும் திட்டங்களைத் தீட்டி வருகின்றது. சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு காலகட்டங்களிலும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைச் சட்டங்களையும், போர்ப்பிரகடனங்களையும் வெளியிடுவதன் மூலமே சிங்களப் பெரும்பான்மை மக்களின் மனங்களைத் திருப்திப்படுத்த முயன்று வந்துள்ளனர். கடந்த நான்கு வருட ஆட்சிக் காலங்களிலும் எதனையுமே சாதிக்கமுடியாத சந்திரிகா அரசு மிகுந்த நெருக்கடிகளிற்கு மத்தியில்தான் இந்தத் தேர்தல் ஆண்டைச் சந்திக்கின்றது. சென்ற தேர்தலில் சந்திரிகா போட்டிருந்த சமாதான முகமூடி கிழிந்துபோய்விட்ட காரணத்தினால் இம்முறை தேர்தலில் எந்த முகத்தைக் காட்டுவது? தமது அரசியலின் ஆயுளை நீடிப்பதற்காக தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை தீவிரப்படுத்துவதைத் தவிர அரசால் வேறொன்றையும் செய்ய முடியாது. அரசியலின் நிலைமையும் இருந்தது.



வன்னிக் காடுகளுக்குள் முடங்கிப் போயுள்ள சிறீலங்காவின் இராணுவ இயந்திரத்தை முற்றிலும் அழித்தொழிக்கும் வல்லமை எமது போராட்டத்திற்கு உண்டு. அந்த வல்லமைக்கு வலுச் சேர்க்கவேண்டியவர்கள் போராடும் வயதிலுள்ள இன்றைய இளைய தலைமுறையினர் தான். சந்திரிகா அரசின் சுயலாபத்திற்காக முன்னெடுக்கப்படும் போரின் தலைவிதியை மாற்றியமைத்து வெற்றியை எமதாக்குவதன் மூலம் தமிழ்த் தேசிய இனத்திற்கு நீதியான நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவோம்.



www.tamileelamarchive.com

# நிமிர்வு

மக்களைக் காணும் போது இடம்பெயர்வின் அவலம் தெரியும்.
வந்த இடத்திலோ மரநிழலிலே குடிசை, மரக்கிளையே பிள்ளைகளுக்கான தொட்டில்.
நல்ல குடிநீர் இல்லை, உணவுப் பொருட்கள் இல்லை, எரிபொருள் இல்லை,



அகதிகளாகப் புலம்பெயர்வது என்பது கொடுமையானது. இராணுவ நுழைவால் அல்லது இனப்போர் தொடர்ந்ததால் வாழ்ந்துகொண்டிருந்த இடத்தைவிட்டு முக்கியமான பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு இடம்விட்டுப் பெயர்வதென்பது நினைத்துப் பார்க்கமுடியாத கொடுமை. தமிழீழ மக்கள் அகதிகளாகப் போகிற வாழ்க்கை நிலை தொடர்ந்தது, தொடருகின்றது. உள்நாட்டிற்குள்ளேயும் வெளிநாட்டிலும் அகதிகளாகி அலைக்கழிந்த தமிழந் நிலை சொல்லும் தரமன்று. எல்லாச் சொத்துக்களையும் உடைய ஒருவர் அத்தனை சொத்துக்களையும் ஒருநாளில் இழந்து ஏதிலியாகி அலைவதென்றால் அது எத்தகைய கொடுமை?
டிசம்பர் 95 யாழப்பாணப் போரில் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பலாலிக் கடலேரியைக் கடந்து வன்னிப் பெருநிலப் பகுதியை நோக்கி நடந்தபடி இருந்தார்கள். கடலேரியின் மறு கரையிலே குண்டு கக்கும் விமானங்கள். அதை எதிர்த்து தாக்கும் புலிகள். குண்டு நம் தலையில் விழுமோ என்ற பயத்துடன் உயிரைக் கையில் பிடித்தபடி பயணிக்கின்ற அந்த





www.tamileelamarchive.com



ஈழம் கிடைக்கும் என்ற நிறைந்த மனதுடன் இல்லாமையை விரட்டியடித்து இருப்பதை வைத்து வாழ்க்கை. புதிய புதிய கண்டுபிடிப்புக்கள். கிடைப்பதற்குள் பொருந்திப் போகிற வாழ்க்கை. வரும் வழி மிகச் சிறியதுதான். ஆனால் அதற்குள் சேமித்துத் தொடர்கிறார்கள். மிகக்குறுகிய நாட்களுக்குள் காலூன்றி வேர்விட்டு துளிர்விட்டு கிளைத்துப்பரப்பி நிலைகொள்கிறார்கள். எத்தனை பெரிய ஆற்றல் இது! வரும் வழி மிகச் சிறியதாக இருந்தாலும் போகும் வழி அதைவிட மிகச் சிறியதாக ஆக்கி உயருகிறார்களே. இது இக்குறள்

காயம்பட்டதற்கோ உடல்நிலை சரியில்லாததற்கோ மருந்தில்லை. சுட்டெரிக்கும் வெய்யில், ஊசியாய்க் குத்தும் குளிர், மருந்தின்றிச் சாகும் அவலம். இத்தனை கொடுமைகளுக்கும் இடையில் வாழ்க்கை. என்ன வாழ்க்கை இது. மனித உரிமைகளே நசுங்கிப் போன





நிலை. பொருளாதாரத் தடை, செய்தித் தணிக்கை, பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு. அகதி நிலை யாருக்குமே அறிவிக்கப்படக்கூடாத கொடுமை. இதற்கிடையில்தான் வாழ்க்கை.

வழிப்பெற்ற பாடமோ!

ஆகாறு அளவிட்டி தயினுங்க் கேடில்லை
போகாறு அகலாக் கடை

(குறள் எண்: 478)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அரசியல் வரலாறு



# இலங்கையில் ஜனநாயகம்,

ஐரோப்பியர்கள் உலகின் பல பாகங்களிலும் குடியேற்றங்களை ஸ்தாபிக்க முற்பட்ட போது அவர்கள் அங்கு ஆயுதங்களுடன் மட்டும் செல்லவில்லை. தமது மதம், ஆட்சி முறை, கலாச்சாரம், பண்பாடு என்பனவற்றையும் கொண்டே சென்றார்கள். ஆனால் சில நூற்றாண்டுகளின் பின்னர் இந்நாடுகளைவிட்டுச் செல்லும்போது இந் நாடுகளில் திரட்டிய/ சுரண்டிய செல்வத்துடன் மட்டுமே சென்றார்கள். தமது மதம், ஆட்சி முறை, கலாச்சாரம் போன்ற பலவற்றை தமது எச்சங்களாக விட்டுவிட்டே சென்றனர்.

இவ்வாறு இவர்கள் விட்டுச்சென்றவற்றில் சில இந் நாடுகளுக்கு – மக்களுக்குப் பொருத்தப்பாடானவையாகவும் பல பொருத்தப்பாடற்றவையாகவும் இருந்தன. இவ்வாறு பொருத்தப்பாடற்றவற்றுள் ஜனநாயக ஆட்சிகூட அடங்குகின்றதா? என்பதே இன்று பரவலாக கேட்கப்படுகின்றது. ஏனெனில் மூன்றாம் உலக நாடுகளில் – அதிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளின் காலணியாக இருந்த நாடுகளில் பெரும்பாலானவற்றில் இன்று சீரான ஆட்சியும் இல்லை அமைதியும் இல்லை. அங்கு பிரச்சினைகள் எவையும் தீர்ந்தபாடும் இல்லை.

**உயர் விழுமியமான ஜனநாயகம் இலங்கைக்கு பொருந்தவில்லை**

சில நாடுகளில் ஜனநாயக ஆட்சி என்ற ரீதியில் மிக மோசமான ஆட்சிமுறையே நிலவுகின்றது. கொள்கையற்ற அரசியற்கட்சிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அன்றி ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொள்வதற்காக நாளுக்குநாள் கட்சி மாறும் அரசியல்வாதிகள், நாட்டு வளத்தை தனது வளமென தமது இஸ்டத்துக்கு ஏற்ப கையாளும் அரசியல்வாதிகள் என ஊழலும் முறைகேடுகளும் மலிவாகவேவுள்ளன.

மறுபுறம் ஜனநாயகத்தின் முக்கிய பண்பான பல கட்சி ஆட்சிமுறையை இல்லாது ஒழிக்க முற்படும் ஆளும் கட்சிகள் பெரும்பான்மை இனத்தவரின் சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தும் வகையில், சிறுபான்மை இனங்களின் அடையாளங்களை இல்லாது ஒழிக்கவும் நசுக்கவும் முற்படும் பெரும்பான்மை இனத்துவக் கட்சிகள் என ஜனநாயகத்திற்கு சவால் விடும் வகையில் அரசியல் கட்சிகள் பல நாடுகளில் ஜனநாயகம் என்ற பெயரில் தர்பார் நடத்துகின்றன.

இதனால், இக் காலணித்துவ நாடுகள் பலவற்றில் இன்று இன மோதல்களும், அமைதியின்மையும் முக்கியமானதொரு அம்சமாக மாறியுள்ளது. இந்நாடுகள் இதற்கெனப் பெரும் விலை கொடுத்து வருகின்றன. இதனால் பல நாடுகள் ஜனநாயக ஆட்சியின் வடிவத்தையே இழந்துள்ளன. இந்த வகையில் இலங்கையின் ஆட்சி முறையே ஓர் ஆபத்தான கட்டத்தில் உள்ளது எனக் கூறுதல் மிகையாகமாட்டாது.

இலங்கைக்கு பிரிட்டிஷார் அறிமுகம் செய்து வைத்த

- ஜெயராஜ் -



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அமைதி

## அரசின் ஜனநாயக விரோதச் செயல்கள் அமைதிக்கு வீழ்ந்த அடிகள்

ஆட்சிமுறையானது ஒரு வளர்ச்சி கண்ட சமூகத்தின் ஆட்சிமுறைதான். அதாவது மக்களே தமது ஆட்சியாளர்களையும், ஆட்சியையும் தெரிவு செய்துகொள்வதென்பதும், தவறான ஆட்சியாளர்களை நிராகரித்து ஓரம்கட்டி விடுவதற்கும் இவ் ஆட்சிமுறையில் இடமுண்டு. இந்த வகையில் மக்களுக்கான ஆட்சி என்ற ரீதியில் இது உயர்வானதே.


ஆனால் இது இலங்கைக்குப் பொருத்தப்பாடானதா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். ஏனெனில் இவ் ஆட்சிமுறையானது நீண்டகால மரபுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதாவது சட்டங்கள் பெறும் முக்கியத்துவத்தைப் போன்று மரபுகளும் இவ் ஆட்சிமுறையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகையினால் இது மனிதர் பண்புகளின் உயர் விழுமியங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டது. அத்தோடு ஒரு பிரதேசத்தினதோ அன்றி மக்களினதோ மரபுகள் வேறொரு பிரதேசத்திற்கோ அன்றி மக்கள் கூட்டத்திற்கோ பொருத்தப்பாடானவையாக இருக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே. அதாவது ஒரு மக்களின் பழக்க வழக்கங்கள், நாகரீக வளர்ச்சி, கலை, பண்பாடு, அம் மக்களின் கூட்டத்தின் மனோயியல் வளர்ச்சி என்பன மரபுகள் உருவாகக் காரணமாகின்றன.

இந்த நிலையில் பிரிட்டிஷார் தமது மக்கள் கூட்டத்திலிருந்து வளர்ந்துவந்த மரபுகள், சட்டங்கள் என்பனவற்றின் அடிப்படையிலான ஆட்சிமுறை ஒன்றை இலங்கை போன்ற வேறுபட்ட இன, மத, கலை, பண்பாடு கொண்ட பிரதேசத்தில் அறிமுகம் செய்தமை என்பது எத்தனை தூரம் பொருத்தப்பாடானதாக அமைய முடியும்? அதிலும் வரலாற்று ரீதியிலேயே ஏனைய இனங்களையும் மதங்களையும் அனுசரித்துச் செல்லும் உயர்ந்த மனப்பக்குவமும், தாராள மனமும் கொண்டிராத ஒரு வெறிபிடித்த பெரும்பான்மை இனத்தின் ஆட்சிக்குள் சிறுபான்மை இனம் ஒன்றை உட்படுத்தியமை எந்தவகையில் சரியானதாக அமையமுடியும்.

ஐரோப்பியரின் காலணியாக இலங்கை சுமார் நான்கரை நூற்றாண்டு காலம் இருந்துள்ளது. இதில் இறுதியாக ஆட்சி செய்த பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் சுமார் ஒன்றரை நூற்றாண்டு இருந்துள்ளது. பிரிட்டிஷார் இலங்கை ஒரு சிறு தீவு என்ற ரீதியிலும் தமது நிர்வாகத்தை இலகுபடுத்தும் வகையிலும் இரு இனங்களையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்திருக்கலாம்.

ஆனால் இவர்களுக்கு இலங்கைத் தீவில் வரலாற்றுப் பகை கொண்ட இரு இனங்கள் உள்ளன என்பது நன்கே தெரிந்திருக்கும். இதனை மகாவம்சம், தீபவம்சம் போன்ற இனவாத நூல்களிலிருந்து புரிந்துகொண்டிருக்க முடியும்.

இதுதான் ஒரு புறமிருக்க போத்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்த போது வடக்கில் தமிழர்களுக்கென






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தனியரசு இருந்தது என்பதும் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்டவையாக இருந்தன. இவை ஆங்கிலேயர் புரிந்துகொள்ளமுடியாதவையாக இருந்திருக்க முடியாது.

இவை தவிர பிரிட்டிஷார் ஆட்சி அதிகாரத்தில் இலங்கையருக்குப் பங்கு வழங்கும் நிலை உருவான காலத்திலிருந்தே – அதாவது 20–ம் நூற்றாண்டின் முதற் காற்பகுதியிலிருந்தே சிங்களப் பொரும்பான்மைத் தலைவர்கள் சிறுபான்மையினரை ஓரம்கட்டத் தொடங்கிவிட்டமையும், தமிழர்களில் சிலர் விழித்துக்கொண்டு தனித்துவமாகச் செயற்படத் தொடங்கியமையும், ஆட்சி அதிகாரத்தில் கூடுதல் பங்கு கோரியதையும் பிரிட்டிஷார் கருத்திற்கொள்ளாமல் போனது அவர்களின் பெரும் தவறாகும்.

ஏனெனில் சிங்களவர்கள் தமிழர்களுடன் நேர்மையாகவும், நீதியாகவும் நடந்துகொள்ளமாட்டார்கள் என்பதை வெளிக்காட்ட 1948–ம் ஆண்டிற்கு முன்னரே பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன. 1922–ல் சேர்.பொன்.அருணாசலத்திற்கு சட்டசபையில் இடம் ஒதுக்கித் தருவதாக சேர்.ஜேம்ஸ் பீரிசும், ஈ.கே.சமரவீரவும் எழுத்து மூலம் கொடுத்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறினர். இதனால் மனமுடைந்த சேர். பொன். அருணாசலம் பதவி விலகவேண்டி வந்தது.

இதே போன்றே 1934–ல் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு அமைச்சரவையில் இடமளித்தல் கூடாது என்ற ஒரே நோக்கில் தனிச் சிங்கள அமைச்சரவை திட்டமிட்ட ரீதியில் அமைக்கப்பட்டது. இவை ஒருபுறம் இருக்க 1944 மே மாதம் உத்தியோகபூர்வ மொழியாக சிங்களத்தை ஆக்கவேண்டும் என தீர்மானம் ஒன்றை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டு வந்தமை இலங்கையில் பௌத்த சிங்களவர் தமது ஆட்சியை நிறுவுவதிலும், சிறுபான்மையின் அதிகாரங்களை ஒடுக்குவதிலும் எத்தனை அக்கறை கொண்டிருந்தனர் என்பதை சுதந்திரத்தின் முன்பே தெளிவாக வெளிப்படுத்துகின்றது.


## பெரும்பான்மையினரின் ஆட்சி என்பது பெரும்பான்மை இனத்தின் சர்வாதிகாரமாகியது

ஆனால் பிரிட்டிஷார் இதனைக் கண்டுகொள்ளவில்லை. சுதந்திரம் பெற்ற இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பை வரைந்த சோல்பரி பிரபு தமிழர் தரப்பில் இருந்து முன்வைத்த 50:50 கோரிக்கையை புறந்தள்ளினார். இதே சமயம் புதிய அரசியல் யாப்பில் 29–ம் பிரிவு சிறுபான்மையினருக்கே பாதுகாப்பு அளிக்கும் என்றார்.

இங்குதான் பிரித்தானியர் இலங்கையில் ஓர் நீண்ட போர் நிகழ்வதற்கு வழி சமைத்தனர். அதாவது இலங்கையில் தமிழருக்கு ஏற்படக்கூடிய அவலத்தை முன்னுரைக்கக் கூடியதற்கான சமிக்ஞைகள், ஆதாரங்கள் இருந்தும் பிரிட்டிஷார் அதனைப் பொருட்படுத்தவில்லை. ஜனநாயகம் பெரும்பான்மையினரது ஆட்சி என்ற ரீதியில் சிறீலங்காவில் பெரும்பான்மை இனத்தில் சர்வாதிகாரத்திற்கு வழிசமைத்துவிட்டுச் சென்றனர்.

இதனைப் பிரிட்டிஷார் இலங்கையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இன மோதல்கள் குறித்து சரியான மதிப்பீட்டை மேற்கொள்ளமுடியாது செய்தார்களா? அன்றி இவ்வாறான மோதல்கள் ஏற்படுவதே தமது எதிர்கால நலனுக்கு அனுகூலமானது என்ற நோக்கிலேயே செய்தார்களா என்பதை உறுதிபடக் கூறமுடியாது.

ஆனால் சுதந்திர இலங்கைக்கான அரசியல் யாப்பை வழங்கிய சோல்பரிப் பிரபு சுமார் ஒன்றரை தசாப்தத்தின் பின்னர் தமது தவறுக்கான ஒப்புதல் வாக்கு மூலத்தை பாமர் என்பவர் இலங்கை குறித்து எழுதிய ஒரு புத்தகத்தின் முகவுரையில் வழங்கியிருந்தார். "இந்த இரண்டு சமூகங்களுக்கும் இடையிலான நீண்ட பகைமை பற்றிய ஒரு மேலோட்டமான கனவே ஆணைக்குழுவிற்கு இருந்தது" எனக் குறிப்பிட்டுள்ள அவர், "பின் விளைவுகளை





www.tamileelamarchive.com

வைத்துப் பார்க்கையில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, நைஜீரியா, போன்ற நாடுகளில் அரசியல் யாப்புகளில் காணப்படுவது போன்று அடிப்படை உரிமைகளை எமது ஆணைக்குழுவிற்கு விதந்துரைக்காமற் போனமை மிக வருத்தத்திற்குரியதாகின்றது" என தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இலங்கைக்கான சுதந்திரம் போராடிப் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அல்ல. பிரிட்டிஷாரிடம் இருந்து அரசியல் சீர்திருத்தங்கள் கோரியே சிங்கள அரசியல் தலைமைகள் லண்டனுக்கு மனு போட்டுக் கொண்டிருந்தன. ஆனால், இந்தியாவைவிட்டு வெளியேறும் சூழ்நிலை வந்ததும் இலங்கையை வைத்துக் காப்பது தேவையற்றதும், பொருட் செலவீட்டுடன் கூடியது என்ற நிலையில் பிரிட்டிஷார் தமது மேற்பார்வைக்குட்பட்டதான சுதந்திரம் ஒன்றை வழங்கிவிட்டுச் செல்ல முன்வந்தனர்.

இவ்வாறாக எதிர்பாராததும், கோராததுமான சுதந்திரமும் அதிகாரமும் கையில் கிடைக்கப்பெற்ற வேளையில் சிங்களத் தலைவர்கள் தமது அதிகார பலத்தை தமிழர்கள் மீதே பிரயோகிக்க முற்பட்டனர். இதன் மூலம் தமிழர்கள் அரசியலில் பலம் பொருந்திய சக்தியாவதை தடுப்பதும், தமிழர்கள் அரச நிர்வாகத்தில் பெற்றுக்கொண்டிருக்கும் முக்கியத்துவத்தை இல்லாது ஒழிப்பதுமே அவர்களின் குறியாகவும் இருந்தது. இந்த வகையில், இவர்களின் முதற்குறியாக மலையகத் தமிழ் மக்கள் இருந்தனர்.

'இலங்கை சுதந்திரம்' பெற்ற வேளையில் பாராளுமன்றத்தில் 40 வீதமான இடத்தினை இடதுசாரிகளும், சிறுபான்மையினரும் பெற்றிருந்தனர். இது பேரினவாத ஆட்சியாளருக்கு அதிருப்தி அளிப்பதாகவே இருந்தது. இதன் விளைவாக இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தில் – அதாவது சுதந்திரம் பெற்ற ஆண்டே கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமைச் சட்டத்தின் பிரகாரம் பல லட்சக்கணக்கான மலையகத் தமிழ் மக்கள் பிரஜா உரிமையை இழந்தனர். இதே சமயம், 1949–ல் கொண்டுவரப்பட்ட பாரளுமன்ற தேர்தல்கள் (திருத்த) சட்டம் இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்ற நிலையை உருவாக்கியது. இதன் மூலம் மலையகத் தமிழ் மக்கள் இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் இருந்து புறம்தள்ளி வைக்கப்பட்டனர்.

**அரசியல் யாப்பு மாற்றங்கள் தனியாக சிறுபான்மை இனத்தவர்களின் உரிமையைப் பறிப்பவையாக மட்டுமல்ல, ஆட்சி அதிகாரத்தில் இருப்பர்வர்களைப் பலப்படுத்துபவையாகவும் இருந்தன**

இதனை வேறுவிதமாகக் கூறுவதானால், பிரிட்டிஷார் சிங்களப் பெரும்பான்மையினரிடம் விட்டுச்சென்ற ஜனநாயகம் முதல் மேற்கொண்ட நடவடிக்கை மலையகத் தமிழ் மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கி அரசியல் அனாதைகள் ஆக்கியதெனலாம்.

பேரினவாதத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை இலங்கைத் தமிழர் மீது திரும்பியது. 1958–ல் தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இலங்கையில் எதிர்கால அரசியலில் பல்வேறு பிரச்சினைகளும், சர்ச்சைகளும் இதில் இடம் அளிக்கும் என எச்சரிக்கப்பட்டபோதும் பேரினவாத ஆட்சியாளர்கள் இதனைப் பிரகடனம் செய்தனர். இதுவே இலங்கையில் அமைதி இன்மைக்கான அடிப்படைக் காரணமுமாக மாறியது.

இதேசமயம், சிறுபான்மை இனத்தவர் மீதான ஒடுக்குமுறை சிங்கள அரசியல் கட்சிகளுக்கு இடையிலான அதிகாரப் போட்டியுடன் மேலும் தீவிரமாக வளர்ச்சி கண்டு சென்றது. அத்தோடு ஒடுக்குமுறை நடவடிக்கைகள் பலவழிப்பட்டவையாகவும் இருந்தன. இது ஒருபுறம் அரசியல் யாப்பு மற்றும் சட்டங்கள் பாற்பட்டதாகவும் இருக்கையில், மறுபுறம் நில ஆக்கிரமிப்பு, பொருளாதார ஒடுக்குமுறை என்ற வகையில் அமைந்தவையாக இருந்தன.

இந்த வகையில், தனிச் சிங்கள மொழிச்சட்டத்தின் பின்னர், 1972–ல் அன்றைய மக்கள் முன்னணி அரசாங்கம் அறிமுகம் செய்த அரசியல் யாப்பும், சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மையினருக்கு 29–ம் பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பைக் கூட இல்லாது ஒழித்தது. இவ் அரசியல் யாப்பிற்கு பேரினவாதிகளுடன் சேர்ந்து சிங்கள இடதுசாரிகளும் ஆதரவு வழங்கி அவர்களும் ஒடுக்குமுறையின் அங்கமாயினர்.

இதையடுத்து 1978–ல் கொண்டுவரப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசியல் யாப்பானது இலங்கையில் ஒரு நிறைவேற்று அதிகாரம்



www.tamileelamarchive.com

கொண்ட ஜனாதிபதியை உருவாக்கி உலகிலுள்ள எந்த ஜனநாயக நாட்டிலும் இல்லாதளவிற்கு ஒருவரிடம் அது ஆட்சியதிகாரத்தை ஒப்படைத்திருந்தது. இது பேரினவாதத் தலைமைகள் தமது விருப்பத்திற்கு ஏற்ப சிறுபான்மை இனத்தினரை ஆட்டிப் படைப்பதற்கு அடிப்படையாகியது.

ஆனால், அரசியல் யாப்பு மாற்றங்கள் தனியாக சிறுபான்மை இனத்தவர்களின் உரிமையைப் பறிப்பவையாக மட்டுமல்ல, ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களைப் பலப்படுத்துபவையாகவும் இருந்தன. குறிப்பாக 1978–ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டுவந்த அரசியல் யாப்பானது ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுபவர்களை ஒரு சர்வாதிகாரியாக்குகின்றதென்றால் அது மிகையாகாது. இதனை இவ் அரசியல் யாப்பின் கீழ்ஆட்சிக்கு வந்த அனைவருமே பயன்படுத்திக் கொண்டனர். அதாவது சர்வாதிகாரிகளாகவே நடந்துகொண்டனர்.

இன ஒடுக்குமுறையின் அடுத்த அம்சமாக இனக்கலவரங்கள் காலத்துக்கு காலம் கட்டவிழ்த்துவிடப்பட்டன. 1956, 1958, 1977, 1981, 1983–ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தமிழருக்கு எதிரான பாரிய வன்முறைகளில் அரசாங்கங்களே பின்னணியில் இருந்தன. அல்லது கண்டுகொள்ளாது இருந்தன. இதே வேளை 1983–ம் ஆண்டிற்குப் பின்னர் அரச பயங்கரவாதம் என்பது நேரடியாகவே தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இதற்கு அனுசரணையாகப் பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன முழு அளவில் பயன்படுத்தப்பட்டன.

இந் நிலையானது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் யாவற்றையும் மறுப்பதாக இருந்தது. இதனால் உருவாகிய தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை ‘பயங்கரவாதம்’ எனச் சித்தரிக்க முயன்ற அரசாங்கம், சிறீலங்காவின் பெரும் தொகை வளத்தையும் யுத்தத்திற்கென திசைதிருப்பியது.

இதன் விளைவானது இலங்கையில் ஜனநாயகம் என்பதை முற்றிலுமே கேலிக்குள்ளாக்குவதாக இருந்தது. மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் போலியானதும் மோசடியானதுமான தேர்தல்களை ஆளும் கட்சிகள் நடத்தி முடித்தன. இது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறை பண்படாத தலைமைகளிடமோ அன்றி இனவாத தலமைகளிடமோ கிடைக்கப்பெற்றால் ஜனநாயகத்திற்கு விளையக்கூடிய ஆபத்துக்கள் இதன்மூலம் உணர்த்தப்பட்டது.

1977–ம் ஆண்டின் பின்னர் இலங்கையில் பல தேர்தல்கள் நடந்தன. இதில் சில வடக்கு – கிழக்கில் இடம்பெறாமலும் இருந்தன. ஆனால் இடம்பெற்ற எவையுமே நேர்மையாகவும் ஜனநாயக வரம்புகள், பண்புகள் என்பவற்றிற்கு உட்பட்டவையாகவும் இருக்கவில்லை. ஆட்சியாளர்கள் கூறிக்கொள்வதற்கு மட்டுமான தேர்தலாகவே இது இருந்தது.

இவ்வாறாக ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்துவைத்த ஒவ்வொரு அடியும் இலங்கையின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் எதிராக அவர்கள் எடுத்துவைத்த அடிகளாகவே இருந்தன. ஆனால், இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக எடுத்துவைக்க முனைந்தார்கள். எனினும் அது இலங்கை பூராகவுமே சமாதானத்திற்கும் அமைதிக்கும் எதிரான நடவடிக்கையாகவும், ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்முறையாகவும் இருக்கும் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

ஆனால், சிறுபான்மையினரின் அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் என்பனவற்றிற்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்கள் 40 களின் பிற்பகுதியில் இருந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் இன்று சிங்களவர்களின் அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் என்பனவற்றையே இல்லாது ஒழித்துவிடும் கட்டத்தை அடைந்துள்ளது. அதே போன்றே சிறுபான்மை இனத்தவருக்கு எதிராக என்ற ரீதியில் உருவாக்கிய ஒடுக்குமுறைச் சட்டங்கள், அரச பயங்கரவாதச் செயற்பாடுகள் இன்று சிறுபான்மையினர் மீதானவையாக மட்டுமல்ல பெரும்பான்மையினர் மீதானவையாகவும் அவர்களின் ஜனநாயக உரிமைகளைப் பறிப்பவையாகவும் அமைதியைக் கெடுப்பவையாகவும் வளர்ச்சி கண்டுள்ளன.

அதாவது இலங்கைக்கு பிரிட்டிஷார் விட்டுச் சென்ற அரசியல் அமைப்பு – அதாவது பொருத்தப்பாடானதொரு ஆட்சிமுறையாக அமையவில்லை என்பதையே இது வெளிக்காட்டுவதாகவே உள்ளது. ஏனெனில் இவ் ஆட்சியானது பல இனங்கள் வாழும் பிரதேசம் ஒன்றில் பெரும்பான்மை இனத்தின் சர்வாதிகாரத்திற்கும் பின்னர் அதன் வளர்ச்சிப் போக்கு பெரும்பான்மை இன ஆளும் கட்சியின் சர்வாதிகாரத்திற்கும் கொண்டுவந்துவிட்டுள்ளது. இதனால் உயர்ந்த பண்புகளும், விழுமியங்களும் கொண்ட ஜனநாயக ஆட்சி முறையின் குறைபாடுகளுக்கு இலங்கை ஓர் எடுத்துக்காட்டாகியுள்ளது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் படையினரின் சதிச்செயல்கள்

சோதனைச் சாவடிகளாலும் —சுற்றிவளைப்புத் தேடுதல்களாலும் ஊரடங்குச் சட்டங்களாலும் குடாநாட்டு மக்களை சிறைக்கைதிகளாக வைத்திருந்த சிங்களப்படைகள், இப்போது, அடையாள அட்டைத் திட்டம் மற்றும் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு முயற்சிகள் என்று மென்மேலும் தமிழ் மக்களை இம்சிக்கத் தொடங்கியுள்ளன. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதியிலும் இத்தகைய ஆட்சேர்ப்பு முயற்சிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் தமிழ்த் தேசிய இராணுவம் என்ற பெயரில் இந்தியப் படைகள் தமக்கு உதவியாக ஒரு துணை இராணுவப் படையை நிறுவ தமிழ் இளைஞர்களை இழுத்தது போல் இப்போது சிங்களப் படைகளும் இராணுவத்திற்கு தமிழர்களை இணைக்கும் முயற்சி என்ற கோதாவில் ஒரு துணை இராணுவப்படையை அமைக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன.

முதற்கட்டமாக எந்த ஒரு தமிழ் இளைஞனும் சிங்களப் படையில் இணைய முன்வரவில்லை என செய்திகள் கூறுகின்றன. இந்தியப் படைகளின் முயற்சியும் முதலில் தோல்வி கண்டிருந்தது. அதன் பின்னரே பலவந்தமாக இளைஞர்களைப் பிடித்து கட்டாய இராணுவப் பயிற்சி கொடுத்து – புலிகளுக்கு எதிராக சண்டையிடும்படி அவர்களை நிர்ப்பந்தித்திருந்தது.

இதேபோன்று அடுத்தடுத்த கட்டங்களில் சிங்களப்படையும் பலவந்தமாக தமிழ் இளைஞர்களை இராணுவத்தில் சேர்க்க முயற்சிகளை மேற்கொள்ளலாம் என கருதப்படுகின்றது. இந்த முயற்சிக்காக ஏற்கெனவே இராணுவத்திற்கு துணை புரியும் தமிழ்க்கூலிக் குழுக்களில் சிலவற்றை பயன்படுத்தவும் இராணுவ தலைமைப்பீடம் திட்டம் வகுக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.



ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இன்னொரு நகரான வவுனியாவில் சில தமிழ்க் குழுக்கள் இந்த பலவந்த ஆட்சேர்ப்பை சிறியளவில் ஆரம்பித்துவிட்டதாக வவுனியா சென்று வரும் வன்னி வாழ் மக்கள் ஆதாரங்களுடன் தகவல் கூறுகின்றனர்.

இந்தியப்படைகள் செய்ததைப் போல ஒரு தமிழ்க்கூலிக்குழுவை மட்டும் பலவந்த ஆட்சேர்ப்புக்கு பயன்படுத்தியதைப்போலில்லாது, சிங்கள இராணுவத் தலைமைப் பீடம், மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தமிழ்க்குழுக்கள் என்ற ரீதியில் பலவந்த ஆட்சேர்ப்பிற்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ் இளைஞர்களை பலிக்கடாக்கள் ஆக்கும் இந்த சதித் திட்டம் அங்கே வசிக்கும் மக்களை கிலிகொள்ளச் செய்துள்ளது.

இதே வேளை, கொழும்பில் தமிழ் மக்களை அடையாளம் காட்ட விசேட அடையாள அட்டைத் திட்டத்தை அமுல் செய்த சந்திரிகா அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வயது ரீதியாக மக்களை வகுத்து ஒவ்வொரு பகுதியினர்க்கும் வேறு வேறு அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்த அடையாள அட்டைத் திட்டங்கள் முற்றுமுழுதாக இராணுவ நோக்கம் கொண்டவை.

ஏற்கெனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்திலுள்ள கொடூரமான சரத்துக்களால் சொல்லெணா கொடுமைகளை அனுபவித்துவரும் தமிழ் மக்கள் இந்த அடையாள அட்டைத் திட்டங்களினால் மென்மேலும் வாழ்வியல் துன்பங்களையும் உயிர் ஆபத்துக்களையும் எதிர்கொள்ளப் போகின்றனர்.

இவையெல்லாம் சிங்கள அரசின் அப்பட்டமான தமிழர் விரோதக் கொள்கையின் பகிரங்கவெளிப்பாடுகள் ஆகும்.

விடுவிக்கப்பட்ட பகுதிகள் எனக் கூறிக்கொண்டு ஒரு நரகவாழ்க்கையை தமிழ் மக்களுக்குப் பரிசாக சிங்கள அரசு, வழங்கி வருகின்றது என்பதே உண்மையாகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்கள அரசின் புதிய கல்வித் திட்டம்

சிறீலங்காவில் மாறி மாறி இரு பிரதான கட்சிகளும் ஆட்சிக்கு வருவது போன்று கல்விக் கொள்கையும் காலத்திற்குக் காலம் அரசாங்கத்திற்கு அரசாங்கம் மாற்றம் கண்டு வந்துள்ளது. இந்த வகையில் பெரும் மாற்றம் ஒன்றினை சந்திரா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கமும் மேற்கொண்டுள்ளது.

இவ்வாண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கை பூராவும் அமுலுக்கு கொண்டுவரப்படும் இக் கல்வித் திட்டமானது, ஆண்டு ஒன்று, ஆண்டு ஆறு, கல்விப் பொதுத் தராதர உயர்தரம், பல்கலைக்கழக தெரிவு முறைமை என்பவற்றில் பாரிய அளவில் மாற்றங்களைக் கொண்டதாகவுள்ளது.

இத்திட்டத்தின்படி கல்வியானது இடைநிலைக்கல்வி, உயர்தரக்கல்வி என இரு பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஒன்பது வரையான வகுப்புக்கள் வரை இடைநிலைக்கல்வி எனவும், ஆண்டு பத்துத் தொடக்கம் ஆண்டு பதின் மூன்று வரையான வகுப்புக்களைக் கொண்டது உயர்தரக் கல்வி எனவும் பிரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலைகளும் இரண்டாக்கப்பட்டு இரு பிரிவுகளும் தனித்தனியாக இயங்க வேண்டும் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வகையில் அடிப்படைத் தகைமைகளாக தொடர்பாடல் – இதில் எண்ணறிவு சித்திர அறிவு எனவும், சூழல் தொடர்பான தகைமைகள் – இதில் சமூகச் சூழல் உயிரியற் சூழல், பௌதீகச் சூழல் என்பன பற்றியும் – ஒழுக்கமும், சமயம் என்பன தொடர்பானதகைமைகளும், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் தகைமையும், கற்றலுக்காக கற்றல் தொடர்பான தகைமையும் என இவை செய்கின்றன.

மேலே கூறப்பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பௌதீக வளங்களும் உயிரியல் வளங்களும் உருவாக்கப்படுதல் அவசிய தேவை ஆகிறது.

பௌதீக வளங்கள் என்பதில் மாணவர்களுக்கான வகுப்பறை, தனியான காற்றோட்டம் கொண்டதாகவும் ஒரு மாணவனுக்கு பதின்னாங்கு சதுர அடி விஸ்தீரணம் கிடைக்கக்கூடிய வகையில் 35 மாணவர்களைக் கொள்ளக்கூடியதாக வகுப்பறைகள் இருக்க வேண்டும். அத்துடன், விளையாட்டு மைதானம் அதில் விளையாட்டுச் சாதனங்களாக நுழைந்து போகும் உபகரணம், சீசோ, சறுக்கீஸ், ஊஞ்சல் என்பனவும் கற்றல் சாதனங்கள் ஆகியனவும் போதியளவு இருத்தல்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழ் மாணவரின் எதிர்காலம்?

வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

உயிரியல் வளங்கள் என்பதில் போதிய பயிற்சிபெற்ற ஆசிரியராகவும் ஆங்கிலம் கற்பிக்கும் தகைமை பெற்றவராகவும் இருத்தல் வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த அடிப்படையில் அமுலுக்கு கொண்டு வரப்படும் இப் புதிய கல்விக்கொள்கை குறித்து இரு முக்கிய கேள்விகள் எழுகின்றன.

1– இக் கல்விக் கொள்கை வடக்கு கிழக்கு உட்பட இலங்கைக்குப் பொருத்தப்பாடானதா?

2– யுத்தச் சூழல் நிலவும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் நடைமுறையில் சாத்தியமானதா?


21–ம் நூற்றாண்டு நோக்கிய பயணத்திற்கு இக் கல்விக் கொள்கை அவசியமானதெனவும் சகலருக்கும் பொருத்தமான கல்வி என்ற ரீதியிலும் இக் கல்வித் திட்டத்திற்கு அறிமுகம் கொடுக்கப்பட்டாலும் இதன் அடிப்படை நோக்கமானது திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ற விதத்தில் மாறிவரும் பொருளாதார ஒழுங்கிற்கு ஏற்ப மாணவர்களை – அதாவது எதிர்காலச் சமுதாயத்தை தயார் படுத்துதல் என்பதேயாகும்.

வேறு விதமாக இதனைக் கூறுவதானால் உலக வங்கியின் சிபாரிசிற்கேற்ப அமுல் படுத்தப்படும் இக் கல்வித்திட்டமானது சர்வதேச நிதி அமைப்புக்களின் பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில் – பல்தேசியக் கம்பனிகளின் தற்போதைய, எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கில் உருவாக்கப்படுகின்றது எனலாம்.

அதாவது பிரித்தானியர்கள் இலங்கைக்கு அறிமுகம் செய்த கல்விக் கொள்கையானது இலங்கையில் “வைற் கொலர் ஜொப்ஸ்” ற்கு மாணவர்களைத் தயார் செய்யும் பணிகளைச் செய்து வந்ததெனின் புதிய கல்விக் கொள்கையானது உலகிற்குப் புதிய பொருளாதார ஒழுங்கை நிர்ணயம் செய்ய முற்படுகின்றவர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவாக்கப்படுகின்றது எனலாம்.

அதாவது உலக வங்கி இக் கல்விச் சீர்திருத்தத் திட்டத்தை அறிமுகம் செய்வதில் ஆர்வமாக இருக்கின்றதெனினும், உலகவங்கியைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் செல்வாக்குமிக்க நாடுகளே இதற்கான தூண்டுதலாக இருக்கின்றன எனலாம்.

இந்த வகையில் பார்க்கையில் 21–ம் நூற்றாண்டை நோக்கி உலகம் காலடி எடுத்து வைக்கையில் உலகில் உள்ள வறிய நாடுகளும் செல்வம் படைத்த நாடுகளின் தேவைக்கேற்ப திருப்பப்பட்டிருத்தல் வேண்டுமென்றே உலக வங்கி போன்ற அமைப்புக்களும் எதிர்பார்க்கின்றன. இதனை முன்னைய நிலையில் இருந்து சிறு மாற்றம் எனலாம்.




முன்னர் தனியாகப் பிரிட்டனின் நலுனுக்கேற்ப அமைந்திருந்த கல்விக் கொள்கை இன்று உலக முதலாளிகளின் தேவைக்கேற்ப மாற்றப்பட்டுள்ளதெனாலாம்.

ஆனால் பிரிட்டனின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்ட கல்விக் கொள்கையானது இலங்கையின் தேவைக்கேற்ப அமையாது தோல்வி கண்டது போன்று உலக வங்கியின் – அதாவது உலக முதலாளிகளின் தேவைக் கேற்ப மாற்றப்படும் இக் கல்விக் கொள்கை எவ்வாறு இலங்கைக்கு அனுகூலமாக அமையும் என எதிர்பார்ப்பது? ஆகையினால் இதுவும் ஏமாற்றம் அளிப்பதாக இருப்பின் அதில் ஆச்சரியப்பட எதுவும் இருக்கமாட்டாது. இதேவேளை 21–ம் நூற்றாண்டில் கணணிகள் பற்றியும் இன்ரநெற் பற்றியும் அறியப்படாமல் இருப்பது மிகப்பெரும் பின் தங்கிய நிலைதான். ஆனால் இரவல் இன்ரநெற்றும் இரவல் கணணியும் எமது சொந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வாகிவிட முடியுமா என்பதும் கேள்விக்கிடமானதேயாகும்.

இவ்வாறான இப் புதிய கல்வித் திட்டமானது எத்தனை தூரம் பிரச்சினைகளுக்கும் தேவைகளுக்கும் தீர்வானதாக அமையும் என்பது ஒருபுறம் இருக்கையில், இது எத்தனை தூரம் இலங்கையில் நடைமுறைச் சாத்தியமானது என்பதும் முக்கிய கேள்வியாகும். ஏனெனில் பழைய கல்வித் திட்டமே வளப் பற்றாக்குறையால் பெரும் கேள்விக்கும் அவ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்கள அரசின் புதிய கல்வித் திட்டம்

லத்திற்கும் உள்ளாகியிருந்தது. ஆகையினால் புதிய கல்வித் திட்டத்திற்குத் தேவையான பௌதீக உயிரியல் வளங்கள் எவ்வாறு தமிழ் பிரதேசங்களில் தமிழ் மாணவர்களுக்கு கிடைக்கப் பெறும் என்பது நியாயமான கேள்வியாகவே இருக்கும்.

★★★

இதுகுறித்து முல்லை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. குருகுலராஜா அவர்களிடம் வினவியபோது;

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரை வன்னிக்கென ஒரு பல்கலைக்கழகம் இல்லாதவரை இப்புதிய கல்வித்திட்டத்தால் எந்த வகையிலும் உச்சப் பயன் பெற முடியாத நிலையே உள்ளது.

ஏனெனில் இப்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள கல்வித் திட்டம் இரண்டாயிரமாம் ஆண்டை மையமாகக் கொண்டு ஒரு உறுள் கலைத்திட்டமாக அதாவது மாற்றமடையும் உலகிற்கு ஏற்றவகையில் மாறுபடும் கல்வித் திட்டத்தைக் கொண்டது.

பழைய கல்வித் திட்டம் உயர் கல்விக்காக தெரிவு செய்யப்படும் பத்துவீத மாணவர்களின் நலனுக்காகவே உள்ளது. மிகுதியான 90 வீத மாணவர்களையும் பாழடிப்பதாகவே இருந்தது. அந்த 90 வீத மாணவர்களும் மேற்கொண்டு படிக்க முடியாத நிலையில் சித்தியடைந்தும் ஒரு எதிர்காலம் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஆனால் புதிய கல்வித் திட்டமானது தொழில்நுட்பக் கல்வியை அடிப்படையாகக் கொண்டுள்ளமையால் உயர்தரப்பரீட்சையை எழுதி வெளியேறும் மாணவர்களும் தமது எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான கல்வியை தொடர்ந்து பெறக்கூடிய வாய்ப்புண்டு. ஆனால் இவ்வாய்ப்பைப் பெறுவதற்கு எமது மாவட்டத்திற்கென ஒரு பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி என்பன இன்றியமையாதவையாக உள்ளன. இவை இல்லாத நிலையில் இப்புதிய கல்வித் திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய பலனையும் அடையமுடியாத நிலையே ஏற்படும்.

இதேவேளை ஆசிரியர்களைப் பொறுத்த வரை 50 வீதமான ஆசிரியர்களே எமது மாவட்டத்தில் உள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் 192 தொண்டர் ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். ஆனால் விஞ்ஞான ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறையாகவே உள்ளனர். அதிலும் உயிரியல் விஞ்ஞான ஆசிரியராக ஒருவர் மட்டுமே உள்ளார்.

எனவே, இங்குள்ள உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, மற்றும் பௌதீக விஞ்ஞானப் பிரிவு மாணவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் முழுக்க முழுக்க தங்கள் சொந்த முயற்சியிலேயே கற்கவேண்டிய நிலையிலுள்ளனர்.



புதிய கல்வித் திட்டத்தைப் பொறுத்த வரை அதற்கென ஆசிரியர்களை பயிற்றுவிக்கவேண்டும். இதற்காக முதன்மை ஆசிரியர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரை பயிற்சிக்காக தென்பகுதிகளுக்கு அனுப்பவேண்டிய தேவையுள்ளது. ஆனால் போக்குவரத்துச் சீரின்மையாலும் கடிதப் போக்குவரத்து தாமதத்தினாலும் இவர்களை பயிற்சிக்கு அனுப்புவதில் பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றன.

இந் நிலையில் அண்மையில்கூட பயிற்சிக்கு அனுப்பும்படி அங்கிருந்து அனுப்பப் பட்ட கடிதம் மிகவும் காலம் தாழ்த்தியே எமக்குக் கிடைத்தது. இதனால் அப் பயிற்சியைப் பெறமுடியாமலே போய்விட்டது. பயிற்சியின்றி இப் புதிய கல்வித் திட்டத்திற்கமைய மாணவர்களுக்கு கற்பிப்பது இயலாத விடயம். இதேவேளை தென்னிலங்கை மாணவர்களின் கல்வித் தரத்தோடு எமது மாணவர்களின் கல்வித் தரத்தை ஒப்பிடும்போது பெரும் வீழ்ச்சிப் போக்கே காணப்படுகின்றது. அண்மையில் நடத்தப்பட்ட கணிப்பீட்டில் இருந்து இது தெரிய வந்துள்ளது.

பாடசாலைகள் மட்டத்தில் க.பொ.த.சாதாரணதர மாணவர்களின் வினையாற்றுச் சுட்டிகளைப் பார்க்கும் போது 1997–ம் ஆண்டு நடத்தப்பட்ட கணிப்பின்படி சிறீ ஜெயவர்த்தனபுர தேவி பாலிகா மகாவித்தியாலையம் 87 புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் முன்னணியில் உள்ளது. எமது மாவட்டத்தில் செம்மலை மகாவித்தியாலயம் 67 புள்ளிகளைப் பெற்று எமது மாவட்டத்தில் முதல் இடத்தில் உள்ளது. இதன் மூலம் தென்னிலங்கை மாணவர்களைவிட எமது மாணவர்கள் எவ்வளவு பின்னடைந்துள்ளனர் என்பது புலனாகிறது.

இதேவேளை ஏனைய தமிழ்ப் பிரதேசங்



www.tamileelamarchive.com

# தமிழ் மாணவரின் எதிர்காலம்?

களிலுள்ள, குறிப்பாக யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களின் வினையாற்றுச் சுட்டிகளைப் பார்க்கும்போது அங்கும் வீழ்ச்சிப் போக்கே காணப்படுகின்றது.

இப் புதிய கல்வித் திட்டம் தொடர்பாக கம்பஹா மாவட்டத்தில் கடந்த ஆண்டு பரீட்சார்த்தமாகக் கொண்டுவரப்பட்டு இவ்வாண்டு நாடளாவிய ரீதியில் இது அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எமது மாவட்டத்தில் இத்திட்டத்தை வளப்பற்றாக்குறையினால் அடுத்த ஆண்டே அமுல்படுத்த உள்ளோம் எனத் தெரிவித்தார்.

இப்புதிய கல்வித் திட்டம் தொடர்பாக பாடசாலை ரீதியில் புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய அதிபர் திரு.சிவலிங்கம் அவர்களிடம் வினவினோம். அவர், புதிய கல்வித் திட்டம் வரவேற்கத் தக்கது. ஆனால் இன்று எமது மாணவர்கள் தென்னிலங்கை மாணவர்களுடன் ஒப்பிடும்போது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

தென்னிலங்கையில் இன்ரநெற் என்றும் ஈமெயில் என்றும் உயர் தொழில்நுட்பங்களை மாணவர்கள் அறிந்திருக்கின்றார்கள். அவற்றைப் பயன்படுத்தும் வசதி வாய்ப்புகளும் அவர்களுக்கு உண்டு. ஆனால், எமது மாணவர்களைப் பொறுத்தவரை இவற்றைக் கனவுலகிலேயே காணவேண்டிய நிலையிலுள்ளனர்.

இந் நிலையில் தொழில் நுட்பம், உயர் தொழில்நுட்பம் என்பன இப் புதிய கல்வித் திட்டத்தில் முதன்மையாக இருக்கின்ற போது எமது மாணவர்களுக்கு வளப்பற்றாக்குறை என்பது பெரிதாகவே உள்ளது. எனவே இவற்றுடன் போட்டி போட்டு கற்கவேண்டிய நிலையில் எமது மாணவர்கள் உள்ளனர்.



பரீட்சையைப் பொறுத்தமட்டில் உயர் தரப் பரீட்சையில் தென்னிலங்கை மாணவர்களுடன் போட்டி போட்டு பெறுபேறுகளை எய்துவதில் எதிர்காலத்தில் எமது மாணவர்கள் பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை வரும் என நினைக்கிறேன்.

இதேவேளை நூலகம், ஆய்வுகூடம் என்பன எங்களுக்கு பெரும் பற்றாக்குறையாகவே உள்ளது. இவை கிடைக்காதவிடத்து எமது மாணவர்கள் தென்னிலங்கை மாணவர்களுக்கு ஈடுகொடுத்துக் கற்றல் என்பது ஒரு பெரும் பிரச்சினையே.

மேலும் ஆசிரியர்களுக்கான பயிற்சியும் நேரடியாகக் கிடைத்தாலே அவர்களால் மாணவர்களுக்கு இலகுவாக அவற்றை வழங்க முடியும். அந்நிலையும் எமது மாவட்டத்தைப் பொறுத்தவரை பெரும் குறைபாடாகவே உள்ளது என்றார்.

★★★

இவர்களின் இக்கூற்றுக்கள் கல்வித் திட்டம் முன்னேற்றகரமானது என்பதாக இருப்பினும், தமிழ் மாணவர்கள் இதன் மூலம் நன்மை பெறுவார்களா என்பது ஒரு புறம் இருக்க தென்னிலங்கை மாணவர்களை விட ஒருபடி பின்தங்குவதற்கான வாய்ப்பைக் கொண்டதாகவுள்ளது என்பதையே வெளிப் படுத்தி நிற்கின்றது.

ஆனால் இப் புதிய கல்வித் திட்டத்தை விரும்பியோ விரும்பாமலோ ஏற்கவேண்டிய நிலையிலேயே தமிழ் மாணவர்கள் உள்ளனர் என்பதே யதார்த்தமாகவுள்ளது. அடிப்படை வளங்கள் எதுவுமின்றி பாடசாலைகள் வெளிகளிலும், மரநிழல்களிலும் இயங்கிக் கொண்டிருக்கையிலும் அடிக்கடி நிகழும் இடப் பெயர்வுகளினாலும் தமிழ்மாணவர்களின் கல்வி நிலை சீரழிந்துகொண்டிருக்கையிலும் புதிதாகப் புகுத்தப்படும் இக் கல்வித் திட்டத்திற்கு புதிய வளங்களை எவ்வாறு தேடிக் கொள்ள முடியும்?

ஏற்கெனவே வடக்கு கிழக்கில் கல்வித் திணைக்களத்திற்கான பொருட்களின் ஒரு பகுதி பொருளாதாரத் தடைக்கு உட்பட்டவையாக உட்படுத்தப்பட எஞ்சி வருபவையும் இராணுவக் கெடுபிடிகளினால் வந்து சேருவது முயற்கொம்பாகியுள்ள நிலையில் மேலதிக தேவைகளுடன் கூடிய புதிய கல்வித் திட்டத்திற்கான வளங்கள் எவ்வாறு தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து சேரமுடியும்? கரும்பலகையே காணாத மாணவர்களுக்கு கம்பியூட்டர் எவ்வாறு கிடைக்கமுடியும்?

*சிவகுணபாலன்*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எம் மண்ணில்...



குழந்தைகள் உலகம் குதூகலமும் களிப்பும் நிறைந்தது பூக்களின் மென்மையும் தண்ணீரின் தன்மையும், தேனீக்களின் சுறுசுறுப்பும், மனதைக் கவரும் குறும்புத்தனமும் கொண்டது. எதையும் துருவி ஆராயும் ஆர்வம், அதற்கான ஓயாத தேடல்கள், கண்ணால் காண்பவற்றை உடனுக்குடன் ஆழமாக பதித்துவிடும் மனோபலம், இவை இவ்வுலகின் தனித்துவப் பண்புகள்.

எந்தவொரு சமூகத்தினதும் எதிர்காலம் ஒப்படைக்கப்படுவது இந்த உலகத்தின் கைகளில் தான். எனவே இவ்வுலகத்தின் வளர்ப்பு நிலையில் மிகமுக்கிய கவனம் எடுக்கவேண்டியது இச் சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரின் பணியாகும். நாம் குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கு வாங்கிக் கொடுக்கும் நூல்களைவிட, அவை படிப்பதற்கு உதவும் அனைத்து வசதிகளைவிட, தம் முன்னே நடமாடும் ஒவ்வொரு ஜீவனதும் அசைவுகள், அவைகளின் பேச்சு, செயல்பாடு, அவர்கள் தம்மை அறியாமலேயே வெளிப்படுத்தும் கோபம், வெறுப்பு, குரோதம், ஏளனம் போன்ற பலவீன உணர்வு வெளிப்பாடுகள் ஒரு குழந்தையின் மனத்தை எளிதாக ஆக்கிரமிக்க வல்லன என்பதை நாம் உணரத் தவறிவிடுகின்றோம். குழந்தைகளை வெறும் அந்தஸ்து தரும் தொழில்களை நோக்கியே வழிப்படுத்த முயலும் நாம், எமது சமூகத்தின் தேவை அன்பும், மனித நேயமும், சமூக உணர்வும் மிக்க அறிவுஜீவிகள் தான் என்பதை உணரத் தவறிவிடுகின்றோம்.

ஒரு மனிதனை நல்லவனாக, அன்புள்ளவனாக, மனிதநேயம் மிக்கவனாக வளர்க்கக்கூடிய சிறந்த பருவம் குழந்தைப்பருவம்தான்.

**யுத்தம் தனது கோர வடுக்களை அதிகம் பதித்திருப்பதும், சமூகத்தின் ஒழுக்கச் சீர்கேடுகளின் கண்கள் இந்தப் பிஞ்சு உள்ளங்களின் பக்கம் திரும்பியிருப்பதும், வறுமை, போசாக்கின்மை அதிகம் பலிகொள்வதும் இந்தத் தளிர்களைத்தான்**





www.tamileelamarchive.com

# எம் மண்ணில்...



கள்ளம் கபடமற்ற அந்த சிறு உள்ளத்தில் இயல்பாகவே ஊற்றெடுக்கும் அன்பு ஊற்று அதிகரிக்கவும் நிரந்தரமாக நிலைகொள்ளவும் ஆண், பெண் பேதமின்றி அனைவரும் முயல வேண்டும். மனித நேயத்தை கற்றுக்கொடுக்க வேண்டும். மண்ணை மீட்டெடுக்கும் புனிதப் போரில் இறங்கியிருக்கும் இந்தப் புண்ணிய பூமியை பாதுகாக்கப் போகின்ற இந்தப் பிஞ்சுகளிடம் இச்சமூகம் வேண்டி நிற்பது அன்பையும் மனிதநேயத்தையும்தான். மனித நேயமற்ற அறிவு இச்சமூகத்திற்கு வேண்டவே வேண்டாம். மனித நேயம் என்ற அத்திவாரத்தில் நின்று கொண்டு தனது சமூகத்தில் தேவையை இனங்கண்டு அதற்கேற்ற வகையில் அறிவுத் தேடலை மேற்கொள்வதற்கு உதவும் வகையில் இக்குழந்தைகளை வழிப்படுத்தவேண்டியது இச்சமூகத்தின் ஒவ்வொருவரினது முக்கியமானதும், இன்றியமையாததுமான பணியாகும்.

எமது சமூகத்திற்கு தேவை சமூக நலனுடன் கூடிய அறிவும் ஆளுமையும்தான். அதை கற்றுக் கொடுக்கக்கூடிய சிறந்த பருவம் குழந்தைப் பராயமே.

யுத்தம் தனது கோர வடுக்களை அதிகம் பதித்திருப்பதும், சமூகத்தின் ஒழுக்கச் சீர்கேடுகளின் கண்கள் இந்தப் பிஞ்சு உள்ளங்களின் பக்கம் திரும்பியிருப்பதும், வறுமை, போசாக்கின்மை அதிகம் பலிகொள்வதும் இந்தத் தளிர்களைத்தான்.

ஆனாலும் கூட அடக்குமுறை எமக்கு புதியதல்ல. உயிரிழப்புக்களும் உடமையிழப்புக்களும் எமது வாழும் ஆசையில் மண்ணை அள்ளிப் போடவில்லை. சமூகத்தின் உயிர்ப்பை சாகடிக்கவில்லை. யுத்தம் இதுவரை எம்மில் அடங்கிக்கிடந்த சமூகப்பற்றை, மனிதநேயத்தை வெளிக்கொணர வாய்ப்பு அளித்திருக்கிறதேயன்றி அதை அழித்துவிடவில்லை.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பெண்ணியம்

# ஒரு சமூகத் தேடல்

சந்திரிகா

தேடலும் தெளிவும், போராட்டமும் மாற்றமுமின்றி உலகின் வாழ்வியக்கம் அசைவது சாத்தியமில்லாதது. வாழ்வியலின் தேவைகள் தவிர்க்க முடியாதவை. அந்தத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான தேடலும் அந்த தேடலுக்கூடாக கிடைக்கும் தெளிவும் அந்தத் தெளிவோடு முன்னெடுக்கப்படும் போராட்டமும் தான் இன்றைய நவீன உலகியல் மாற்றங்களின் பிரசவத்திற்குக் காரணமானவை. இந்தவகையில்தான் சமூகத்தின் தேவைகள் பெண்களின் வாழ்விலும் தேடலைத் தூண்டுகிறது. மாற்றத்தை எதிர்பார்க்கிறது. ஆனால் முரண்பாடுகளின் மொத்த வடிவமான பெண்களின் வாழ்வில் மாற்றங்கள் எந்தளவிற்கு சாத்தியமாகப் போகின்றன என்ற கேள்வியுடன்தான் இன்று பலரின் புருவங்களும் உயருகின்றன.

சமூகத்தில் காணப்படும் பெண் ஒடுக்குமுறைக் கருத்துக்கள் எந்தளவிற்கு பிற்போக்கானவையென விளங்கிக்கொள்ளப்பட்ட போதும் தத்தமது வாழ்வின் அன்றாட நடைமுறைகளின் அவற்றை எளிதில் தூக்கியெறிந்துவிட முடியாத அளவுக்கு மனவுலகத் தளைகளால் பிணைக்கப்பட்ட மனிதர்களாகவே ஒவ்வொருவரும் காணப்படுகின்றனர். மனங்கள் மாறவில்லை என்பதற்காக சமூக அசைவியக்கம் நின்றுவிடப்போவதில்லை.

பழைய சமூக அச்சில் வார்க்கப்பட்ட கருத்துக்களும் புதிய தேவைகளும் இங்கேதான் முரண்படுகின்றன. இந்த முரண்பாடுகள்தான் “பெண்ணியம்” சார்ந்த தேடலை ஏற்படுத்துகின்றன.

பரந்த உலகில் பல்வேறுபட்ட






www.tamileelamarchive.com

சமூக அமைப்புகள் விரிந்து காணப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித்துவமானவை. தன்னகத்தே பல நன்மைகளையும், தீமைகளையும், பட்டறிவுகளையும், முரண்பாடுகளையும் கொண்டவை. எனவே தேடல் என்பது அந்தந்த சமூகத்தின் இயல்புக்கு ஏற்றதாக இருக்கும்போதுதான் அதன் தனித்துவங்களும் பிரச்சினைகளும் சரியாக இனங்காணப்படும்.

இன்றைய உலகின் போக்கைத் தீர்மானித்துக்கொண்டிருப்பவை பெரும்பாலும் மேற்குலகின் கருத்தியல் வெளிப்பாடுகளேயாகும். குடியேற்ற காலம் தொட்டு இன்றைய முதலாளித்துவ யுகம்வரை கல்வியும், விளம்பரப்படுத்தலும் மேற்குலகக் கலாச்சாரங்களையே முதன்மைப்படுத்தி வந்திருக்கின்றன. இதனால் எந்தவொரு பிரச்சினைக்குரிய தீர்வுமே மேலைத்தேய சிந்தனைக்கூடாகத்தான் ஆராயப்படுகின்றனவே தவிர குறிப்பிட்ட பிரச்சினைக்குரிய சமூகத்தின் இயல்பில் இருந்து





ஆராயப்படவில்லை. இதனால் தவறான புரிதலும், தேவையற்ற சர்ச்சைகளுமே உருவாகும் சூழல் காணப்படுகிறது. தமிழப் பெண்ணியமும் இப்படி முறையற்ற தேடலுக்குள்ளாகிய காரணத்தால்தான் "பெண்ணியம்" என்ற சொற் பிரயோகமே பெரும்பாலானவர்களால் இன்றும்கூட அலற்சிக்குரிய விடயமாக அலட்சியப்படுத்தப்படுகின்றது.

நடைமுறை வாழ்வின் தேவைகளும் பிரச்சினைகளுமே மாற்றங்களைத் தீர்மானிக்கின்றன. ஆயினும் பெண்களின் பிரச்சினைகளைப் பொறுத்தவரை காலத்திற்குக்காலம் மாறிமாறி வெவ்வேறு வடிவங்களை எடுத்திருக்கின்றனவே தவிர முற்றிலும் தீர்ந்தபாடாக இல்லை. காரணம் அடிப்படைக் கருத்தியல் அப்படியே உள்ளவரை மாற்றங்களால் மட்டுமே ஆரோக்கியமான சமூகம் உருவாகிவிடப் போவதில்லை.

ஆதிகாலப் பொதுவுடமைச் சமுதாய அமைப்பில் பெண்ணின் ஆளுமையை முதன்மைப்படுத்தும் தாய்வழிச் சமூக அமைப்புக்காணப்பட்டது. அதன் பின்னரான வரலாற்றுக் கட்டங்களில் நிலத்தை மனிதன் சொந்தமாக்கிக் கொண்டான். தனி உடமைச் சிந்தனை உருவாகிய போது தன் உடமைகளுக்கான எதிர்கால உரித்துடை வாரிசை உருவாக்கித் தருபவளாக பெண் கணிக்கப்பட்டாள்.

ஆணுடைய உடமைகளில் பெண்ணும் ஒரு உயிருள்ள உடமையாக, சிந்திக்கத் தெரியாத இயந்திரமான வாழ்க்கைக்காக, அவளுக்காகவே தயாரிக்கப்பட்ட பிரத்தியேகமான அச்சில் வார்த்தெடுக்கப்பட்டாள். தன்னைத்தானே உணரமுடியாத கருத்துலக மாயைக்குள்



www.tamileelamarchive.com

சிக்குப்பட்ட பரிதாபப் பிறவியானாள். ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்க முடியாது. இதுதான், இப்படித்தான் என்ற விதிக்கப்பட்ட வாழ்வே விதி என்று எண்ணிக்கொண்டாள்.

மனிதனுடைய எண்ணங்கள் அவனைச் சுற்றியுள்ள கருத்துக்களினால்தான் நெய்யப்படுகின்றன. அந்த வகையில் ஆணாதிக்க சிந்தனைகளால் மட்டுமே உருவாக்கப்பட்ட கருத்துலகம் பெண்ணின் விழிப்புணர்வை, ஆளுமையை எந்த வகையிலும் வெளிப்படுத்தும் என எதிர்பார்க்க முடியாது. பண்டைய இதிகாச புராணங்கள் தொடக்கம் இன்றைய சினிமாவரை பெண் பாலியலின் சின்னமாக மட்டும்தான் வர்ணிக்கப்பட்டாளே தவிர ஆளுமையின் சின்னமாக அல்ல. இன்றைய முதலாளிய உலகின் விளம்பர சாதனங்கள்கூட பெண்களின் அழகான உடலைத்தானே மூலதனமாக்கிப் பணம் சம்பாதிக்கின்றன. இந் நிலையில் பெண்களின் மனிதம் மதிக்கப்படுவதற்கு எங்கே சாத்தியம் இருக்கமுடியும்.

ஒரு இயல்பான சமூக அசைவியக்கத்தால் மாற்றங்களை உருவாக்க முடியுமே தவிர அடிப்படைக் கருத்தியலை உடைத்தெறிய முடியாது. ஆனால் ஒரு புரட்சிகரமான போராட்டத்தினால் அடிப்படைக் கருத்தியலை உடைத்தெறிய முடிவது மட்டுமல்ல புதியதொரு கருத்துலகத்தையும் உருவாக்க முடியும். புற நிலை யதார்த்தங்களால் அகநிலையை நிச்சயமாக மாற்றியமைக்க முடியும். இந்தத் தேடலுக்கூடாகத் தான் தமிழீழப் பெண்ணியத்தையும் ஆராய முற்படுகின்றோம். வெறும் கற்பனாவாதப் பெண்ணியத்தை தூக்கியெறிந்துவிட்டு நடைமுறைக்குச் சாத்தியமாகின்ற வகையில் தமிழீழப் பெண்ணியம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லாமல் தவிக்கின்ற தமிழினம்



ஒட்டுமொத்தமான இனத்தின் பாதுகாப்பையே முதன்மைப்படுத்துகின்றது. சாதி மத பேதங்களுக்கு அப்பாலான தமிழீழத் தேசியத்தை கட்டி எழுப்புகின்றது. இதனால் பெண் ஒடுக்குமுறை காரணிகளான சாதி, மதம், மூடநம்பிக்கைகள், முதலாளியத்தின் ஊதுகுழல்கள் என்பன வலுவிழந்து போகின்ற சூழலில் பெண்மை பற்றிய பழைய விம்பம் உடையத் தொடங்குகின்றது. ஒரு இனத்தின் உயர் விழுமியங்களுடன் புதிய மாற்றங்களும் இணைந்துகொள்கின்றன. பெண்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் புதிய கருத்துலகம் கட்டியெழுப்பப்படுகின்றது.

தமிழீழத்தில் வாழுகின்ற பெண் வெளியே வரவேண்டிய தேவையை இப்போராட்டம் ஏற்படுத்தியுள்ளது. ஒரு இன அழிப்பை மேற்கொள்ளும் எதிரியின் அடக்குமுறைகளால் முழு இனமுமே பாதிக்கப்படுகின்ற போது அவ்வினத்தின் அரைப்பங்கிற்கும் மேலாகவுள்ள பெண்கள் ஆண்களைவிட பாதிக்கப்படுகின்றனர். ஏற்கனவே சமூகத் தளைகளால் கட்டுண்டிருக்கும் பெண் ஆக்கிரமிப்பாளர்களின் பாதிப்பினால் வாழ்வே சூனியமாக்கப்படும் அளவிற்குத் தளர்ந்து போகிறாள். அவளுக்கான பாதுகாப்பை எவராலுமே



www.tamileelamarchive.com

உறுதிப்படுத்தமுடியாமல் போகின்றது. அந்த வேளையில் தானே தன்னைப் பாதுகாக்கவும் தான் தன்னிலேயே சார்ந்து நிற்கவும் தயாராகிறாள். போரால் கணவனை இழந்த பெண் தன் குடும்பச் சுமையை தானே சுமக்கிறாள். நீண்டதூரம் தனியே பயணம் போகிறாள். தனக்குள்ளே சுருண்டு போயிருந்து ஆளுமையை இனங்கண்டு கொள்கிறாள். இந்த நிலையே இயல்பான வாழ்வாகிப் போகின்றபோது ஒவ்வொரு பெற்றோர்களும் தம் குழந்தைகளை அழகுப் பெட்டகமாக ஆளாக்குவதைவிட ஆளுமை, திறனுடன் ஆளாக்குவதே அவளைப் பாதுகாக்கும் என உணருகின்றனர்.

ஆண், பெண் பாலியல் வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதம் இருக்கிறது. அந்த மனிதத்திற்கு என்று இயல்பான ஆளுமை இருக்கின்றது. தமிழீழத்தில் இனங்காணப்பட்ட பெண்ணின் மனித ஆளுமை ஒட்டுமொத்தமான தனது இனத்தின் பாதுகாப்பையும் பொறுப்பேற்றிருக்கின்றது. இது வெறும் கற்பனாவாத புத்தி ஜீவிப் பெண்ணினவாதிகளான சிங்கள பேரினவாத அடிவருடிகளால் ஜீரணிக்க முடியாததாகவே இருக்கும். இவர்களால் ஜீரணிக்கமுடியவில்லை என்பதற்காக உண்மை ஒருபோதும் பொய் ஆகிவிடப்போவதில்லை.

ஒரு சமூக மாற்றம் சட்டென மலர்ந்துவிடுவது சாத்தியமில்லை. அந்த மாற்றம் நடைமுறை வாழ்வியக்கத்தோடு இணைந்து வரும்போது தான் இயல்பானதாக இருக்கும். அந்த இயல்பான மாற்றத்திற்கான சூழல் தமிழீழத்தில் உருவாகிவிட்டது.

எந்தவொரு மாற்றமும் உருவாக வேண்டுமானால் அந்த மாற்றத்தை கொள்கையாகக் கொண்ட தலைமைத்துவம் கட்டாயம் தேவை. அந்த வகையில் சமூக விடுதலையுடன் கூடிய தேச விடுதலையை முன்னெடுக்கும் உயர்வான தலைமையின் வழிகாட்டலில் மாற்றம் நிச்சயமாகச் சாத்தியமாகும். அத்துடந் ஒவ்வொரு பெண்ணும் தன்னளவில் விழிப்படைவதற்கான முன் உதாரணங்களாக பெண் போராளிகளின் ஆளுமை கண்முன்னே விரிந்து கிடக்கிறது.

எனவே பெண்ணின் விடுதலை எப்படிச் சாத்தியமாகப் போகிறது என்ற கேள்விகளுக்கும் அப்பால் தமிழீழப் பெண் தன்னைச் சுற்றிப் பிணைந்துள்ள தளைகளை எல்லாம் உடைத்துக் கொண்டு தலை நிமிர்ந்து கொண்டிருக்கிறாள் என்பதே இன்றைய யதார்த்தம்.



இன்றைய குழந்தைகள்
எதிர்காலத்தில் தமிழீழத்தின் சிற்பிகள்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



சிறுகதை

# கண்ணில் முளைத்த முள்வனம்

பிரகலாத ஹேமந்த்

அம்மா அவனுடைய தலையைத் தடவிக் கொண்டிருந்தாள். அந்த விரல்களிலிருந்து குளிர்மையும் மென்கதகதப்பும் சுரந்து கொண்டிருந்தன. அவள் மிக மெதுவாக அவனின் மனதுக்குள் எதையோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்கக் கேட்க அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது. கண்கள் இருளில் திணறின. மூச்சு முட்டியது. இதயம் உள்ளே கரைந்து ஒழுகியது. எலும்புகள் தளர்ந்து உருகின.

அவன் தன்னை நிலைப்படுத்த எத்தனித்தான். அம்மாவின் கைகளை மெதுவாக விலக்கி, எழுந்திருக்க முயன்றான். ஆனால் அதற்கு மனம் மறுத்தது. அந்தக் கைகளின் குளிர்மையும் கதகதப்பும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவதாக உணர்ந்தான். அவனால், எதுவும் செய்யமுடியவில்லை. அம்மாவின் வார்த்தைகள் அவனை உருக்கிக்கொண்டிருந்தன.

அவன் திண்ணைக் குந்தில் அமர்ந்து கால்களைத் தொங்கவிட்டபடி, சுவரில் சாய்ந்து கொண்டிருந்தான். அம்மா அவனருகே ஒருக்களித்திருந்தாள். அவளிடமிருந்து இதமான வாசனை வெளிப்படுவதாக அவனுக்குத் தோன்றியது. அவள் மகனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனோ கண்களை வெளியே அலையவிட்டபடி தவித்தான்.

ஏன் மகனே பேசாதிருக்கிறாய்?

அவன் பதில் சொல்வதற்கு வார்த்தைகளைத் தேடினான்.

அவளுக்குப் பதில் சொல்வதற்கு தன்னிடம் ஒரு சொல்கூட இல்லாத நிலையைக் கண்டு அவன் அதிர்ந்தான். பதிலாக, ஒரு சொல்லைக் கூட அவனே புதிதாகி சிருஷ்டிக்க வேண்டிய துர்ப்பாக்கியத்தில் தானிருப்பதாகப்பட்டது. பேசுவதற்கு ஒரு வார்த்தையற்ற விதி பெருகிச் சூழ்ந்ததைக் கண்டு மனம் ஓலமிட்டது.

அவனுடைய சருமம் வியர்த்தது. மனம் நடுங்கியது. அம்மா எதையும் உணர்ந்துவிடக்கூடாதே என்று பயந்து எழுந்திருக்க முயன்றான். ஆனால், அவள் தன் நிலையைக் கண்டு விடுவாளோ என்ற எண்ணம் மறுபடி அவனை மின்னலாகத் தாக்கியது. நூறாயிரம் புலிகளால் சூழப்பட்டவன் போலத் திகைத்ததிர்ந்தான்.

"என்னுடைய குரல் உனக்குப் பிடிக்கவில்லையா? அல்லது என்னை நீ வெறுக்கிறாயா? ஏன் மௌனத்துள் ஒளித்துக் கொள்கிறாய்? சொல் மகனே! உன்னுடைய தயக்கங்கள் எதற்காக...?"

அம்மாவின் குரல் காற்றில் வழிந்து அவன் மனதில் படிய மீண்டும் மீண்டும் எத்தனித்தது. அவன் அவற்றை உதறிவிடத் துடித்தான்.

அவள் அவனுடைய தலையைத் திருப்பி தன் முகத்துக்கு நேரே நிறுத்தினாள். அவனுடைய கண்கள் அவளுடைய விழிகளைப் பார்க்கத் தயங்கித் தவித்தன.

தன்னுடைய மனம் நாறி மணப்பதாக அவன் உணர்ந்தான். 'ஐயோ, அம்மாவுக்கு இந்த நாற்றம் மணக்கப் போகிறதே அம்மா இந்த நாற்றத்தால் என்னை வெறுத்து ஒதுக்கிவிடுவாளோ! அதைவிடத் தன்னையே நொந்து நொந்து உக்கிப்போவாளே பிறகு அவள் என்னைத் தீண்டமாட்டாள். துக்கம் பெருகி, அவள் ஒடுங்கிப்போவாள்'

அவனுடைய கால்கள்



www.tamileelamarchive.com

தளர்ந்தன. தாகத்தால் நாக்கு வறண்டது. அவனுடைய குரலை அவனுடைய மனமே உறிஞ்சிக் கொண்டது.

"ஏன் மகனே, எல்லாவற்றையும் வெறுக்கிறாய்? அன்பும் கருணையும் உன்னிலிருந்து எப்படி வற்றிப்போயின? உன்னுடைய விழிகளில் அமைதியில்லையே. வசீகரங்களை இழந்த புதல்வனாக எப்படி நீ மாறினாய்? நீ, என் குழந்தையல்லவா? என்னைத் தவிக்கவிடாதே. நீ என்னுடைய மகன் என்ற அடையாளத்தை மறுக்கின்றாயா? சொல்! உன் வாயில் ஆயிரம் பூட்டுக்கள் ஏன் தொங்குகின்றன?"

அவளின் வார்த்தைகள் அவன் மனதைச் சாடின. 'அம்மா எப்படிச் சவுக்கை கையிலெடுத்தாள் அவள். சவுக்கை எடுப்பவளில்லையே! ஏன் இப்படி என்மனம் வலிக்கிறது? கடவுளே, இது என்ன கொடுமை?' ஆயிரம் சுழிகளில் அகப்பட்ட சருகானான் அவன்.

அம்மாவின் கண்கள் லட்சம் சூரியன்களின் பிரகாசமாக தகித்து ஒளிர்ந்தன. அவளின் சொற்கள் வெள்ளை வெள்ளையாக காற்றில் மிதந்தன. அவன் அவற்றையெல்லாம் கண்டு அஞ்சினான்.

அவளின் கேள்விகளுக்கு பதில் சொல்ல ஒரு சொல் இல்லாத விதி தன்னைச் சூழ்வது எப்படி நேர்ந்தது என்று தெரியாது தடுமாறினான். ஒரு சொல்லைத் தேடியெடுத்தாலும் அது பொய்யால் கனத்தது; இயல்பும் அழகுமின்றி அவனே வெறுக்கும்படியாய் இருந்தது. தான் இருள் பெருகிய குகையுள் நாறி மணக்கும் ஒரு வஸ்து என நம்பினான்.

அம்மாவின் கேள்விகளோ பெருகிக் கொண்டேயிருந்தன.

"என்னுடைய அன்பு மகனே!" அவளுடைய குரல் உடைந்து, துயரம் பரப்பியது. அவள் தொடர்ந்தாள்.

"உன்னுடைய கண்கள் ஏன் கறுத்துப் போயிருக்கின்றன? உன் முகம் ஏன் பிணத்தின் முகத்தைப் போல செத்துக் கிடக்கிறது?

அவன் அவளிலிருந்து விலகி விடுவதாகத் தீர்மானித்தான். மனமோ மறுத்தது. அது அவளின் வருடலுக்காகவும், அவளது கண்களின் பார்வைக்காகவும் தவித்தது.

அவன் பார்வையை வெளியே அலையவிட்டான். தார வானத்தில் புள்ளிகளாய்த் தெரிந்த பட்சிகள் விரைந்து நெருங்கி வந்தன. அவற்றின் நிழல் பூமியில் கோடு விழுத்தி வந்தது. மிக ஆழமான வடுக்களாகக் கோடுகள். அவையோ பெரும் பள்ளமாக நீண்டு கொண்டிருந்தன. புல், பூண்டு, மரம், செடி, பயிர், பச்சை, வீடு, வளவு என்று எல்லாவற்றையும் பிடுங்கி எடுத்துச் செல்லும் நிழலாக அது நீண்டு சென்றது.

அவன் பயந்து அலறினான். குரலை யாரோ களவு கொண்டு போனதாக, அது ஒலிக்கவேயில்லை.

பட்சிகள் வேகமாகப் பறந்து சென்றன. அவை, முகில்களின் கீழாக, விகாரையின் பக்கமாகப் பறந்தன. பட்சிகளின் சிறகசைப்பில் எழும் காற்றில் அரசமிலைகள் உதிர்ந்து பறந்தன; கிளைகள் சுழன்றலைந்தன. விகாரையின் சமீபமாக பட்சிகளின் நிழல் ஆழமாகக் கோடிழுத்துச் சென்றது. அவற்றின் சிறகிரைச்சலில் அவன் அதிர்ந்தான். உயிரை உறிஞ்சும் ஒலியாக அது இரைந்தது.

★★

அதிகாலை சாம்பல் படர்ந்த பனியில் இறைத்திருந்தன ஊர்கள். கள்வர்களைப் போல அவர்கள் பதுங்கிப் பதுங்கி நடந்தார்கள். கால்கள் பீதியில் நடுங்கின. பகைமனமோ பாரமாகிக் கனத்தது.

கட்டளைக்குரல், கலையும் இருளை ஊடறுத்து வந்து உயிரில் படிந்தது. சேனை முன்னேறியது. கூரொளிரும் வாள்களாக மின்னின விழிகள் ஒவ்வொன்றும்.

காலையில் விரிவு, பூக்களின் வாசனை, பட்சிகளின் மென் சப்தங்கள், பனியேந்திய மரங்கள், குளிரில் சில்லிட்டிருந்த தோட்டங்கள்.... எல்லாவற்றையும் சூழ்ந்தன சப்பாத்து அடிகள்.

ஒரு பெரும் வியூகத்துள் சிக்கின கிராமங்கள்.

★★

அந்த ஊரின் மீது படர்ந்திருந்த அமைதியின் மேல் வேட்டு வைத்தான் அவன். எதிரே நின்ற மரத்தின் கிளையில் இருந்து இலைகள் உதிர்ந்தன. இரண்டு புறாக்கள் இறகுதிரக் குருதி சிந்திக் கீழே வீழ்ந்து துடித்தன.

அவன் முன்னேறினான். தூரக்காற்றில் மிதந்து எழுந்தன ஓலக் குரல்கள். ஓலக் குரலை மேவி எழுந்தது வேட்டொலி. தொடர்ந்து சேனை முழங்கியது.

★★

"நில் மகனே! இந்த முற்றத்தில் உன் காலடிகள் என்றைக்கும் அழியாதிருக்கும். உன்னை நான் இந்தப் பாதச் சுவடுகளில் பார்க்கிறேன். இரவுகளில் என் கனவுகளில் இந்தப் பாதச் சித்திரங்கள் உன் முகமாக மலரும். அதுதான் மகனே எனக்கு ஆறுதலைத் தரும் பரிசாகிறது."

அம்மாவின் குரலில் அவன் நெக்குருகி நின்றான். அவள் தேமாமரத்தின் கீழ் உதிர்ந்த மலர்களைப் பொறுக்கிக்க கொண்டிருந்தாள். முற்றம் அமைதியாக இருந்தது. காலை வெய்யில் மணலின் மீது ஒளிக்கோலம் இழைத்துக்கொண்டிருந்தது. அவன் அவளின் மடிச்சூட்டை உணர்ந்தான்.

"புறப்படப் போகின்றாயா மகனே! நீ காலங்களைப் பவுத்திரப்படுத்து. நீ பவுத்திரப்படுத்தும் காலமே உன்னை மகிமைப்படுத்தும். எல்லாவற்றையும் நேசி. நானே எல்லாவற்றிலும் நிறைந்திருப்பதாய் நினைத்துக் கொள். நான் உன் தாயல்லவா!"

அவன் புன்னகைத்தான். அவள் அவனை அணைத்து தலையை வருடினாள்.

அவன் வெளிக்கிடும் போது அவள் வழியைச்



www.tamileelamarchive.com

சுத்தப்படுத்தினாள். துர்க்குறிகள் ஏதும் மகனின் பயணத்தில் தோன்றிவிடக்கூடாது என அவள் துடித்தாள்.

★★

முற்றங்களில் சப்பாத்தடிகள் நிறைந்தன. அவன் தன்னுடைய காலடியைக் கண்டு தானே திடுக்கிட்டான். முள்ளாகப் பரவியிருந்தன அவை. மனம் ஓலமிட்டது. இரத்தம் உறைந்தது.


உறைந்த இரத்தத்தின் மீது விழுந்தது. சவுக்கின் சொடுக்களாய் கட்டளைக் குரல். அவன் தடுமாறினான். கால்கள் முன்னேறின. மனமோ தயங்கியது.

பூக்கள் உதிர்ந்திருந்தன. பூமரங்கள் சிதறி ஒரு அகாலமாய் விரிந்திருந்தது முற்றம்.

பூட்டி கதவுகள் உடைபடும் ஒலி. அவன் மனதை யாரோ உடைத்தார்கள். பொருட்களைச் சூறையாடினார்கள். அவனின் இதயத்தை இரத்தம் ஒழுக ஒழுக யாரோ பிடுங்கி எறிந்தார்கள்.

"காலமே, என்னை நிந்திக்காதே...!" அவன் கூவினான். மனம் பதைபதைத்தது. கட்டளைக் குரல் சவுக்காய் வலியை எழுப்பியது. சேனை முன்னேறியது.

திடீரென முற்றத்தில் உதிர்ந்திருந்த பச்சை இலைச் சிதறல்களின் கீழ் இருந்து சிரிப்பொலி



கேட்டது.

அவன் திடுக்குற்று, ஆச்சரியத்துடன் திரும்பிப்பார்த்தான்.


சிதைந்து தூளாகிக் கிடந்த இலைகளின் சிதைவுகளிடை ஒரு முகம் தெரிந்தது. அது பொம்மையின் முகம். ஒரு குழந்தையின் கனவுகளைப் பிரதிபலிக்கும் முகம். அவன் மெல்ல நடந்து அதை நெருங்கினான். கண்கள் அந்த முகத்தை ஊடுருவின. மனம் எச்சரிக்கையடைந்தது.

"வா, படையனே! ஆ...கவனம், கவனம்.... ஆ.... அந்தக் காலடிகளை மிதித்து விடாதே. அது என் தோழனுடையது. இந்தப் பாதச் சுவடுகளில் நான் என் மனிதர்களின் முகங்களைப் பார்க்கிறேன். என் கனவுகளில் இந்தப் பாதச் சித்திரங்கள் அவர்களின் வாழ்வை விரிக்கும். அவையே எனக்கு ஆறுதலைத் தரும் பொக்கிஷங்களாகின்றன. எனவே, அப்படியே நில். நான் சொல்வதைக் கேள்...." என்றது அந்த முகம் குழந்தைக் குரலில்.

"யார் நீ? கட்டளைகளால் என்னைத் தடுக்கவும், அசைக்கவும் உனக்கென்ன உரிமை இருக்கு? என்னைத் தடுக்க எங்கிருந்து



எதிரியின் வரவை எதிர்பார்க்கும் புலிவீரன்.



தாக்குதலிற்குத் தயாராகும் புலிவீராங்கனைகள்



www.tamileelamarchive.com

உனக்குத் துணிவு பிறந்தது?"


குரல் நடுங்கியபோதும் ஆக்ரோஷமாக ஒலித்தது. அவனுக்கு மூச்சிரைத்தது. சக்கையாக உதிர்ந்திருந்த இலைகள், அவன் மூச்சுக் காற்றில் சுழன்று பறந்தன.

பொம்மை சிரித்தது.

"நல்லாய்த்தானிருக்கிறது, வேடிக்கை. உன்னை நான் இலகுவாக அடையாளம் கண்டுகொண்டேன், பார்த்தாயா? உன்னுடைய வருகையே உன் முகத்தைக் காட்டிற்று. எனது மனிதரின் பதைப்பே உன் ஞாபகத்தை உணர்த்தியது. அந்த மனிதர்களின் கனவுகளும் , நிஜமும் கணத்தில் சிதையும் போதே நானுன் முகத்தை கண்டேன். நான் இந்த முற்றத்தின் குழந்தை. என் மனிதர்கள் விட்டுச் சென்ற உறவின் துளிர் நான். அந்த மனிதர்களின் வாழ்வின் அடையாளம் நான். இக்கணமோ அவர்கள் துயரின் முகமாய் இருக்கிறேன். நீயோ கேட்கின்றாய்.... யார் என்று என்னை......."

"பேசாதே நிறுத்து. யார் நீ? நேரடியாகச் சொல்! " அதட்டினான் அவன்.

"மிரளாதே! உன்னுடைய பதைப்பே உன்னை இப்படி கொதிக்கவைக்கிறது. நீ யாரென்று உனக்குத் தெரியுமா? உன் முகம் என்ன?



உனது வருகையின் பொருள் என்ன? நீயோ வெளியான். சிதைந்திருக்கும் இந்த முற்றத்தைப் பார். அச்சிதைவில் உன் முகம் தெரியும். தவிக்கும் என் ஆன்மாவின் குரலைக் கேள். அதில் நான் யாரென்பதைப் புரிந்துகொள்வாய்".

"எனக்கு இதுபற்றி எல்லாம் அக்கறை இல்லை. நான் என் கடமையைச் செய்கிறேன். அவ்வளவுதான் நீ குறுக்கிடாதே. உன்னைக் கொன்றுவிடும் அதிகாரம் எனக்குண்டு."

பொம்மை சிரித்தது. அதன் குழந்தை முகம் பிரகாசித்தது. சோகம் ததும்பிய புன்னகையின் ஒளி அவனை உலுப்பியது. அவனோ தன்னை இறுக்கிக் கொள்ள முயன்றான். இன்னும் அங்கே தாமதிக்க விரும்பவில்லை. நடக்க முயன்றான்.

"நில்" என்று பொம்மை தடுத்தது. "கடமையா? எது உன் கடமையெனக் கருதுகிறாய்? ஒரு செயலின் விளைவு பயக்கும் நன்மை தீமை பற்றி நீ எண்ணவில்லையா?"

"அதுபற்றி யோசிக்க இப்போது தருணம் அல்ல. எனக்கான கட்டளைக் குரல் சொல்கிறது. இது





பதுங்கித்தாக்குதலில் புலிவீரன்



www.tamileelamarchive.com

என் கடமை என்று. விகாரையில் என் குருவும் சொன்னார் இது என் கடமையென்று"

இனியும் தாமதிக்கக் கூடாது என்று அங்கிருந்து அகல்வதற்கு அவன் முயன்றான். எங்கும் சப்பாத்தடிகள் முள்ளாய்ச் சிலிர்த்தன.

"ஓடாதே, ஒரு கோழையாக உன்னை நிரூபித்துச் செல்கிறாய்" பொம்மையின் குழந்தைக் குரல் சிரிப்புடன் கீச்சிட்டொலித்தது.

அவன் கொந்தளித்தான். கண்கள் தகித்தன. இந்தச் சிறுபொம்மைக்கு அஞ்சுவதா? என் மனதுக்கு என்னவாயிற்று? வானத்தின் மையத்தில் சூரியன் எரிந்தது. முறிந்த மரங்கள் வாடின. சேனை புழுதியைக் கிளப்பியபடி முன்னேறிக்கொண்டிருந்தது. குருதி மணத்தது. அவலக்குரல்கள் காற்றில் பரவின. எல்லாவற்றையும் மீறி கட்டளைக் குரல் ஒலித்தது.

அவனுக்கு குந்தியிருக்கவேண்டும்போல் இருந்தது. உடல் தளர்ந்தது. அவன் தள்ளாடியவாறு நின்றான். ஒரு பாறையைப் போல இறுகினான்.

"என்ன மௌனமாய் இருக்கிறாய்?" பொம்மை அவனைக் குடைந்தது.

"ஒரு வாழ்வைக் கொன்று உன் வாழ்வைப் பெருக்கலாம் என்று நினைக்கின்றாயா? உண்மையில் நீ உன் வாழ்வையே இழக்கிறாய். இன்னொரு வாழ்வையும் அழிக்கிறாய்"

"அப்படியென்றால்....."

"அழிவின் புதல்வனாகவே நீ உன்னை ஆக்கி வைத்திருக்கிறாய். உனக்குத் தெரியுமா இந்த முற்றத்தில் எத்தனை பூக்கள் மலர்ந்தன என்று. இந்தப் பூக்களில் எத்தனை கனவுகள் விளைந்தனவென்று. என்னைப் பார்! நான் ஒரு பொம்மை அல்ல, உயிர்ப்புடன் இருந்த ஒரு ஆன்மாவின் வடிவம்தான் நான். இந்த முற்றத்தில் உலவித் திரிந்த மனிதர்களுடன் நானும் உலவித் திரிந்தேன். அந்தக் குழந்தைகளின் மகிழ்வில் நானும் மகிழ்ந்தேன். அவர்களின் கனவுகளுக்கு நான் வர்ணங்கள் சேர்த்தேன். அந்தக் குரல்களில் என்னைக் கரைத்தேன். இன்று அவை எல்லாவற்றையும் சிதைத்து விட்டாய். ஒரு கணத்தில், உன் வருகை சம்பவித்த அந்தப் போதில், இந்த முற்றம் அகாலமாயிற்று. தங்கள் வாழ்வின் கோலமோ சிதைந்ததென்று விம்மினார்கள் என் மனிதர்கள். தம் கனவுகளை எல்லாம் இழந்து தெரு வழியே ஓலமிட்டவாறு அநாதைகளைப் போல அவர்கள் ஓடினார்கள். நான் தனித்தேன். வெறும் பொம்மையாகித் தனித்தேன்".

அதன் குரல் விம்மியது. அவன் மனதில் அது சன்னமாய் இறங்கியது.

"நீ என்னை ஏமாற்ற முனைகிறாய். இனியும் வாய்



திறவாதே! நான் என் கடமையைச் செய்வேன். என்மீது ஒப்படைக்கப்பட்டிருக்கும் கடமைகளுக்கு நானே பொறுப்பாளி. பலனைத் தீர்மானிப்பது நானல்ல. என் கடமைக்கு நான் நம்பிக்கை உள்ளவனாய் இருப்பேன்".

அவன் கர்ஜித்தான். குதித்தெழுந்து தோள்களைக் குலுக்கிக் கொண்டான். ஒரு வீரனுக்குரிய மிடுக்கை ஏற்றிவிட எத்தனித்தான்.

பொம்மை மறுபடியும் சிரித்தது. அந்தச் சிரிப்பில் கேலியும் இரக்கமும் தொனித்தன.

"படையினனே, கொஞ்சம் நிதானி. உன் நம்பிக்கையோ குருடானது. அது இருளடர்ந்த கண். உன்மீது எனக்கு அளவற்ற இரக்கம் மேலிடுகிறது. ஆனால், நீயோ மன்னிக்க முடியாதவனாகிறாய்."

"வாயைப் பொத்து. இனி உன் குரல் கேட்குமென்றால், சல்லடையாக்கி விடுவேன் உன்னை. நீ என் எதிரி"

அவன் கத்தினான். ஆனால், உள் மனமோ கட்டுப்படுத்த முடியாதளவுக்கு 'பேதையானவன் நீ' என்று அவனைப் பார்த்து ஓலமிட்டது.

"பதறாதே படையினா! உன்னை உன்னால் என்னை வெல்லலவே முடியாது"

"நான் வலியவன். உன்னை என்னவுஞ் செய்வேன்"

"உன் மனம் நாறுகிறதே!"

அவன் திடுக்கிட்டான். அம்மாவின் முன்னால், அவளுக்குத் தன் நாறிய மனதின் நாற்றத்தை மறைக்கத் தவித்தது நினைவில் முட்டியது. எரிச்சலும் பீதியும் அவனை அரித்தன.

"என்னை நீ பயமுறுத்துகிறாய்"

"இல்லை, நான் கோழைகளை இம்சிப்பதில்லை"

"நானா கோழையென்கிறாய்? அவன் தடுமாறினான்.

"உன்னுடைய அம்மாவிடம் நீ பேசுவதற்கு வார்த்தைகளற்றுத் தவித்தாயே. அவள் விழிகளைப் பார்ப்பதற்கு அஞ்சினாயே"

மிக அமைதியாகப் பதில் சொன்னது பொம்மை. அவன் திகைத்துறைந்தான். பொம்மை தொடர்ந்தது.

"உன் அம்மாவிடம் நீ இழந்த துணிவை நான் பெற்றேன். உன்னிடமிருந்து, ஆகவே உன்னிடமிருந்தே நான் வலிமையும் திராணியுமடைந்தேன்."

பொம்மையின் குரல் காற்றில் சுழன்று சுழன்று எதிரொலித்தது. அவன் கால்கள் நடுங்கின. கைகள் தளர்ந்தன. விழிகள் திரைந்தன. மனமோ அந்தரித்தது. சேனைகள் சிதைந்து பின்வாங்கின.

★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"ஐயோ! கட்டளைகள் என்னைச் சிறைப்படுத்தினவே. கட்டளைகளே என்னை அநாதையாக்கின. நான் என் மனதைச் சாகடித்தேன். அது நாறி மணக்க மணக்க கட்டளைகளுக்கு என் காதுகளைத் தாரை வார்த்தேனே!

அவன் புலம்பினான். சொற்கள் காற்றில் அமிழ்ந்தமிழ்ந்து வெளிவந்தன.

★★

அம்மா அவனைப் பார்த்து கூவினாள்.

"மகனே! நீ பாவங்களால் ஆசீர்வதிக்கப்பட்டவனா? உன் முகம் இன்னும் பிணத்தின் முகமாக விறைத்துக் கிடக்கிறதே! உன் மனம் நாறுகிறதே! இது என்ன கொடுமை கடவுளே....!"

அவன் அழுதான். தேம்பித் தேம்பி அழுதான். அவளின் முகம் பார்க்கத் திராணியற்று விம்மினான். மனம் ஓலமிட்டது.

"நீ என்னுடைய புதல்வனாக ஈரமில்லாத உன் குரல், இரக்கமில்லாத உன் பார்வை, அன்பு மலராத உன் புன்னகை, பேசச் சொல்லற்ற உன் விதி, வன்மம் கொண்ட உன் நெஞ்சு, நாற்றமெடுக்கும் மனம்... ஐயோ, இப்படியெல்லாம் நேர்ந்து விட நீ ஏன் பலியாகினாய்?

★★

அந்தப் பாதையில் ஒரு பூனையை விரட்டிக் கொண்டு இரண்டு நாய்கள் குறுக்கே பாய்ந்தன. வீதியில் ஒரு பிச்சைக்காரன் கால்களை இழுத்திழுத்துச் சென்றுகொண்டிருந்தான். முற்றத்தில் தேமாமலர்கள் உதிர்ந்திருந்தன. சூரியன் சரிந்து இருள் படர்ந்து கொண்டிருந்தது. அம்மா எல்லாவற்றையும் பார்த்தபடி செயலற்றுக் கிடந்தாள்.

★★

அவனுடைய கண்களுக்குள்ளிருந்து முள் முளைத்துச் சடைத்தது. பிறகு அது காற்றில் உதிர்ந்து பரவி முள்வனமாகியது.

குழந்தைகள் முள் வனத்தின் முன் அழுதபடி நின்றார்கள்.

■■■

# நிலைமை விளக்கம்

கே.பி.றெஜி

மழைக்கும், காற்றுக்கும்
நாணல் புற்கள் அசைந்து கொடுத்தன
நானோ ஆலமரம் அப்படியே நின்றேன்
நாணல் புற்கள் நகைக்கும் என்பதற்காகவே
நான் அசையவில்லை
அசைந்தாலும் பெரும் ஓசையுடன்
- புலிவீரன்

அந்தியில் நிலவு அழகு பார்க்கிறது
ஆழ்ந்த துயிலில் இருப்பவரை
ஓட்டை குடிசையினுள் உறவு
வட்ட நிலா குட்டைக்குள்
வாயடங்கிப் போக
முற்றத்திலே அலங்கரிப்பு
- உள்ளூராட்சி தேர்தல்

கொய்யா மரத்தில்
குருவிச்சை துளிர்கிறது
-மாற்றுக்குழுக்கள்
மந்திகள் தாவித்திரிகின்றன
மரங்களை மறந்து
- ஆட்சி நடக்கின்றது

அறுவடைகள் அமோகம்
ஆனால் களைகளாக
- மக்களுக்கு அபிவிருத்தி

ஆரிய குளத்துக்கள்
சல்பீனியா வளர்கின்றது
- யாழில் இராணுவ நிர்வாகம்

போறணைக்குள் ஏசி காற்றாம்
போர்மூலம் சமாதானம்
ஓட்சிசன் இன்றி விண்வெளி பயணம்
- ஜெயசிக்குறு நடவடிக்கை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




முழுகிவிட்டு வெய்யிலில் நின்று ஈரத்தலையை நீவிவிட்டுக் கொண்டிருந்த அக்காவை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். இன்றைக்கு அவளின் முகம் தெளிவாய் இருந்தது.

ஒரு மாதமாய் எல்லோரையும் என்ன பாடுபடுத்திவிட்டாள். அந்த ஒரு மாதமும் சாப்பிட முடியாமல் நித்திரை கொள்ள இயலாமல் பட்ட வேதனை....

இப்போது அக்காவுக்கு சுகமாகிவிட்டது. பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழவேண்டிய நிர்ப்பந்தத்தினால் ஏற்பட்ட தாங்க முடியாத கவலையினால்தான் அக்காவின் மனநிலை தவறிப்போனதோ?

அக்கா, நான், தம்பி ஆக மூன்று பேரையும் விட்டுவிட்டு பத்து வருடங்களுக்கு முன் கிளிநொச்சியில் நடந்த 'ஷெல்' அடியில் அம்மா பலியாகி விட்டிருந்தாள்.

அதன் பின் இந்த அப்பாவுடன் இருந்து நாங்கள் படுகின்ற பாடு.....

விடிந்தால் பொழுதுபடும் வரை அப்பா செய்கின்ற அட்டகாசங்களைப் பார்த்தே எங்களுக்கு வாழ்க்கை வெறுத்துப் போய்விட்டது.

அம்மா எப்படித்தான் இவருடன் வாழ்ந்தாளோ....? இவரிடம் அம்மா எத்தனை அடி உதைகள் வாங்கியிருக்கிறாள். எந்நேரமும் அழுது கொண்டிருக்கும் அம்மாவின் முகம்தான் மனதின் ஆழத்தில் பதிந்து போயிருக்கின்றது.

அப்பா அடிப்பதையும் அம்மா அழுவதையுமே பார்த்து வளர்ந்தவர்கள் நாங்கள். அம்மா போன பின் அக்கா தான் வீட்டின் எல்லாச் சுமைகளையும் ஏற்றுக்கொண்டாள்.

விடியும் போதே யோசனை தொடங்கிவிடும். இன்றைக்கு என்ன சமைப்பது என்று, எத்தனை நாட்கள் சோறும் முருங்கை இலை வறையும் சாப்பிட்டிருக்கிறோம்.

அப்பா எடுக்கின்ற மூவாயிரம் ரூபா பென்ஷனில் வீட்டுக்காக செலவழிப்பது கொஞ்சம்தான். தான் குடிப்பதும் கடையில் சாப்பிடுவதுமாக அத்தனையையும் செலவழித்துவிட்டு அக்காவிடம் காசு தா என்று சண்டை பிடிப்பார். அக்கா வீட்டில் இருந்து படியே ஆட்களுக்கு சட்டைகள் தைத்துக் கொடுக்கிறாள்.

பதினெட்டு வயது தம்பி கடைச்சல் பட்டறையில் வேலை செய்கிறான். அந்த முதலாளியிடம் தம்பியின் சம்பளத்தை அப்பா கொஞ்சம் வாங்கிவிடுவார். இனிமேல் அப்பாவுக்கு காசு கொடுக்கக்கூடாது என்று முதலாளியிடம் அவன் சொல்லிவிட்டான்.

அன்று வந்து கோபத்துடன் அவனுக்கு அடித்த அடி.... தடுக்கப் போன அக்காவுக்கும் அடி விழுந்தது.

அன்று எல்லோரும் அழுது கொண்டிருந்தோம். எல்லோர் மாதிரியும் இல்லாமல் எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு அப்பா கிடைத்தார்.... இப்படி சுயநலமாய் இருக்க அப்பாவினால் எப்படி முடிகிறது....

அதுவும் இப்போது இடம்பெயர்ந்த நிலையில் ஏற்பட்ட கஷ்டங்களில் எங்கள் வாழ்க்கை இன்னமும் நெருக்குதல்களுக்கு உள்ளாகிய நேரத்தில்....

வீட்டு நிலைமை பற்றி அக்காதான் எந்த நேரமும் யோசித்துக் கொண்டேயிருப்பாள். கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள். இதே கவலையில்தான் அவள் சுய சிந்தனை இழந்திருக்க வேண்டும்.

நான் கண்கள் கலங்க அக்காவைப் பார்த்தேன். தலைமயிரை நீவி விட்டுக் கொண்டிருக்கும் அக்கா எப்போது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வித்தியாசமாய் நடக்கத் தொடங்கினாள் என்று யோசித்துப் பார்த்தபோது உள்ளம் சிலிர்த்தது.

ஒரு மாதத்திற்கு முன் ஒரு பின்னேரம் அக்கா தையல் மெஷினில் தைத்துக் கொண்டிருந்தாள்.

அப்பா வந்து "எனக்கு அவசரமாய் காசு தேவையாக் கிடக்கு ஒரு நூறு ரூபா தா" என்றார்.

'என்னட்டை காசு இல்லை'

அக்கா சொல்லிவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தாள்.

அப்பா பாய்ந்து வந்து அக்காவின் தலைமயிரைப் பிடித்து மரக்கப்புடன் மோதினார்.

"என்னடி காசு கேட்டால் இல்லையெண்டு சொல்லுறாய்" அக்காவை ஒருபுறமாக தள்ளிவிட்டு உள்ளே போய் பெட்டிக்குள் அக்கா வைத்திருந்த நூற்றைம்பது ரூபாவையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

அக்கா தலையைப் பிடித்துக்கொண்டு அழத் தொடங்கினாள்.

"ஏனக்கா.... நீ காசை ஒளித்து வைச்சிருக்கலாமே" என்றேன் கோபத்தோடு.

படக்கென்று தலை உயர்த்தி என்னை உறுத்துப் பார்த்தாள். கண்கள் கலங்கியிருக்க அவள் பார்த்த தீவிரத்தில் நான் திடுக்கிட்டுப் போனேன்.

"இந்த மனிசன் எங்களை ஒருநாளும் நிம்மதியாய் இருக்க விடப்போறதில்லையடி" என்றாள். விறு விறுவென்று உள்ளே போய் படுத்துவிட்டாள். நடு இரவில் திடுக்கென்று எழுந்து அமர்ந்தாள். எழுந்து வெளியே போனாள்.

அக்கா... அக்கா என்று கூப்பிட்டால் பதில் இல்லை. கலவரத்துடன் நான் பின்னால் தொடர்ந்து போக தனக்குள் ஏதேதோ கதைத்துக்கொண்டு தென்னை மரத்தில் ஓங்கி அறைந்துகொண்டிருந்தாள்.

நான் பதறிப்போய் தம்பியை எழுப்பி விஷயத்தைச் சொல்ல அவன்தான் போய் அக்காவை ஒரு வழியாய் வீட்டுக்குள் கூட்டி வந்தான். அன்றிலிருந்து அக்காவின் நிலை மாறிவிட்டது.

நிலை குத்திய பார்வை. எதுவுமே கதைப்பதில்லை. திடுமென்று எழுந்து ஓடுவாள். பிடிப்பதற்குள் நாங்கள் களைத்துவிடுவோம்.

நீ ஏனக்கா இப்படி இருக்கிறாய் என்று கேட்டு நாங்கள் அழுதால் கூட அவளால் உணர முடியாதிருந்தது.

இதுதான் பெரிய அவலம்.

அக்கராயன் ஆஸ்பத்திரியில் அக்காவைச் சேர்த்தோம். அவளில் திடீரென ஒரு மூர்க்கம் குடிகொண்டது. மருந்துகள் குடிக்க மாட்டேன் என்று அடம் பிடித்தாள். குளிசைகளை வாங்கி வீசி எறிந்தாள். திடீர் திடீரென்று வார்ட்டுக்கு வெளியே ஓடுவாள். இரவு பகலாய் நான்தான்




அவளுடன் கூடவே நின்றேன்.

சாமத்தில் அக்கா எங்கேயாவது ஓடி விடுவாளோ என்ற பயத்தில் இரவு முழுக்க விழித்துக் கொண்டே இருப்பேன். அம்மாவுக்கு சமமாய் இருக்கின்ற அக்காவின் நிலையை என்னால் தாங்கமுடியவில்லை.

எல்லாவற்றிற்கும் அப்பாதானே காரணம் என்று அவர் மீது தான் கோபம் வந்தது. அவர் சரியாய் இருந்தால் அக்காவுக்கு இந்த நிலை வந்திருக்க மாட்டாது.

தம்பி வேலைக்கும் போகாமல் வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்குமாய் ஓடிக்கொண்டிருந்தான்.

ஒரு மாதத்தில் அக்கா கொஞ்சம் கொஞ்சமாய் சுகமாகி வந்தாள். வெறித்த பார்வை மறைந்து கண்களில் சோர்வு தெரிந்தது. ஆட்களை அடையாளம் கண்டு பேசமுயன்றாள். சில நேரங்களில் தலை மெலிதாய் சிரித்தாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. இப்போது அக்கா பழைய மாதிரியே இருக்கிறாள். குளிசைகள் குடிக்கும் நேரங்களில் மட்டும் முகம் சுளிப்பாள். ஆனால் நான் கவனமாய் இருந்து குளிசைகளை குடிக்க வைத்துவிடுவேன்.

அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ள ஆட்கள் அக்காவை அனுதாபத்தோடு பார்க்கும் போதெல்லாம் மனம் பதறிக் கொள்ளும். "மூளை சுகமில்லாமல் இருந்து பிறகு என்னதான் மாறினாலும் நாளைக்கு ஆர் கலியாணம் கட்டப்போகிறான்" என்று சொன்ன எதிர் வீட்டு ஆச்சிக்கு தம்பி நல்ல ஏச்சுக்கொடுத்து அனுப்பிவிட்டான். ஊர் சொன்னால் என்ன சொல்லாவிட்டால் என்ன அக்காவின் எதிர்காலம் கேள்விக்குறியாகத்தான் இருக்கப்போகிறது.... இந்த நினைவு பயங்கரமாய் எங்கள் நெஞ்சை அழுத்துகிறது. ஏற்கனவே வீட்டில் பசியும் பட்டினியும்.... அத்தோடு இந்த நிலையும் சேர்ந்தால்....

இருபத்தாறு வயதிலேயே அக்காவைப் பார்த்தால் முப்பது வயது ஆனவளைப் போலத் தெரிகிறாள். கண்களின் அடியில் நிரந்தரமாய் தங்கிவிட்ட கவலைகளின் வரிகள்.... அக்காவை பார்க்கும் போதெல்லாம் மனம் பதைபதைக்கிறது.

மேலும் ஒரு வாரம் போனது. இப்போது அக்கா மறுபடி தைக்கத் தொடங்கிவிட்டாள். இடையே தான் இருந்த நிலைமைபற்றிய சிந்தனையும் இல்லாமல் இயல்பாக இருக்கிறாள்.

தம்பி அப்பாவுடன் முகம் கொடுத்துக் கதைப்பதில்லை.

ஏனோ கொஞ்ச நாளாய் பேசாமல் இருந்த அப்பா மறுபடியும் தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினார். தம்பியிடம் காசு கேட்கப்பயம். அதனால் அக்காவிடம் வந்து "காசு தா... நான் பிறகு தாறன்" என்றார்.

அக்கா கேட்காதது போல முகத்தைத் திருப்பிக்கொள்ள "என்னடி முகத்தைத் திருப்பிறாய்"



www.tamileelamarchive.com

என்று அவள் தலைமயிரைப் பிடித்தார்.

நான் போய் அப்பாவைப் பிடித்து இழுத்தேன்.... "வேண்டாம் அப்பா. பாவம் அக்காவுக்கு அடிக்காதேங்கோ...."

"போடி அங்கால"

என்னைத் தள்ளிவிட்டு "நீங்கள் எல்லாம் பெரிய ஆட்களாய் விட்டீர்கள். தகப்பன் எண்ட மரியாதையில்லை உங்களுக்கு...." என்று கத்திவிட்டு விறுவிறுவென்று வெளியேறிப் போனார்.

அக்கா மெலிதாய் அழத் தொடங்கினாள்.

இந்த மனிசன் எங்களை ஒருநாளும்... ஒருநாளும் நிம்மதியாய் இருக்கவிடப்போறதில்லையடி"

அவளின் வார்த்தைகளைக் கேட்டதும் எனக்கு 'பகீர்' என்றது. அக்காவின் மனநிலை தவறியதற்குரிய காரணங்கள் இன்னமும் தீர்ந்து போய்விடவில்லை.

மீண்டும் 'அந்த' நிலை அக்காவுக்கு ஏற்பட்டு விடுமோ என்ற கலக்கம் அந்த விநாடியில் ஏற்பட்டது.



இரவு ஏழு மணிக்கு சாப்பிடாமல் அக்கா படுத்துவிட்டாள். பத்து நிமிடத்தால் திடுக்கென்று எழுந்து அமர்ந்தாள்.

நான் பயத்துடன் வாசல் பக்கத்திலேயே அமர்ந்திருந்தேன். ஏனோ அழுகை அழுகையாய் வந்தது. ஏழரை மணிக்கு தம்பி வேலை முடித்து வந்தான். அவனைக் கண்டதும் வெடித்துக் கொண்டி அழுதேன்.

நான் அழுவதையும் அக்காவின் முகத்தையும் பார்த்துவிட்டு ஒரு வினாடி விறைத்துப் போய் நின்றான். என்ன நடந்திருக்கும் என்பது அவனுக்கு புரிந்திருக்கக்கூடும். ஒரு நிமிடம் எங்கள் இருவரையும் மாறிமாறி பார்த்துக்கொண்டு நின்றான்.

"எங்களுக்கு எங்கட அக்காதான் முக்கியம். ஒன்று அப்பா திருந்த வேணும் அல்லது வீட்டைவிட்டு வெளிக்கிட்டு போயிடவேணும். இண்டைக்கு வரட்டும்."

உரத்த குரலில் சொல்லிவிட்டு வாசல் திண்ணையில் தெருவைப் பார்த்து அமர்ந்து கொண்டான்.

ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்று எனக்கு தெளிவாய் தெரிந்தது. ▣

## 16 ஆண்டுகள் கடந்தபோதும் எம் நினைவில்




**லெப்.செல்லக்கிளி**

புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான இவர் புகழ்பெற்ற திருநெல்வேலித் தாக்குதலில் வீரச்சாவை அணைத்துக்கொண்டவர்.

**லெப். சீலன்**

ஆரம்பகாலந்தொட்டு இயக்க வளர்ச்சிக்காக தலைவருக்கு உறுதுணையாக இருந்த சீலன் புலிகளின் தாக்குதற் படையணியின் முதலாவது தளபதி யாவார். மீசாலையில் சிங்களப் படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் தன்னைச் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு புலிகளின் வீர மரபு ஒன்றிற்கு வித்திட்டு வீரச்சாவடைந்தார்.

**ஆனந்த்**

விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினரான ஆனந்த் மீசாலையில் சிங்களப்படையினரின் முற்றுகையில் காயப்பட்டு தப்பமுடியாத நிலையில் மூத்த தளபதி சீலனின் வழியில் தன்னையும் சுட்டுவிட்டு ஆயுதத்தோடு தப்பும்படி சக தோழனுக்கு கட்டளையிட்டு புலிகளின் வீர மரபினை பின்பற்றி வீரச்சாவடைந்தார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் 0181 646 2885

www.tamileelamarchive.com